# எனக்கு மட்டுமே தெரிந்த

# எம்ஜி ஆர்

ஜானகி எம்ஜி ஆர்



தாய்

முனைவர்
குமார் ராஜேந்திரன்

# எனக்கு மட்டுமே தெரிந்த

# எம்ஜிஆர்

ஜானகி எம்ஜிஆர்

பதிப்பாசிரியர்

முனைவர் குமார் ராஜேந்திரன்

தாய்


தாய் வெளியீடு

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | எனக்கு மட்டுமே தெரிந்த எம்ஜிஆர் ஜானகி எம்ஜிஆர் |
| ஆசிரியர் | : | முனைவர் குமார் ராஜேந்திரன் |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | செப்டம்பர் 2021 |
| நூல் அளவு | : | டெம்மி 1/8 |
| பக்கங்கள் | : | 152 |
| படிகள் | : | 1000 |
| வெளியீடு | : | தாய் வெளியீடு<br>சத்யபாமா எம்.ஜி.ஆர் மாளிகை<br>11, 13 துர்காபாய் தேஷ்முக் சாலை,<br>ராஜா அண்ணாமலைபுரம்,<br>சென்னை 600 028.<br>தொ.பேசி: 9840033802<br>மின்னஞ்சல் : me@kumarrajendran.in |
| வடிவமைப்பு | : | ஐ ஃப்ளஸ் கிரியேசன்ஸ். |
| புகைப்படங்கள் உதவி | : | ஞானம். |
| விலை | : | ரூ.100/- |
| © உரிமை | : | பதிப்பாசிரியருக்கு. |



குறிப்பு : புத்தகத்தில் இடம் பெற்ற கட்டுரைகளையோ, புகைப்படங்களையோ முன் அனுமதியின்றி யாரும் பயன்படுத்தக்கூடாது, நூல் விமர்சனங்களைத் தவிர.



என்றும் நினைவில் வாழும்
ஜானகி அம்மையாருக்கு
சமர்ப்பணம்



## நன்றி

முனைவர் லதா ராஜேந்திரன்

திரு. J. சுரேந்திரன்

திருமதி. S. கவிதா கிருஷ்ணன்

திரு. வலம்புரி ஜான்

திரு. K. ரவீந்திரன் (அப்பு)

திரு. பொன். ஜெயந்தன்



# உங்களிடம்..

மக்கள் திலகம் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களைப் பற்றிப் பல கோணங்களில் பல நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

அவருடன் நெருங்கிப் பழகிய நண்பர்கள், எழுத்தாளர்கள் என்று பலர் எழுதியிருக்கிறார்கள்.

இருந்தாலும், மக்கள் திலகத்தின் மனைவியாக வாழ்ந்த திருமதி.ஜானகி அம்மாளை விட, யார் அவரைப் பற்றி அறிந்துவிட முடியும்?

1967 ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆர் மீது குண்டு பாய்ந்து அவர் சிகிச்சை எடுத்தபோதும், 1983க்குப் பிறகு அவர் மருத்துவச்சிகிச்சை மேற்கொண்டபோதும், அவரை உடனிருந்து கவனித்து மீட்டெடுத்து வந்தவர் எங்களால் “தோட்டத்தம்மா” என்று அழைக்கப்பட்ட தமிழகத்தின் முதல் பெண் முதல்வரான ஜானகி அம்மாள்.


‘தாய்’ வார இதழில் மக்கள் திலகம் அவர்களைப் பற்றி ஜானகி அம்மாள் எழுதிய தொடரின் தொகுப்பே இந்தநூல்.

எம்.ஜி.ஆரின் மீது மிகுந்த அன்பு கொண்டிருக்கும் அவருடைய ரசிகர்களுக்கும், தொண்டர்களுக்கும் இந்தநூல் நிச்சயம் பிடிக்கும். அந்த அளவுக்குத் தன்னுடைய அனுபவங்களை அன்பு கலந்த மொழியில் பதிவு செய்திருக்கிறார் ஜானகி அம்மாள்.

திரையிலும், அரசியலிலும் பெரும் சாதனையை நிகழ்த்திய புரட்சித்தலைவர் அவர்கள் நினைவு கூரப்படும் போது, அவருடைய வாழ்வின் நிழலாக இருந்த திருமதி.ஜானகி அம்மாவும் நினைவு கூரப்பட வேண்டும் என்பதே எங்களுடைய விருப்பம்.

அவர் இந்தத் தொடர் எழுதக்காரணமாக இருந்த ஆசிரியர் திரு.வலம்புரி ஜான் உட்பட ஆசிரியர் குழுவினருக்கும், உரிமையாளருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றியை எங்களுடைய குடும்பத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முனைவர். குமார் ராஜேந்திரன்**
**தலைவர், தாய் குழுமம்**



# எனக்கு மட்டுமே தெரிந்த எம்.ஜி.ஆர்.!

- அத்தியாயம்: 1

மக்கள் திலகம் அவர்களைப் பற்றி நிறைய பேர் எழுதியிருக்கிறார்கள். அவருடைய வாழ்வில் இணையராக இணைந்து வாழ்ந்தவரான ஜானகி அம்மையாரை விட, யார் அவரைப் பற்றிப் பரிபூரணமாகச் சொல்லிவிட முடியும்?

இதோ, அன்று புரட்சித் தலைவரைப் பற்றித் தொடராகப் பகிர்ந்ததை மீண்டும் உங்கள் பார்வைக்கு இந்த நூலில் முன்வைக்கிறோம்.



“என் இதய தெய்வத்தின் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகளே காலம் விரைந்து ஓடுகிறது.

புரட்சித் தலைவரின் புனிதப் பாதங்கள் இந்த ராமாபுரம் தோட்டத்தில் நடந்து காலாண்டுக்கும் மேல் கடந்து விட்டது.



அவர் மறைந்து விட்டார் என்பதை இப்போதும் என்னால் நம்ப முடியவில்லை.

அந்த வேதனைக் கண்ணீர் என்னைப் போலவே உங்களுக்கும் மறையவில்லை என்பது தான் உண்மை.

ராமன் அணை கட்டியபோது தன் பங்குக்கு சிறு தொண்டு செய்த அணிலாக 40 ஆண்டுகளுக்கு மேல் நம் இதய தெய்வத்தோடு வாழ்ந்தவள் அல்லவா நான்!

இந்தத் துயரமான சூழ்நிலையிலும் உங்களோடு பேசுவது எனக்கு ஒரு ஆறுதல் மாறுதல் என்பதாலேயே இதனை எழுத ஆசிரியர் வலம்புரி ஜான் அவர்கள் கேட்டபோது, மறுக்காமல் ஒப்புக் கொண்டேன்.

இதற்கு விளம்பர நோக்கம் கடுகளவும் இல்லை. அது எனக்குத் தேவையும் இல்லை. "சொல்வதை விட செய்வது மேல்" என்று புரட்சித் தலைவர் அவர்கள் எனக்குச் சொல்வார்கள்.

அப்போதெல்லாம் அதிகம் பேசாத நான் சின்னப் புன்னகையோடு மட்டுமே தலையசைத்து, அதனை ஏற்றுக் கொள்வேன்.

அதனாலேயே நான் எப்போதும் பேசுவதைவிட செயலில் அதிகம் பிடிப்பு உள்ளவளாக இருந்து வந்திருக்கிறேன்.

அதிகமான பேச்சுக்கு சில நேரம் அர்த்தம் இல்லாமல் போகலாம். புரட்சித் தலைவரின் மௌனம்தான் சில நேரங்களில் அதிகம் சாதித்தது என்பதை நான் அறிவேன்.

சாதிக்கப் போவதை அவர் சொன்னதுண்டு. சாதித்த பிறகு அவைகளை தம்பட்டம் அடித்தது கிடையாது.

அவரது துயரங்களில் நெருக்கமாகப் பங்கு கொண்டவள் நான். இன்று அவர் இல்லாமல் துன்பக்கடலில் துடித்து நிற்கிறேன். கஷ்டப்பட்டு, தன்னைத் தேடி

வருகிறவர்களுக்கு எல்லாம் கை கொடுத்தவர் அவர்.

கண்கண்ட கணவனுக்குக் கட்டுப்பட்டு மனைவியாக இருந்து அப்போதெல்லாம் ஒத்துழைத்தவள் நான். அந்தக் கணவர் இல்லாத கஷ்டம் எத்தனைத் துயரமானது என்பதைக் கண்ணீரோடு அனுபவிப்பவள் நான்.

“உதட்டளவு ஆறுதலை விட உடனிருந்து உதவுவதே சிறந்தது” என்பார் புரட்சித் தலைவர். என்னோடு ஆறுதலாக இருக்கப் போகிறவர்கள் இனி நீங்கள் தான். அது போலவே உங்களுக்கு நான் தான்.

நாற்பதாண்டு காலத்திற்கும் மேல் அவரது உற்ற துணையாக, அவரது நிழலாக, தொண்டு செய்யும் வாழ்க்கைத் துணைவியாக வாழ்ந்தேனே தவிர, வேறு எதற்கும் நான் ஆசைப்பட்டதில்லை.

அவர் கட்டிக்காத்ததை நான் தொடர வேண்டிய கட்டாயம் வந்தது. கடமை அழைத்தது. இழந்த சோகத்துக்கு நடுவே துயரம் ததும்பிய நெஞ்சோடு, சுமையோடு சுமையாக இந்தப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டேன்.

எல்லாமே அவர் கொடுத்த துணிவும் அனுபவமும் துணை என்றே இன்றும் நம்புகிறேன். எப்போதும் அவர் என்னோடு இருந்து துணை செய்வதாகக் கருதுகிறேன்.

அவர் உயிரோடு இருந்தபோது எந்த அறையில் பிரமுகர்களைச் சந்திப்பாரோ அதே அறையில் தான் இன்றும் யார் வந்தாலும் சந்திக்கிறேன்.

அவர் உட்கார்ந்த இருக்கையில் உட்காருகிறபோதே உடல் புல்லரிக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு, இந்த ராமாபுரம் தோட்டத்தை 26 ஆயிரம் ரூபாய்க்கு



வாங்கினோம். அப்போது, இது வெறும் தென்னந்தோப்பு.

முதலில் சில மரங்களை மட்டும் அகற்றி விட்டு ஒரு சிறிய வீடு மட்டும் கட்டினோம். பின்பு, வசதிக்காக மாடியைக் கட்டினோம். முதல்வர் ஆனவுடன் “நாம் இந்த வீட்டில் எந்த மாறுதலையும் செய்யக்கூடாது” என்றார்.

“ஏதாவது மாறுதல் செய்தால் அரசு பணத்தில் வீட்டை மாற்றிக் கட்டுகிறார்கள் என்று சிலர் பேசக்கூடும். அதற்கு இடம் தரக்கூடாது” என்றே அவர் எந்த மாறுதலையும் இந்த இடத்தில் செய்யவில்லை.

சிறிய அறையாக இருந்தாலும் அதையே தான் கடைசி வரை பயன்படுத்தினார். அவரைப் போல, அவர் இருந்த அறையில் நானும் எந்த மாற்றத்தையும் செய்ய விரும்பவில்லை.

இந்த வீட்டை நானும் எனக்குப் பிறகு வருபவர்களும் உபயோகிக்கத் தான் முடியும். தலைவர் உயிருடன் இருந்த போதே பேசி முடிவு எடுத்தபடி அவர் விரும்பியபடியே எழுதி வைத்திருக்கிறார்.

எனக்குத் தெரியாமல் அவரோ, அவருக்குத் தெரியாமல் நானோ செயல்படவில்லை. நானும், “உங்கள் முடிவு தான்; என் முடிவு” என்று கூறி விட்டேன்.

“நாம ரெண்டே பேர் தானே, ஒவ்வொரு தொண்டர் வீடாகச் சென்று சாப்பிட்டால் கூட நமக்குப் போதுமே” என்று அவர் அடிக்கடி என்னிடம் கூறுவார்.

காலையில் ஐந்து, ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்து விடுவேன். குளித்துவிட்டு வந்து தலைவரைத் தரிசிக்கிற நான், இப்போதும் அவர் படத்துக்குக் குத்துவிளக்கேற்றி வணங்குகிறேன்.

மாட்டுத் தொழுவத்திலிருந்து வருகிற பாலை வாங்கி, நானே காப்பி போடுவேன். காலையில் அப்போதும் சரி, இப்போதும் சரி வருகிற விருந்தினர்களுக்கு முதல் காப்பி என்னுடையது தான்.




# புரட்சித் தலைவருக்காக நான் வாங்கிய 'பாரத ரத்னா' விருது!

- அத்தியாயம்: 2

புவி உள்ளவரை புரட்சித் தலைவர் புகழ் இருக்கும்.

புரட்சித் தலைவரின் வாழ்க்கை முழுவதும் ஏராளமான விருதுகள், பரிசுகள், பாராட்டுகள், பட்டங்கள் என்று மகிழ்ச்சி ஆரவாரத்திலேயே நிறைந்து இருந்தார்.

அது போலவே, அவரது கரங்களால் பரிசும், பாராட்டும் பெறுவதில் ஆஸ்கார் விருது கிடைத்த மகிழ்ச்சியை விட அதிக மகிழ்ச்சி கொள்ளும் நமது கலை உலகம்.

அவர் மறைந்தது டிசம்பர் 24. அந்தத் துயரமான காலைப்பொழுது அவ்வளவு சுலபமாக நம் யாருடைய நெஞ்சில் இருந்தும் மறைந்து விடாது.



நாட்டின் மிக உயர்ந்த விருதான 'பாரத ரத்னா' இறந்த பிறகு அவருக்குக் கிடைத்தது. மிகப்பெரிய புகழ் இது. ஜனவரி 26 ல் நாடு, அவருக்கு அதை அறி வித்துத் தன்னை மீண்டும் ஒரு முறை உயர்த்திக் கொண்டது.



தமிழ் நாட்டிலிருந்து சர்.சி.வி.ராமன், டாக்டர் ராதாகிருஷ்ணன், மூதறிஞர் இராஜாஜி, பெருந்தலைவர் காமராஜர் போன்ற பேரறிஞர்கள், அரசியல் வல்லுநர்கள், மேதைகளுக்கு இதே விருது கிடைத்திருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக மனித மனம் கொண்ட புரட்சித் தலைவருக்கு இவ்விருது கிடைத்திருக்கிறது என்பது பெருமை கொள்ள வேண்டிய ஒன்று.

அந்த மறக்க முடியாத நாள் மார்ச் 19, 1988.

அன்று குடியரசுத் தலைவரின் மாளிகை கோலாகலம் கொண்டது. அந்த தர்பார் மண்டபத்தில் தனியே நான் மட்டும் இருக்கிற மாதிரி மனசுக்குள் சோகம். குடியரசுத் துணைத் தலைவர், பாரதப் பிரதமர், பாராளுமன்ற உறுப்பினர்கள், விருது பெற வந்தோர் என்று பலரும் அவரவர் இருக்கையில் இருந்தார்கள்.

முதலில் அறிவிக்கப்பட்ட விருது நம் முதல்வருக்குத் தான். கைகள் நடுங்க கண்களில் நீர் கசிய, குடியரசுத் தலைவரிடமிருந்து அதை பெறுகிறபோது எனக்கு ஏற்பட்ட உணர்வு அதைச் சொல்வதற்கு வார்த்தை இல்லை.

புரட்சித் தலைவர் இருந்த போது அவரது கைகளில் இந்தப் ‘பாரத ரத்னா’ விருது தரப்பட்டிருந்தால் தமிழகமே விழாக் கோலம் பூண்டிருக்கும்.

‘பாரத ரத்னா’ விருது வாங்கிய உடன் விருந்து வைபவங்களில் கலந்து கொள்ள என் மனம் ஒப்பவில்லை. அதில் ஏதாவது உள்ளர்த்தம் உண்டா? என்று கூட என்னிடமே கேட்டவர்கள் உண்டு. அவருக்கு தரப்பட்ட விருதை வாங்கப் போனேன். வந்தேன். இதில் விருப்பு, வெறுப்பு ஏதுமில்லை. இதுவே, புரட்சித் தலைவரோடு நான் கலந்து கொண்டு இருந்தால் மனம் நிறைய, உளம் மகிழ மொத்த விழாவிலும் என்னை ஐக்கியப்படுத்திக் கொண்டிருப்பேன்.

அவரின் கரங்களில் தவழ வேண்டிய விருது இது. அவருடன் சென்று அவர் பெறுவதைப் பார்க்க வேண்டியவள் நான். இருந்தும், நான் மட்டும் தனித்து அவருடைய மனைவியாகப் பெறப் போனபோது அந்தப் பெரிய தர்பார் மண்டபம் நான் மட்டுமே நடக்கிற கூடமாகக் காட்சி தந்தது.

குடியரசுத் தலைவரை நெருங்கி, பாரத ரத்னாவைப் பெறுவது சற்று சிரமமாகவே இருந்தது.

நெஞ்சை அடைத்தது. கண்களுக்குள் குளம் கட்டியது.

சுற்றிலும் எதுவுமே இல்லாதது போல் தோன்றியது. கரவொலிகள் காதுகளுக்குள் சேரவில்லை. வெளிச்சம் பாய்கிறது. படம் எடுக்கிறார்கள் என்பது கூட எனக்குத் தோன்றவில்லை. மனசு மட்டும் ஒரே நோக்கில். ‘விருதை வாங்க வேண்டும்’.

என் கண் நிறைந்த கணவரே என் உடன் இருந்து தைரியம் தந்து என்னை நடத்திச் சென்றதாக நான் நம்பினேன். அந்த நம்பிக்கையில் மட்டுமே நான் அதைப் பெற்றேன்.

விருது பெற்றவுடன் வீடு திரும்ப எண்ணம் கொண்டேன். அதனால், அன்று இரவே சென்னை திரும்பினேன்.

மறுநாள் காலை ‘பாரத ரத்னா’ விருதைக் கடற்கரையில் அவர் நீண்ட துயில் கொள்ளும் நினைவு மறையா மாளிகையில் வைத்து நான் வணங்கியபோது, அவர் இட்ட பணியை நிறைவேற்றிவிட்ட திருப்தி எனக்கு.



அவரிடம் சேர்க்க வேண்டியதைச் சேர்த்துவிட்ட மனநிறைவு இருந்தது.

திருவாளர்கள் ஆர்.எம்.வீ., வி.வி.எஸ்., ஜேப்பியார், முன்னாள் வாரியத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர் இருந்தும், அந்தப் பொது இடத்தில் பொங்கி வந்த அழுகையை எவ்வளவோ முயன்றும், என்னால் அடக்க முடியவில்லை.

அதை வைத்து விழா எடுக்க விரும்பவில்லை. வெளிச்சம் போட்டுக் காட்ட விரும்பவில்லை.

ஆனால், அவர் மீது அன்பு கொண்ட கோடான கோடி தமிழ் நெஞ்சங்களுக்கு எளிமையாக அதை வெளிப்படுத்த விரும்பினேன்.

விருதைப் பார்வைக்கு வைக்க விரும்பி பத்திரிகையாளர்களை அழைத்து அதனைக் காட்டினேன்.

அவரின் நல்ல மனைவி என்ற முறையில் அந்த விருதை உலகம் பார்க்க வேண்டும் என்று நான் விரும்பியது தவறில்லை என்று எண்ணுகிறேன்.

எளிய முறையில் பத்திரிகையாளர்கள் முன் அதைப் பார்வைக்குக் காட்டினேன். அதில் முழு நிறைவு கொண்டேன்.

(24.04.1988)



# மக்கள் திலகத்திடம் இருந்த அதிசய சக்தி!

- அத்தியாயம்: 3

“சென்ற காலங்களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியாவிட்டாலும், கண்ட சிறுசிறு வெற்றிகளை நினைத்து மகிழ்ந்து உள்ளத்தை ஊக்குவித்துக் கொள்ளவும் வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய செயல்கள் குறித்து எண்ணச் செயலாற்றும் நெறியிலேயே உறுதி கொள்ளவும் ‘மே நாள்’ பயன்படுகிறது.”

இப்படிச் சொன்னவர் நம் தலைவர். அவரே அடிக்கடி என்னிடம் ஒரு விஷயத்தை மனம் விட்டுச் சொல்வார்.



“எனக்கு பொருளாதாரம் பற்றித் தெரியாது. அதைப் படித்துப் பட்டம் பெற்றது இல்லை. ஆனால் பசி, பட்டினி, வறுமை இவற்றை அனுபவித்துக் துன்பப்பட்டு இருக்கிறேன். கும்பகோணத்திலே படித்துக் கொண்டு இருந்தபோது, பல நாட்கள் மாலை நேரங்களில் பள்ளியில் இருந்து திரும்பியதும், அம்மா எனக்கும், அண்ணனுக்கும் சாப்பாடு தர முடியாமல் சங்கடப்பட்டதை நான் நன்றாகவே அறிவேன்.



ஆட்சிக்கு வந்தவுடன் அத்தகைய தொல்லைகளையும் துயரங்களையும் நம் மீது அன்பு கொண்ட தாய்க் குலத்திற்கு நாம் தராமல் காக்க வேண்டும்" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார்.

ராமாபுரம் தோட்டத்திற்கு அவரைச் சந்திக்க வருகிற எந்த நபரும் இங்கு விருந்து சாப்பிடாமல் சென்றதாக எனக்குத் தெரிந்த வகையில் இல்லை.

இன்றைக்கு அவருக்கும், அவரைச் சார்ந்த எனக்கும் எதிராகச் செயல்படுகிறவர்கள் கூட இங்கே என் கையால் சாப்பிட்டவர்கள் தான்.

அந்த நல்ல மனம் படைத்தவர், கோடான கோடி தாய்க்குலம் கண்ணீர் சிந்தக்கூடாது என்பதற்காகவே சத்துணவுத் திட்டத்தைத் தந்தார்.

அவரிடம் ஒரு அதிசய சக்தி உண்டு. பின்னால், இது நிகழலாம் என்பதை ஓரளவு முன்கூட்டியே ஊகித்து விடுவார்.

தி.மு.க.வில் இருந்து விலகுவதற்கு முன்கூட்டியே, "அரசியலில் என்னை அஸ்தமிக்கச் செய்ய ஏதோ நடக்கிறது. ஆனால், அது நிகழவே நிகழாது" என்று சிலபல மாதங்களுக்கு முன்பே அவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்போதைக்கு ஏன் இப்படிச் சொல்கிறார் என்று புரியவில்லை என்றாலும், பின்னர் அதை உணர்ந்தேன்.

அவருக்கு ஒரு வசீகர சக்தி உண்டு. ஒரு இடத்திற்கு இவரும் அகில இந்திய அளவில் பேசப்படுகிற இன்னொரு தலைவரும் செல்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

மக்கள் கூட்டம் இவரையே சூழ்ந்துகொள்ளும். 'தலைவர் வருகிறார்' என்றால்

தமிழக மக்கள் மணிக்கணக்காக, இரவு பகலாக என பல நாட்கள் கூட காத்துக் கிடப்பார்கள்.

ஏறக்குறைய 15 வருடங்களுக்கு முன் அப்போதைய பிரதமர் திருமதி.இந்திரா காந்தியைச் சந்தித்து மகஜர் கொடுக்க சென்னையிலிருந்து மதுரைக்குச் சென்றார்.

மக்கள் வழியெல்லாம் அவருக்கு தந்த வரவேற்பு எவ்வளவு மகத்தானது என்பதை அன்றைக்குப் பார்த்தவர்கள், படித்தவர்கள் அதற்கு முன் வரலாறு கண்டவர்கள் மறுப்பு ஏதும் சொல்லாமல் உணர்வார்கள்.

சென்னையில் புறப்பட்ட ரயில் மதுரையை அடைய பல மணி நேரம் தாமதம் கண்ட நிலையில், அப்போது இந்த ரயிலில் செல்வது மற்ற பிரயாணிகளுக்குச் சங்கடமாக இருக்குமோ என்று எண்ணி, திண்டுக்கல்லில் இருந்து கார் மூலம் மதுரைக்குப் பயணத்தைத் தொடர முடிவு செய்தார்.

இது எப்படியோ ரயிலின் டிரைவருக்கும் கார்டுக்கும் தெரிந்து இருவரும் ஓடோடி வந்தார்கள்.

“ஐயா ஒரு வேண்டுகோள். நாங்கள் உங்களை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். தயவு செய்து இந்த ரயிலை விட்டு மட்டும் இறங்கிப் போய்விடாதீர்கள்.

மதுரை போய்ச் சேருகிறவரை பாதையில் உள்ள ஊர்களுக்கெல்லாம் தாங்கள் வருகிற தகவல் தெரிந்திருக்கிறது.

இந்த வண்டியில் நீங்கள் இல்லை என்றால், உங்கள் அன்புத் தொண்டர்கள் பெருத்த ஏமாற்றம் அடைவார்கள்.



உங்களை நாங்களே காரில் அனுப்பி விட்டோம் என்று கூடச் சொல்வார்கள் அல்லது நாங்களே இந்த வண்டிக்குள் எங்கோ மறைத்து வைத்து இருக்கின்றோம் என்று கூடக் கருதுவார்கள்.

இந்த வண்டி மதுரைக்கு ஒழுங்காகப் போய் சேர வேண்டும். எங்களின் பொறுப்பு அப்படி. பெரிய மனது பண்ணி நீங்கள் அதற்கு உதவ வேண்டும் "என்று கேட்டுக் கொண்டார்கள்."

நம் தலைவர் சிரித்துக்கொண்டே ஒப்புக்கொண்டார். அன்றைக்குத் தலைவருக்குக் கிடைத்த வரவேற்பில் ஏறக்குறைய 17 மணி நேரம் தாமதமாக வண்டி மதுரை போய்ச் சேர்ந்தது.

மதுரையில் இந்திரா அம்மையாரைப் பார்க்க உரிய நேரத்தில் போக முடியாமையால் திருப்பரங்குன்றம் பொதுக்கூட்டத்தில் மட்டும் பேசிவிட்டு, "டெல்லியில் பிரதமரைச் சந்தித்து மகஜரை கொடுப்பேன்" என்றார். அதேபோல் கொடுத்தார்.

இவ்வாண்டு பிப்ரவரி 19 வாக்கில் நான் மதுரைக்கு மக்களைச் சந்திக்கச் சென்றபோது ஏற்பட்டது தான் அவருடைய கடந்த கால இந்த நினைவு.

நாற்பதாண்டு காலம் அவரின் உயிரின் உயிராய் இருந்தவள் நான். இன்று அவர் இல்லை, ஆனால் என் செயல் தொடர்கிறது. தந்தையை இழந்து நிற்கிற நம் தொண்டர்களுக்கு நான் தாயாக இருந்து வழி காட்ட வேண்டிய நிலை.

மதுரைக்கு நான் மக்களிடம் நியாயம் கேட்டுப் பயணம் புறப்பட்டதும் இப்படித் தான். வண்டி மதுரையை வந்தடைய, ஏறக்குறைய எட்டு மணி நேரத்திற்கு மேலாக தாமதம் ஆனது.

"எம்.ஜி.ஆர் சம்சாரம் வராங்களாமே" என்று என் காதுபடவே சொல்லியபடி தாய்மார்களும், தொண்டர்களும் ஆங்காங்கே வண்டியை நிறுத்தி அன்பு எழுச்சியைக் காட்டியதை என்னால் மறக்கவே முடியாது.

அவர் வளர்த்த கட்சியை, ஆட்சியை அப்படியே சாப்பிட்டு விடலாம் என்று கனவு காண்கிறவர்கள் சிலர் உண்டு.

அவர் சாப்பாடு போட்டே பழகியவர். அவர் வளர்த்த இயக்கம் அடுத்தவருக்கு ஒருபோதும் சாப்பாடு ஆகிவிடாது. எப்போதும் என்னவர் ஜெயிப்பார். இது சத்தியம்.

(01.05.1988)



# கொள்கையிலிருந்து விலகாத எம்.ஜி.ஆர்!

- அத்தியாயம்: 4

என் வீட்டுக்காரர் இந்தத் தோட்டத்தின் தூய மகன். உங்கள் நல் உள்ளங்களை எல்லாம் கொள்ளை கொண்ட பொன்மனச் செம்மலை, வெற்றித் திருமகனாக மட்டுமே நம் எல்லோருக்கும் தெரியும்.

வேதனையும், தோல்வியும் அவரிடத்தில் இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால், தோல்விகளைக் கண்டு துவளாத அவர், ஒவ்வொரு தோல்வியையும், வெற்றிப் படியாக மாற்றி நடக்கிற வித்தையைப் படித்தவர்.

நான் அறிந்தது அவரை மட்டும் தான். இருந்தும் 'நம்பிக்கை மட்டும் தான் வாழ்க்கை' என்பதற்கு இவரைத் தவிர வேறு யாரையும் நல் உதாரணமாகச் சொல்ல முடியாது.

1962ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். நாடக மேடை ஒன்றில் இவருக்குக் கால் முறிவு ஏற்பட்டது. என்ன நிகழ்ந்ததோ என்று நான் பதறித் துடித்திருந்த நேரத்தில் தான், இவரது எதிரிகள் 'புரட்சி' நடிகரின் நடிப்புலக வாழ்க்கை முடிந்து விட்டது. சண்டைக் காட்சிகளில் நடிக்கிற இவரால் சாதாரண காட்சிகளில் கூட நடந்து நடிக்க முடியுமா?" என்றெல்லாம் எழுதியும், பேசியும் வந்தார்கள்.



உண்மையில் அதற்குப் பிறகு தான் திரைப்படத் துறையில் புகழ் உச்சிக்கே போனார் என் இதய தெய்வம்.



அது போலவே, 1967ல் தேர்தல் நெருங்குகிற காலத்திற்குக் கொஞ்சம் முன்னால் நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களால் துப்பாக்கியால் சுடப்பட்டது எல்லோருக்கும் தெரியும்.

“பேசவே முடியாது. படுக்கையைவிட்டு எழுவது இனி கடினம். அவ்வளவு தான்” என்றவர்களுக்குச் சவால் விடுகிற மாதிரி இந்தத் தோட்டத்துச் சரித்திர மனிதர் நடித்த படங்கள் சாதனை படைத்ததை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள்.

1972ல் தி.மு.க.வில் இருந்து விலக்கப்பட்ட போதும் அப்படியே. “அவரின் அரசியல் அஸ்தமனம் ஆரம்பித்துவிட்டது” என்றார்கள். அப்படியா நடந்தது?

1980ல் டெல்லி மேலிடம் இந்த தோட்டத்து நாயகன் தொடங்கிய ஆட்சியை முதல்முறையாகக் கவிழ்த்தது. இரண்டாவது, அவர் மறைந்த பிறகு, எனக்கு ஆதரவு தருவதாக வாக்களித்துவிட்டு முதுகில் குத்திய முயற்சியை யாருமே மறந்திருக்க முடியாது.

முதல் முறை அவருடைய ஆட்சி கவிழ்க்கப்பட்ட போதும், அவர் மறைந்த பிறகு அவர் அமைத்த ஆட்சியை அசைத்திட முயன்றவர்களுக்கு அன்றும் தோல்வி, இன்றும் தோல்வி தான். இப்படி நான் சொல்வது ஆணவத்தால் இல்லை. அவர் மீது நானும் நீங்களும் வைத்திருக்கிற நம்பிக்கையாலும், மரியாதையாலும் தான். அதனால் தான் ஆரம்பத்திலேயே சொன்னேன் “நம்பிக்கை தான் வாழ்க்கை என்பதற்கு நல்ல உதாரணம் இவர் தான்” என்று.

அதே நம்பிக்கை அவர் கற்றுக் கொடுத்த பாடமாக இன்று எனக்குள் இருக்கிறது. அவர் பக்கத்தில் இருக்கிற பலம் எனக்கு எப்போதும் உண்டு.

புரட்சித் தலைவர் படங்களில் நடித்த காலங்களில் அவரது படங்களில் இடம் பெறுகிற அனேக பாடல் காட்சிகளுக்கு அவர் தனி ஆவர்த்தனம் காட்டுவார்.

அது போலவே, மக்களும் அந்தப் படப் பாடல்களைப் பெரிதும் ரசித்து மகிழ்வார்கள். அந்தப் பாடல்களில் அடிக்கு அடி அர்த்தம் இருக்கும்.

அழகு இருக்கும். அலங்காரம் இருக்கும். ஏன்! அதில் கூட நம் தலைவர் உள்ளே ஊடாடி இருப்பார்.

ஆமாம்! அவரது கொள்கையைத் தேன் தடவி பாடலாகத் தரத் தவற மாட்டார். அப்படி ஒரு ரசனை உள்ள அவருக்கு எப்போதும் ரொம்ப ரொம்பப் பிடித்தமான பாடல் ஒன்று உண்டு.

1980ல் கவியரசர் கண்ணதாசன் அவர்களின் பிறந்த நாள் விழா என்று நினைக்கிறேன். சென்னை மியூசிக் அகாடமியில் நடந்ததாக நினைவு.

விழாவிற்குப் போவதற்கு முன் தனது கேசட் ரெக்கார்டரில் ஒரு குறிப்பிட்ட பாடலைத் தேர்வு செய்து தயாராக வைக்கும்படி என்னைக் கேட்டார்.

நானே அதனை ரீவைண்ட் செய்து, பாடலின் தொடக்கத்தைத் தேடி அவர் கேட்டு ரசிக்கும் நிலையில் வைத்தேன். ஏன், எதற்கு என்று அவரிடம் எதையும் எனக்குக் கேட்டுப் பழக்கமில்லை.

அர்த்தம் கலந்த சிரிப்பை அன்று வீசி விட்டு, அதனோடு விழாவுக்குப் புறப்பட்டார். அன்றைய விழாவில் அவர் பேசியது, “எனக்கு எப்போதாவது மனதில் சோர்வு ஏற்படும்போதெல்லாம், அரசவைக் கவிஞர் கவியரசர் எழுதிய ஒரு பாடலை கேட்பதுண்டு.

அதைக் கேட்டால் ஒரு புதுத் தெம்பு வரும். அந்தப் பாடலை நீங்களும் கேளுங்கள்”, என்று அன்றைய தினம் அவர் தனக்குப் பிடித்தப் பாடலை எல்லோரும் அறிய தெளிவுபடுத்தினார்.

அவருக்கு மட்டுமல்ல நமக்கும் நம்பிக்கை ஊட்டுகிற அந்த நல்ல பாட்டு “அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடமையடா” என்பது தான்.

என் உள்ளத்தில் உயிர் வாழ்கிற அவரை நாள்தோறும் நம்பிக்கையோடு வாழ வைத்த பாட்டு அது.





# குடியிருந்த கோவிலை நிஜமாக்கிய மக்கள் திலகம்!

- அத்தியாயம்: 5

அப்போது எனக்கு 13 வயது. அப்பாவுக்கு வேண்டிய ஒருவர் சென்னையில் திரைப்படத்துறையில் இருந்தார். நாங்கள் எல்லாம் அப்போது கும்பகோணத்தில் இருந்தோம். பெரிய குடும்பம். கஷ்ட ஜீவனம்.


எங்க அப்பா ராஜகோபாலன் ஒரு தமிழாசிரியர். முப்பத்தைந்து ரூபாய் தான் சம்பளம். வாழ்க்கையில் இந்தப் பணத்தில் முழு நீச்சல் அடிக்க முயற்சி செய்து, முடியாமல் போய் குழம்பி இருந்தார்.

அப்போது தான் சென்னையைச் சேர்ந்த அந்தத் திரைப்பட நண்பரின் நினைவு அவருக்கு வந்தது. அந்த நண்பரின் உதவியால் ஒரு வழியாக திரைப்படத்துறையில் பாடல் இயற்றினார்.



என் சித்தப்பா பாபநாசம் சிவன் பலருக்குத் தெரிந்த பெயர். அப்பாவைப் போலவே அவரும் திரைப்படங்களுக்கு பாடல்கள் எழுதினார்.

அதோடு தமிழிசைக்கு தன்னைத் தந்தவர்களில் என் சித்தப்பாவுக்கும் ஓரளவு பங்கு உண்டு என்பதை அழுத்தமாகவே சொல்லலாம்.



அவருடைய இசைப் பெருமை அநேகமாக எல்லோருக்குமே தெரியும். அவருக்கு ஒரு பாராட்டு விழா நடத்த மயிலை சிருங்கேரி மடத்தில் முடிவு செய்தார்கள்.

செம்மங்குடி சீனிவாச அய்யர் தான் அந்த விழாவுக்குத் தலைமை.

சபை முழுவதும் பிரபல சங்கீத வித்வான்கள். என் அன்புக் கணவர் திடீரென்று அந்த விழாவுக்குப் போனார். பாராட்டு விழா என் சித்தப்பாவுக்கு என்பதற்காக அல்ல. கர்நாடக இசைக்கு அவர் செய்துள்ள தொண்டு கருதி நடக்கிற பாராட்டு விழா என்பதால் பார்வையாளராகச் சென்றார்.

நமது இசை வித்வான்களுக்குப் பெருத்த வியப்பு. விழா மேடைக்குக் கீழே இருந்து நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த என் கணவர் எழுந்து மேடையேறி பாபநாசம் சிவன் கையில் பத்தாயிரம் ரூபாயைத் தந்து, மேடையிலேயே தமிழ்த் தொண்டு செய்த, அந்தப் பெரியவரின் பாதங்களைத் தொட்டு வணங்கினார்.

பலருக்கு இது மெய் சிலிர்க்க வைத்த நிகழ்ச்சி. ஆனால், அவருடைய தன்னடக்கம், பெருந்தன்மை, கலாரசனை இவைகளைக் கண்டு வியக்கிறவர்களுக்கு உண்மையிலேயே இது ஒரு வித்தியாசமான விழாவாகத்தான் தெரியும்.

என் இதயத்தில் எப்போதும் இருக்கிற பொன்மனச் செம்மல் மேடையேறி பேசத் தொடங்கினார்.

“உங்களில் பலர் சினிமா சங்கீதத்தை அலட்சியமாகக் கருதக் கூடும். உங்கள் நினைவைக் கொஞ்சம் சரி செய்து கொள்ள வேண்டும். எம்.கே.தியாகராஜ பாகவதர், எம்.எஸ்.சுப்புலட்சுமி பாடிய பல திரைப்பாடல்கள் உங்கள் நினைவுக்கு வந்திருக்க வேண்டும்.

அந்தப் பாடல்களின் இனிமை இன்னும் காதுகளில் ரீங்காரம் இடுகிறதா?

அந்தக் காலத்துச் சினிமா பாடல்களில் பி.யு.சின்னப்பா, கே.பி.சுந்தராம்பாள், டி.ஆர்.மகாலிங்கம் போன்றவர்கள் கணீரென்ற குரலால் பாடி அற்புதமான பாடல்களின் மூலம் தாங்கள் நடித்த படங்களுக்கு மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தந்தார்கள்.

அந்தக் காலத்தில் இப்படிக் கர்நாடக இசையை மென்மையாகவும், மேன்மையாகவும் திரைப்படங்களில் ஒலிக்கச் செய்தவர். இன்று மேடையில் உங்களால் பாராட்டப்படும் திரு.பாபநாசம் சிவன் அவர்கள் தான்.

அவர் அந்தப் பணியிலிருந்து விலகியபிறகு, கர்நாடக இசையை திரைப்படங்களில் கையாள்வது வெகுவாகக் குறைந்து போயிற்று.

கர்நாடக இசை அப்படித் தன் உன்னதமான இடத்தை இழக்கக் காரணமாக இருந்தவர்கள் உங்களைப் போன்ற மதிப்பிற்குரிய வித்வான்களே. போகட்டும். மக்களோடு கலந்து நிற்கிற மிகப்பெரிய சாதனமான திரைப்படங்களை உங்களுடைய கலையின் நயத்தால் செழுமை செய்யத் தொடங்குங்கள்” என்று என் உள்ளம் கவர்ந்த கணவரின் உயர்ந்த உறுதியான இந்த அழைப்பைக் கேட்டு, மேடைக்குக் கீழே இருந்த வித்வான்கள் நெகிழ்ந்து போனார்கள்.

புல்லரித்து நின்றார்கள். கையொலி அடங்க வெகு நேரம் ஆயிற்று.

இதை இப்போது நினைத்தாலும் இசையில் அவருக்கு இருந்த ஈடுபாட்டை உணர்ந்து என் கண்களில் நீர் கட்டும்.

சாதனை செய்கிற சகலகலா வல்லவர் அவர். அவருக்குத் தெரியாத விஷயமே இருக்க முடியாது.

அடக்கமும் அன்பும் நிறைந்தவர். அதே நேரம் தன் கருத்தில் அழுத்தமான பிடிப்புள்ளவர். அப்படித் தன் கருத்தில் அவர் உறுதியாக இருக்க ஒருவர் மட்டுமே காரணமாக இருந்தார்.

கொண்ட கொள்கையில் உறுதியான, உயர்ந்தத் தலைவராக என் உள்ளத்து நாயகன் உயர்வதற்கு ஒரே காரணம். தாய்க்கு நல்ல பிள்ளையாக வளர்ந்ததே.

தன் தாய்க்காக வீட்டில் கோயில் கட்டி வழிபட்டவர் எனக்குத் தெரிந்து என்னவர் மட்டுமே.

பாரதப் பண்பாட்டிலும், பக்தியிலும், இதிகாசப் புராணக் கதைகளிலும் ஆழ்ந்த அறிவும், அளவற்ற பற்றும் கொண்டவர்கள் என் தலைவனின் அன்னையார்.





# பசிக் கொடுமையை அனுபவித்த மக்கள் திலகம்!

- அத்தியாயம்: 6

தன் குழந்தைகள் மீது பாசத்தைப் பொழிந்து அன்பு காட்டி, அருள் ஊட்டி வளர்த்தார்கள். 'நற்றாய்' என நல்லோர் போற்றும் அளவுக்கு வறுமையிலும், செம்மை உடையவராக குடும்பம் நடத்தியவர்கள் என் தலைவரின் அன்னையார் சத்தியபாமா அவர்கள்.

அன்னையார் பெயரை நான் உச்சரிப்பது மரியாதையின் பொருட்டுச் சரியில்லை என்றாலும், சரித்திரத்திற்குச் சான்று சொல்லி சொல்லியே ஆக வேண்டும் என்பதாலேயே இங்கே அவர் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

அன்னையார் தன் கணவருடன் (கோபால மேனன்) தன் உறவினர்கள் சிலர் சேர இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு கண்டியில் சில காலம் வாழ்ந்தார்கள்.



அங்கு நீதிபதியாகவும், ஆசிரியராகவும் அவரது கணவர் பணிபுரிந்தார். கண்டி மக்கள் ஒரு தெருவுக்கு அவரது பெயரைச் சூட்டும் அளவுக்குப் போற்றுதலுக்குரியவராய் வாழ்ந்தவர் என் அன்புத் தலைவரின் தந்தையார்.

17.01.1917 ஸ்வாதி நட்சத்திரத்தில் பிறந்தவர் தான் என் தலைவர். இவருக்கு இரண்டரை வயது இருக்கும்போது மீண்டும் கண்டியில் இருந்து தாயகம் திரும்பினார்கள்.

சில காலம் சென்றது. என் தலைவரின் தந்தையாரும் மறைந்தார். உறவினர்கள் சிலர் ஏற்கனவே குடியேறியிருந்த கும்பகோணம் நகருக்கு தன் குழந்தைகளுடன் குடிபெயர்ந்தார் தலைவரின் அன்னையார்.

மராத்திய மன்னன் சிவாஜிக்குக் கிடைத்த தாய் போல் என் தலைவரும். துணிவும் நேர்மையும் தெய்வ பக்தியும் வாய்மையும் நிறைந்த அன்னையாரின் அரவணைப்பில் பல புராண, இதிகாச நீதிக் கதைகளைக் கேட்டு வளர்ந்தவர்.

'அக்கதைகளைக் கேட்டுத் தன்னை அர்ச்சுனன், அபிமன்யு, இராமர், தர்மர் போன்ற புராண நாயகர்கள் போல் கற்பனை செய்து கொள்வதுண்டு' என்று என் அன்புக் கணவரே பல முறை என்னிடம் சிரித்துக் கொண்டே சொல்லியிருக்கிறார்.

"வறுமையை, பசிக் கொடுமையை அனுபவித்தவன் நான்" என்று அவருடைய அனுபவத்தை நினைவு கூறுவது வழக்கம் என்பதை முன்பே தெரிவித்திருந்தேன்.

அடுத்த வேளை உணவுக்கு அரிசி இல்லை என்ற நிலை. அருமைச் செல்வங்களுக்கு வாயாற, வயிறாற உணவு அளிக்க முடியாத சூழல்.

என்ன செய்வது என்று புரியாத நிலையில் கிடைத்த வேலைகளை செய்யத் தயாரானாராம் அன்னையார். யாருக்கும் பாரம் ஆகிவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தவர் அவர்.

நாலு வீடுகளில் பத்துப் பாத்திரம் தேய்த்தாவது தன் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றுகூட முடிவு செய்தார். சின்ன வயதில் குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதா என்ற எண்ணம் அவரை வாட்டியது.

அதே நேரம் அவரை வறுமை விரட்டியது. தன் பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காகவே தன் குழந்தைகளின் வயிற்றுப் பசிக்கு வழி காணவே, அப்போது கும்பகோணத்தில் இருந்த மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் பிள்ளைகளைச் சேர்த்துவிட்டார்.

என் இதயத் தோட்டத்து மன்னர் இந்த ராமாபுரம் தோட்டத்தில், தன் அம்மாவிற்குக் கோயில் கட்டியது மட்டுமில்லை, தன் தாய் பிறந்த மண்ணை விட்டு வெளியேறித் தன்னையும், தன் சகோதரரையும் பாதுகாத்து வளர்த்து ஆளாக்கியதை தனது கடைசி மணித்துளி வரை அவர் மறந்தவர் இல்லை.

இப்படி ஒரு பிள்ளையைப் பெற்ற வயிறு பெருமை உடையது. இப்படித் தன்னை ஈன்ற அன்னையை மதித்த மனசு அதைவிட மகா உன்னதமானது.

'தாயைப் போல பிள்ளை' என்பார்கள். 'எங்க வீட்டுப் பிள்ளை' என்று நம் எல்லோராலும் அழைக்கப்படுகிற என் தலைவருக்கும் இது பொருந்தும்.

அன்னையார் விதைத்த சிந்தனை விதைகள் தான் அவரை அறிவுக் களஞ்சியமாக ஆக்கியது என்பது அசைக்க முடியாத உண்மை.



# அறிஞர் அண்ணாவிடம் ஆழமாகப் படித்த மக்கள் திலகம்

- அத்தியாயம்: 7

"அறிவைக் கொடுப்பவர் கடவுள். அன்பை வழங்குபவர் கடவுள்" என்பார் ராமாபுரம் தோட்டத்து நாயகர்.

இந்த நாட்டுக்கே அறிவையும் இந்த மக்களுக்கெல்லாம் அன்பையும் ஊட்டுகிற அறிஞர் அண்ணாவை கடவுள் என்றால் தவறில்லை என்று கூட அவர் சொன்னது உண்டு.



அறிஞர் அண்ணாவோடு நமது இதய தெய்வத்துக்கு ஏற்பட்ட தொடர்பு என்பது மறக்க முடியாத ஒன்று. 1946ம் ஆண்டு 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' என்ற நாடகத்தில் நடித்தபோது தான் அன்பு அண்ணன் டி.வி.நாராயணசாமி அவர்கள் மூலமாக அறிஞர் அண்ணாவைச் சந்தித்தார் நம் தலைவர்.

இந்த ‘சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்’ நாடகம் அறிஞர் அண்ணா அவர்களால் எழுதப்பட்டது.

என் அன்பிற்குரிய இதய தெய்வம் அவர்கள் அடிக்கடி சொல்லுகிற ஒன்றை இங்கு அப்படியே தருவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

“நான் காங்கிரஸில் இருந்து விலகி ஒதுங்கி இருந்த காலம். நெற்றி நிறைய விபூதி இருக்கும். கதர் ஆடைதான் கட்டி இருப்பேன். அப்படிப்பட்ட தோற்றத்தில்தான் அறிஞர் அண்ணாவைக் கண்டேன்.



அப்போது எந்த மாறாத அன்போடு இருந்தாரோ, அந்த அன்பை நான் கடைசி வரை அவரிடம் கண்டேன். யார் வந்தார்? எதற்காக வந்தார்? எந்தக் கட்சிக்காரர் வந்தார் என்பதைப் பாராமல், 'மனிதன் வருகிறான்' என்று அன்போடு என்னை வரவேற்றவர் அவர்.

இந்த அறிமுகத்துக்கெல்லாம் பிறகு, ஏழெட்டு ஆண்டுகள் கழித்து அவரது கொள்கைகளை நன்கு புரிந்து கொண்ட பின்னரே கழகத்தில் சேர்ந்தேன்" என்பார் என் தலைவர்.

ஒரு முறை நன்னிலம் பகுதியில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது, "மரத்தில் பூவரசு காயாக இருந்தது. இப்போது கனியாக இருக்கிறது" என்றார்.

இது யாரைக் குறித்துச் சொன்ன வார்த்தை என்று நினைக்கிறீர்கள்? என் வீட்டு இதயக்கனியைப் பற்றித்தான். பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த கொஞ்ச காலம் வரை யாராவது அண்ணா என்று அழைக்கும் போது, "பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு தான் எனக்கு வருகிறது" என்பார் என் தலைவர்.

அத்தனை அன்பு இந்த மூன்றெழுத்துக்காரருக்கு அந்த மூன்றெழுத்துக்காரர் மீது உண்டு.

இவர் அண்ணாவோடு ஐக்கியமானது ரொம்ப ஆழமானது. "காங்கிரஸில் இருந்தபோது நான் மிகவும் தீவிரவாதியாக இருந்தேன். அப்படிப்பட்ட நான் தி.மு.க. உறுப்பினரான பிறகும் கூட கதர் கட்டுவேன்.

அறிஞர் அண்ணா அப்போதும் என்னைத் தவறாகப் பார்த்ததில்லை. கதர் ஆடை அணிந்தும், பகவத்கீதை படித்தும், இராட்டையில் நூல் நூற்றும் பழகிய அந்தக் கால காங்கிரஸ்காரன் தான் நான்" என்று பல முறை மனம் விட்டு சிரிப்பார் என் தலைவர்.

காங்கிரசை விட்டு விலகிய மூன்றாண்டுகளுக்குப் பிறகு, ஒருநாள் பேரறிஞர் அண்ணா எழுதிய 'பணத்தோட்டம்' படித்தபிறகு தான் அவர் தி.மு.க.வில் சேர்ந்தார் என்பது அநேகம் பேருக்குத் தெரிய வாய்ப்பில்லை என்று நினைக்கிறேன்.

ஒரு புத்தகம் அவரை அறிஞர் அண்ணாவிடம் ஆழமாகப் பதிந்து மாற்றி யிருக்கிறது என்று முதலில் எனக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஆனால் உண்மையில் பேரறிஞர் அண்ணாவிடம் இதற்கும் மேலாக ஏதோ ஒன்றை ஆழமாகப் படித்தவர் என் நாயகர்.

இங்கு இன்னொரு விஷயத்தைச் சொல்லியே ஆக வேண்டும். புத்தகம் படிப்பது என்பது அவருக்கும் பொழுதுபோக்கு இல்லை. அதை ஒரு வேள்வி மாதிரி அவர் செய்வார் என்பது தான் உண்மை.

படிப்பதும், படித்த புத்தகங்களைப் பாதுகாப்பதும் அவருக்கே உரிய அரிய கலை. அதுபோலவே டி.வி, வானொலி நிகழ்ச்சிகளை நேரம் கிடைக்கிற போதெல்லாம் பார்ப்பதும் கேட்பதும் அவரது வழக்கம்.

அப்படிப் பார்க்கிற போதும், கேட்கிற போதும் பாராட்ட வேண்டியதைப் பாராட்டுவதிலும் முரண்பட்ட இடத்தைச் சுட்டிக் காட்டுவதிலும் எப்போதும் தயக்கம் காட்டியதே இல்லை.





# மக்கள் திலகத்தின் மறக்க முடியாத நாட்குறிப்பு!

- அத்தியாயம்: 8

தந்தை பெரியார் படுசிக்கனம் என்றும் யாருக்கும் பண உதவி செய்ய மாட்டார் என்றும் தான் எல்லோருமே சொல்லி வருகிறார்கள். பலர் சொல்வதைக் கேட்டு, “அப்படியும் இருக்குமோ?” என்று நான் கூட நினைத்ததுண்டு.

பாகவதரும், கலைவாணரும் சிறை சென்றிருந்த சூழ்நிலையில், பெரியார் அந்த வழக்கு நடத்த பண உதவி செய்திருக்கிறார்.



அதுவும் ஒரு சினிமா நடிகருக்கு? கலைவாணர் என்ற கலைஞர் மட்டும் தான் இப்படி நியாயமான அந்த உதவியைப் பெற்றவர் என்று எனது தலைவர் பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டதுண்டு.

இதை இப்போது எழுதக் காரணம் என் இதய தெய்வத்தின் நாட்குறிப்பு ஒன்றிலிருந்து சில

தகவல்களை அண்மையில் படித்தேன். அந்தப் பொன் வரிகளை அப்படியே தருகிறேன்.

1947 ஏப்ரல் 25 ஆம் தேதி, வெள்ளிக்கிழமை கலைவாணர் வழக்குத் தீர்ப்பு சொல்கிற நாள். கலைவாணரும், பாகவதரும் விடுதலை செய்யப்பட்டார்கள். தேச விடுதலைக்காகப் போராடிச் சிறை சென்று மீண்டு வருபவருக்கு எத்தகைய வரவேற்பு இருக்குமோ, அது போன்ற வரவேற்பு சிறைச்சாலை வாசலில் அவருக்குக் காத்திருந்தது.

கலைவாணர் மீது மக்கள் அத்தனை நம்பிக்கை வைத்திருந்தார்கள். கொலை செய்ய சதி செய்த குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்படாமல் விடுதலை செய்யப்பட்டார்கள். அத்தகைய நிலையில் மக்கள் வரவேற்றார்கள் நம்பிக்கை கொண்ட தங்கள் கலைவாணரை.



கலைவாணர் விடுதலை பெற்ற இரண்டாம் நாள் அந்த ஞாயிற்றுக் கிழமை கிரீன் பிக்சர்சில் கலைவாணருக்கு ஒரு பாராட்டு விழா. அந்நிகழ்ச்சிக்குத் தலைமை இயக்குனர் மேதை கே.சுப்பிரமணியம் அவர்கள். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களும் கலந்து கொண்டார்கள்.


கலைவாணர் இந்நிகழ்ச்சியில் பேசியதை நினைத்து நினைத்துப் பார்த்துச் சிரிக்கக் கூடியவை என்று எழுதி இருக்கிறார்கள். கலைவாணர் அவர்கள் மீதும், மதுரம் அம்மையார் அவர்கள் மீதும், என் இதய தெய்வம் அளவிட முடியாத அன்பு கொண்டவர்கள்.

மதுரம் அம்மையார் தனது கணவர் சிறையில் இருந்த காலத்தில் பட்ட துன்பங்கள் ஏராளம். அதைக் கதைக் கதையாக எனது நாயகன் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

சாவித்திரி தனது கணவன் உயிரை மீட்க எமனிடம் கை நீட்டி மடிப் பிச்சை கேட்ட கதைபோல, திருமதி மதுரம் அவர்களிடம் வழக்குரைஞர்களிடம் “என் கணவரை மீட்டுத் தாருங்கள்” என்று மடிப்பிச்சை கேட்டார்களாம்.

தனக்குத் தெரிந்த பெரியோர்களிடம் எல்லாம் “என் கணவரை விடுதலை செய்ய ஆதரவு தாருங்கள்” என்று கை கூப்புவாராம்.

கலைவாணரின் நண்பர்களில் வசதி படைத்தவர்கள் இடமெல்லாம் கைநீட்டி ஆதரவு கேட்கிறார் மதுரம் அம்மையார். வழக்குரைஞரிலிருந்து வழக்கு நடத்தப் பொருளாதார நிலை வரை, மதுரம் அம்மையார் துணிவோடும், நம்பிக்கையோடும் தனித்துப் போராடிப் பெற்றவர் என்று அவரை என் அன்புக் கணவர் வியந்து






வியந்து பிற்காலங்களில் பல சூழ்நிலைகளில் பாராட்டுவதை நான் கேட்டிருக்கிறேன்.

அந்தச் சமயத்தில் தான் கலைவாணர் மீது பக்தி கொண்டு வாழ்ந்த மதுரம் அம்மையாரிடம் எனக்கு எல்லை இல்லாத மரியாதை ஏற்படத் தொடங்கியது.

பல்வேறு வலிகளைத் தாங்கிக் கொண்டு மறைந்த எஸ்.வி.சகஸ்ரநாமம் அவர்கள் கலைவாணர் குடும்பத்திற்குப் பெரிதும் இந்தச் சூழ்நிலையில் உதவினார் என்று கூடத் தலைவர் சொல்லியது உண்டு.

சிறைக்குப் போகும்போது வீடு இல்லாமல் சென்ற கலைவாணருக்கு, சொந்த வீட்டுக்குள் உரிமையோடு நுழைய வழிவகை செய்தவர் எஸ்.வி.எஸ். என்று இந்தத் தோட்டத்துத் தூயவர் சொல்வார்.

(12.06.1988)




# நடிகர் சங்கம் பிறந்த கதை!

- அத்தியாயம்: 9

"மருதுபாண்டியர் கதையைத் திரைப்படமாக எடுப்பதாகப் பத்திரிகையாளர்களுக்குச் செய்தி கொடுங்கள்" என்று அந்த நடுநிசியிலே கவியரசர் கண்ணதாசனோடு தொலைபேசியில் பேசினார் தலைவர். அவரும் அதை ஏற்றுக் கொண்டார்.

அமரர் டி.கே.சண்முகம் அண்ணாச்சி அவர்கள் கண்கலங்க மகிழ்வோடு, "உங்கள் இருவரை வைத்துப் படம் எடுப்பவர்கள், விநியோகஸ்தர்கள், நடிகர், நடிகைகள், தொழில்நுணுக்கக் கலைஞர்கள் என்று இத்துறையில் சம்பந்தப்பட்ட பல குடும்பத்தாருக்கு இதன் மூலம் வாழ்வளித்து உள்ளீர்கள்" என்று வாழ்த்தி விட்டுச் சென்றார். அண்ணாச்சி சென்ற பிறகு, அன்று வெகு நேரம் புரட்சித்தலைவர் கண் விழித்திருந்தார்.



"நடிகர் திலகத்திற்கும், எனது அன்புத் தலைவருக்கும் இடையில் பெரிய தயாரிப்பாளர்கள் இப்படி குறுக்கீடு செய்தார்கள் அல்லவா? இந்த மாதிரி

நபர்கள் திரைப்படத் தொழிலில் மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ தொழில்களில், அரசியலில் கூட இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களிடம் இருந்து நாம் விடுபட்டாக வேண்டும். இல்லையேல் நம்மையும், நாட்டையும் அழித்து விடுவார்கள்” என்று அடிக்கடி அந்த சம்பவத்திற்குப் பிறகு சொல்ல ஆரம்பித்தார்.

எனக்குத் தெரிந்த அளவில் திரு.கே.எஸ் என்று மரியாதையோடு அன்புத் தலைவர் அவர்களால் அழைக்கப்பட்ட பழம்பெரும் இயக்குனர் சுப்பிரமணியம் முதலில் இயக்கிய திரைப்படம் ‘பவளக்கொடி’. என்னை சினிமா உலகத்திற்கு அறிமுகப்படுத்தியதெல்லாம் டைரக்டர் கே.சுப்ரமணியம் தான்.

அந்தக் காலத்தில் அவருடைய நடன கலா சேவாவின் மாணவிகளில் ஒருத்தியான எனக்கு எல்லா வகை நாட்டியங்களிலும் பரிச்சயமும், தேர்ச்சியும் இருந்தது.


அமரர் டைரக்டர் கே.சுப்பிரமணியம் மீது அளவிட முடியாத அன்பும் பாசமும் மரியாதையும் வைத்திருந்தவர் நமது தலைவர். அமரர் கே.எஸ் அவர்களை என் கணவர் எவ்வளவு தூரம் அறிந்தவர் என்பதற்கு எனது தலைவர் அவரைப் பற்றி குறிப்பிட்டவைகளே சான்று.

“திரையுலகில் டைரக்டர் சுப்பிரமணியம் என்று சொன்னால் அனைவரும் தெரிந்து கொள்வார்கள். ஆனால், அவர் ஒரு வழக்கறிஞர், திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குனர், நடிகர், எழுத்தாளர், இசையை அறிந்தவர், பொதுவுடமைவாதி, உண்மையான காங்கிரஸ்காரர், ஜாதி உணர்வற்றவர், தொழிலாளி, எதிரிகளையும் அரவணைக்கும் அன்பாளர், வள்ளல், கடிந்து பேசாதவர். ஆனால், மனதில் நியாயம் எனப்பட்டதை ஒளிவுமறைவின்றி சம்பந்தப்பட்டவரிடமே சொல்லுபவர்” என்றெல்லாம் இந்தத் தோட்டத்து நாயகரால் மரியாதையோடு போற்றிப் பாராட்டப்பட்டவர் டைரக்டர் சுப்பிரமணியம்.

இவர் தான் பாகவதரும், கலைவாணரும் கைது செய்து சிறையில் வைக்கப்பட்ட பொழுது பல்வேறு முயற்சிகளை அவர்களுக்காக எடுத்தவர்.

இப்பொழுது தென்னிந்திய நடிகர் சங்கம் என்று குறிப்பிடும் அமைப்பை உருவாக்குவதற்கு ஆதி காரணகர்த்தாவும் அவர் தான். பல்வேறு நிலைகளில் பல்வேறு பெயர்களில் இந்தச் சங்கம் தொடங்கி மாறிமாறி வந்து நமது அன்புத் தலைவர் மற்றும் அவரைப் போன்றவர்களின் யோசனைப்படிப் பெயர் மாற்றப்பட்டு இப்போது நிலைத்திருப்பது தான் தென்னிந்திய நடிகர் சங்கம்.





# "அண்ணன் - தம்பி என்றால் இவர்கள்தான்"

- அத்தியாயம்: 10

மக்கள் திலகம் சிறுவயதில் பட்ட சிரமங்கள் அதிகம். அது பற்றி அவரே என்னிடம் சொல்லி யிருப்பதைக் கேளுங்கள்.

"அந்தச் சின்ன வயதிலும் கோவணம் கட்டாமல் நாங்கள் இருக்கக் கூடாது. அம்மாவோட உத்தரவு இது. மீறினால், கடுமையான தண்டனை கிடைக்கும்.

அப்படித்தான் அன்றொரு நாள் நான் குளித்து விட்டு வந்து, முதல் நாள் கயிற்றில் உலரப் போட்டிருந்த கோவணத்தை உடுத்த எண்ணிக் கயிற்றைப் பார்த்தால் கோவணத்தைக் காணவில்லை.

கீழே விழுந்து விட்டதோ என்று சுற்று முற்றும் பார்த்தேன். என் சகோதரர் கோவணத்தோடு நின்று கொண்டு, என் அம்மா தரப் போகும் வேட்டியை உடுத்தக் காத்திருந்தார். அம்மாவிடம் அழுகையோடு ஆத்திரத்தோடும் முறையிட்டேன். ''என் கோவணத்தை அண்ணன் எடுத்துக் கட்டிக் கொண்டார்''.



"என்ன சொன்ன"? என்று திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே என் கன்னத்திலும், உடம்பிலும் மாறி மாறி அடித்தார். அடி அதிகமாக அதிகமாகத் திரும்பத் திரும்ப அதையே சொன்னேன்.

இப்படி என் அன்புத் தலைவர் இப்போதும் காதுகளுக்குள் பேசுவது போல இருக்கிறது.

குழந்தைத்தனமாக எத்தனையோ முறை இதைச் சொல்லி இருப்பார்!

அது போலவே என் அன்பு தலைவரின் அண்ணன், தன் தம்பி அடிபடுவதைச் சகித்துக் கொண்டாரில்லை. "நான்தான் அதை எடுத்துக் கொண்டுவிட்டேன் அம்மா. அவனை ஏன் அடிக்கணும்?" என்று கேட்டிருக்கிறார்.

"முளைத்து மூணு இலை விடலை. இப்பவே 'என்னது உன்னது' என்று பேச ஆரம்பிச்சுட்டானே" என்று சொல்லியபடியே, "இனிமே இப்படிச் சொன்னே தோலை உரிச்சுடுவேன் ஜாக்கிரதை" என்று எச்சரித்திருக்கிறார் அம்மா தன் பிள்ளையை.

இப்படித் தான் அவரது அம்மா 'எனது, உனது' என்று பிரித்துப் பேசக்கூடாது என்று அறிவுரையும் உதையும் தந்து அவரை வளர்த்து ஆளாக்கினார்களாம்.

அது அந்தக் குழந்தைப் பருவத்தில் மட்டுமல்ல, அவரது அண்ணனுக்குத் திருமணமான பிறகும் கூட அவர்களுக்குள் அதே எண்ணத்தை நிலைத்திருக்கும்படி வளர்த்தார் என்று இந்த தோட்டத்துத் தூயவர் அடிக்கடி சொல்வதுண்டு.

அது ஒரு தீபாவளி.

அண்ணனும், தம்பியும் துணிவாக ஒருசேரப் போனார்கள். 'உருத்திராட்சக் கரை' போட்ட சரிகை வேட்டி என்றால் அந்தக் காலத்தில் அவ்வளவு புகழ்ந்து பேசுவார்களாம்.

அதையே தாங்கள் இருவரும் எடுத்துக் கொண்டார்கள். மகிழ்ச்சியோடு தங்கள் அம்மாவிடம் கொண்டு வந்து காண்பித்தார்கள். மேல் வேட்டியைப் பார்த்ததும், மகிழ்ந்த தாயார், அதன் ஓரக் கரைகளில் இருந்த ஒரு சிறு மாற்றம் இருப்பதையும் கவனித்து விட்டார்கள்.

"ஒன்று போல இல்லையே. ஏன் இப்படி வாங்கி வந்தாய்?" என்று கோபத்தோடு அம்மா கேட்க, மூத்தவரோ, "பெரிய கரை மேல் வேட்டியை தம்பி போட்டுக் கொள்ளட்டும். எனக்குச் சிறிய கரை உள்ளதே போதும். ஒருபோல இரண்டும் கிடைக்கவில்லை." என்று எவ்வளவோ சமாதானம் சொல்லியும் மூத்தவரின் முயற்சி தோல்வி கண்டிருக்கிறது.


இந்த இடத்தில் தான் என் அன்புக் கணவர், என் அன்புத் தலைவர் ஒரு விஷயத்தைச் சொன்னார்.

"குழந்தைப் பருவத்தில் எங்களை அடித்து உதைத்துக் கண்டித்தார் அம்மா. உடலில் ஏற்பட்ட வலியால் நாங்களும் அப்போதெல்லாம் அழுது கண்ணீர் விட்டிருக்கிறோம். ஆனால், நாங்கள் தலைக்கு மேல் வளர்ந்து விட்ட நிலையில், அன்றைக்கு அவர்கள் கண் கலங்கி, எங்களையும் கண்ணீர் விடச் செய்துவிட்டார்கள்.

கடைசியில் எங்களுக்கு அந்தத் தீபாவளி, வேட்டியில் சரிகை இல்லாமலேயே முடிந்து போனது"

இவ்வளவு கவனமாக வளர்க்கப்பட்டவர் என் அன்புத் தலைவர்.

"நான், எனது என்ற சுயநல ஆசையின்றி நாம், நமது" என்ற பொதுவான நல்லெண்ணத்தின் பலமான அடிப்படையோடு வளர்க்கப்பட்டவர்கள் எனது தலைவரும் அவரது தமையனாரும்.



# "உடலை ஆலயத்தைப் போல நினைத்த மக்கள் திலகம்"

- அத்தியாயம்: 11



ராமாபுரம் தோட்டத்தில் தூயவர் மக்கள் திலகம் தன் வாழ்க்கையின் கடைசி நாள் வரை உடற்பயிற்சி செய்தவர். அவர் செய்த பயிற்சிகளில் வேண்டுமானால் வித்தியாசம் இருக்கலாம். முன்பெல்லாம் கடுமையான பயிற்சிகளைச் செய்வார். பின், ஓரளவு கொஞ்சம் எளிய பயிற்சிகளை மேற்கொண்டதுண்டு.

ஆனால், அவர் ஒருபோதும் உடற்பயிற்சி செய்யாமல் இருந்ததே இல்லை. உடலை ஆலயமாகக் கருதி வாழ்ந்தவர் அவர். அந்தக் காலத்தில் வெளிப்புறப் படப்பிடிப்புக்குச் சென்றால், தன்னுடன் எதை எடுத்துச் செல்லத் தவறினாலும் உடற்பயிற்சி சாதனங்களை

எடுத்துச் செல்லத் தவறமாட்டார்.

‘அன்பே வா’ வெளிப்புறப் படப்பிடிப்பு சிம்லாவிலும், ஊட்டியிலும் நடந்தது. அதற்கு அவருடன் நானும் போயிருந்தேன். அந்த அதிகாலைக் கடும் குளிரில் எழுந்து வியர்வை வழிய வழிய உடற்பயிற்சி செய்வார்.

அவர் உறங்காமல் எழுந்துவிட்டதை அறிந்த அனேக படப்பிடிப்புக் குழுவினரும் சீக்கிரமே எழுந்து விடுவார்கள். இயக்குநர் ஏ.சி.திருலோக்சந்தர் பற்றி இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

அந்த வெளிப்புறப் படப்பிடிப்பில் அவரையும் இழுத்து வைத்து உடற்பயிற்சி செய்ய வைத்தார் என் தலைவர். ‘அன்பே வா’ சிம்லா படப்பிடிப்பிற்கு நாங்கள் ஒரு குழுவாகச் செல்லும்போது தான் அது நிகழ்ந்தது.

எந்த ரயில் நிலையம் என்பது எனக்கு நினைவில் இல்லை. அந்த நிலையத்தில் வண்டி நின்றிருந்தது. எனக்குச் சொல்ல முடியாத தண்ணீர் தாகம். “ஒரு சோடா கிடைத்தால் தேவலை” என்பதைப் பக்கத்தில் இருந்த அன்புக் கணவரிடம் தெரி வித்தேன்.

அப்போது, அங்கே சகோதரர்கள் ஏ.வி.எம். சரவணனும், ஏ.சி.திருலோக்சந்தரும் இருந்தார்கள். முதலில் யார் வண்டி புறப்படுவதற்குள் சோடா வாங்கி வருவது என்று போட்டியாகவே இவருடன் ஓடத் தொடங்கி விட்டார்கள்.

இதில் ஜெயித்தது யாராக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? அப்போதும் எனக்கு தான் வெற்றி. என்னவர் தான் முதலில் சோடா வாங்கி வந்து கொடுத்தார்.

இந்த நினைவு இப்போது என் கண்களில் நிழலாடி நீரை வரவழைத்தது என்றாலும், அப்போது அது மனதுக்குள் மகிழ்ச்சிப் பூவை விதைத்த மறக்க முடியாத நிகழ்ச்சி என்று சொல்ல வேண்டும்.

‘நமது உயர்வு, தாழ்வுக்கு நாம் தான் காரணமாக இருக்க முடியுமே தவிர இன்னொருவர் அல்ல’ என்பது என் எண்ணம். இந்தத் தோட்டத்துத் தூயவரைப் போல இன்னொருவர் எல்லாத் துறையிலும் பெருமைப்படும் வகையில் சாதனையாற்ற இயலுமா என்பது சந்தேகமே.

அந்தச் சாதனைகளுக்கு அவர் தான் முழுக்காரணம்.

நம்பிக்கை மட்டும் தான் வாழ்க்கை என்பதை அவரைப் போல் இன்னொருவர் நம்பி இருக்க முடியாது. அதுவே, எண்ணிக்கையில் அடங்காத அவரது வெற்றிகளுக்குக் காரணம்.



# "அன்புக்கு அர்த்தம் மக்கள் திலகம் தான்"

- அத்தியாயம்: 12

"தொண்டராக இருந்து தலைவராகி, முதல்வராகப் பத்தாண்டுகளுக்கும் மேல் சேவை செய்த செம்மல், உலக அரங்கிலேயே இவர் ஒருவராகத் தான் இருக்க முடியும்.

நான் அறிந்து மூன்று இதழ்களுக்கு அவர் ஆசிரியராக இருந்தவர். அதில் 'அண்ணா' இதழும் ஒன்று.

எந்த இதழுக்காவது அல்லது சிறப்பு மலர் எதற்காவது கட்டுரை தருவதாக ஒப்புக் கொண்டால், உதவியாளரிடம் கருத்துக்களைச் சொல்லிக் கட்டுரை தயாரிக்கவோ, குறிப்புகளைத் தேடித் தயார் செய்து தரும்படியோ ஒரு போதும் கேட்கவே மாட்டார்.



அவரே கைப்பட எழுதித் தருவார். அவரது குறிப்பு நோட்டில் ஒரு சில சின்ன அடித்தல் திருத்தல்களோடு, அது அப்படியே உரியவருக்குச் செல்லும்.

ஒரு வேளை அதனை வெளியிடுகிறவர்களுக்கு அதைப் புரிந்துக் கொள்வது எளிதில்லை என்று

உணர்ந்தால் மட்டுமே, உடனே தமிழ் தட்டச்சில் அடித்து அளிக்கும்படி உதவியாளர்களை நாடுவார்.

'சதிலீலாவதி' முதல் 'மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்' வரை 136 படங்கள் அவரது திரைப்படச் சாதனைச் சரித்திரம். இதில் தமிழில் வந்த முதல் வண்ணப்படமான 'அலிபாபாவும் 40 திருடர்களும்' படத்தின் முதல் நாயகர் இவரே. இப்படி, இவர் ஒரு சகலகலா வல்லவர், சாதனையாளர் என நிறைய அடுக்கிக் கொண்டே போகலாம்.

அநேகமாக உங்கள் இதயத்தில் என்றும் வாழுகிற என்னவரைப் பற்றி தெரியாததைச் சொல்வது சிறந்தது என்பதால், சிலவற்றை மட்டும் இங்கே சொல்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை என்று கருதுகிறேன். அங்கே ஒரு பஸ் டிரைவர் விபத்தில் சிக்கிவிட்டார்.

காலில் தான் பலத்த அடி. அப்போதைய நிலையில் அவருக்கு அறுவைச்சிகிச்சை செய்து அவரது காலை எடுக்காவிட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்று டாக்டர்கள் அந்த இளைஞரின் அம்மாவிடம் தெரிவித்து விட்டார்கள்.

"காலை இழந்துவிட்டு ஊனமுற்ற பிறவியாக வாழ்வதைவிட சாவதே மேல்" என்று பிடிவாதமாக அந்த இளைஞர் அறுவைச்சிகிச்சைக்கு ஒப்புக் கொள்ளவில்லை.

பிள்ளையைப் பெற்ற தாய் அல்லவா? எப்படியாவது தனது பிள்ளையைப் பிழைக்க வைத்து, இந்த உலகத்தில் வாழ வைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார் அந்தத் தாயார். தன் மகனைச் சாவு நெருங்க நெருங்க அந்தத் தாய் பதறிக் கதறித் துடித்தார்.

"பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்பார்களே, அது தான் அங்கே நிகழ்ந்தது. அறுவைச்சிகிச்சைக்கு அந்தப் பிள்ளை ஒத்துக் கொள்ளவில்லை. வயதான அம்மாவை அன்போடு கவனித்துக் கொள்ள வேண்டிய வயதில் இப்படியா?

ஒரு மகனின் கடமை தொடங்க வேண்டிய நேரத்தில் அந்த அம்மாவுக்கு பாரமாக இருக்கக் கூடாது என்பது தான் அந்தப் பிள்ளையாண்டானின் தவிப்பு கலந்த வாதம்.

இந்த இரண்டு உள்ளங்களும் எவ்வளவு உயர்வானது? அந்த அம்மாவுக்குத் தன் மகனைக் காப்பாற்ற ஒரு வழி தான் தெரிந்தது. பெற்ற பிள்ளையைக் காப்பாற்ற இன்னொரு பிள்ளையை அழைத்து வர முடிவு செய்துவிட்டார். அது முடியுமா? இயலுமா? என்று அவர் யோசிக்கவில்லை. நம்பிக்கையோடு புறப்பட்டுவிட்டார் அந்தத் தாயார்.

யாரைப் பார்க்க?

அந்தத் தள்ளாத வயதில், தளராத உறுதியோடு "எப்படியாவது என் மகனைப் பிழைக்க வைத்து விடுவேன்" என்ற எண்ணத்தோடு மட்டுமே அந்த வாசலுக்கு அவர் வந்து விட்டார்.

யார் வீட்டு வாசல்?

'எங்க வீட்டுப் பிள்ளை' என்றால் எல்லோருக்கும் தெரியும்.



அந்த அம்மாவின் உதடுகள் சொல்ல முடியாத வார்த்தைகளை அவர் கண்களில் வழிந்த கண்ணீர், வரி வடிவமாகப் வரைந்துக் காட்டியது.

இந்தத் தோட்டத்துத் தூயவரும் தாயின் துயர் அறிந்து உடனே மருத்துவமனைக்கு விரைந்தார். அச்சத்தோடு இருந்த அந்த இளம் டிரைவர், "ஆதரவுக்கு நான் இருக்கிறேன்" என்கிற அன்பான ஆறுதல் மொழிகளைக் கேட்டு நம்பிக்கை விதைகளைத் தன்னுள் விதைத்துக் கொண்டார்.

ஆண்டவன், ஒரு சகோதரனுக்கு இன்னொரு சகோதரன் மூலம் அன்று அச்சத்தை விரட்டினார்.

அந்த இளம் டிரைவருக்குத் துணிவு துணையானது. காலை இழந்தாலும் நம்பிக்கையோடு செயற்கைக் காலின் உதவியால் நடக்கத் தொடங்கினார்.

ஓடிக்கொண்டிருந்த அந்த அன்புச் சகோதரனுக்கு கடை வைத்து ஓரிடத்தில் உட்கார்வதற்கு உதவினார் நம் அன்புத் தலைவர்.

தாய்க்கும், மகனுக்கும் தாங்காத ஆசை என்ன தெரியுமா? தன் தங்கத் தலைவரைப் பார்த்து "நன்றி" என்ற மூன்று எழுத்தைச் சேர்ப்பிக்க வேண்டும் என்பதுதான்.

அப்போது அன்புத் தலைவர் சொன்ன பதில் இது.

"என்னைத் தேடி அந்த அன்னை வந்தபோது தன் பிள்ளைகளில் ஒருவனாகத் தான் என்னைக் கருதினார். ஒரு சகோதரனாகத் தான் அந்தத் தம்பியை நான் நினைத்தேன். நன்றி சொல்ல அவர்கள் வருவதென்றால் நான் அந்நியனாகிவிடுவேன்.

தாயாக, தம்பியாக எப்போது வேண்டுமானாலும் வரலாம். தாய்க்கு ஒழுங்காக ஆதரவு காட்டி அவர் அன்பாக நடத்தினால் போதும்.

அதுவே என்னைப் பார்ப்பதற்குச் சமம்"





# மூகாம்பிகை கோயிலுக்கு மக்கள் திலகம் சென்றது எப்போது?

- அத்தியாயம்: 13



1952ல் தி.மு.கவில் சேரும் வரை நம் புரட்சித்தலைவர் கதராடை அணிந்து தான் காட்சித் தருவார். வீட்டில் பயன்படுத்துகிற எல்லாத் துணிகளும் கதராகத் தான் இருக்கும்.

நம் அன்புத் தலைவரின் பாசத்தாயார் அடிக்கடி திருப்பதி மலைக்குச் சென்று வருவார்.

மிக இளம் வயதில் சில சமயங்களில் அம்மாவை அழைத்துக் கொண்டு அன்புத்தலைவர் திருப்பதி சென்றதுண்டு என்பதை அறிந்திருக்கிறேன்.



ஏசுநாதர் வேடத்தில் நடிக்க வேண்டும் என்ற விருப்பம் இவருக்கு நீண்ட காலமாக இருந்து வந்தது. அப்போதுதான் ‘தலைவன்’ படத் தயாரிப்பாளர் பி.ஏ.தாமஸ் இதை அறிந்தார்.

உடனே ‘இயேசுநாதர்’ படத்தைத் துவக்கினார்.

ஆனால், கதையின் முடிவில் இயேசுவை சிலுவையில் அறைவது போன்ற காட்சியில் என் அன்புத் தலைவர் நடிப்பதை அவரது ரத்தத்தின் ரத்தங்கள் விரும்பவில்லை. அதனால், அந்தப்படம் பூஜையோடு நிறுத்தப்பட்டது.

மூகாம்பிகை அம்மன் மீது அளவு கடந்த பக்தி கொண்டவர் புரட்சித்தலைவர் என்பது ஒன்றும் ரகசியம் இல்லை. 1977இல் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்பு நம் அன்புத் தலைவர் அங்கு சென்று வந்தார். (அதற்கு முன்பும் சென்றிருக்கிறார்). தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது.

வழக்கம் போல் அவருக்குத் தான் வெற்றி.

மூகாம்பிகை அம்மனிடம் நாங்கள் வேண்டிக் கொண்டபடி (அவரது சார்பிலும் நான் வேண்டிக் கொண்டது தான்) வெற்றி பெற்றால் தங்கவாள் சாற்றுவதாக எண்ணியிருந்ததை, அவரிடம் அப்போதே சன்னதியிலேயே சொல்லியிருந்தேன்.

எந்த மறுப்பும் சொல்லாமல் என் கோரிக்கையை ஒப்புக் கொண்டிருந்த அன்புத் தலைவர், தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, ஒரு நாள் காலை இந்தத் தோட்டத்தில் இருந்த தங்க வாளை எடுத்து என் கையில் கொடுத்தார்.

ஏறக்குறைய உறையுடன் சேர்த்து முக்கால் கிலோ தங்கம் உடையது அந்த வாள். அதை எடுத்துக் கொண்டு சென்று மூகாம்பிகை கோயிலில் வணங்கிச் சேர்ப்பித்து விட்டு வரும்படி என்னைப் பணித்தார்.

மூகாம்பிகை அம்மனுக்கு அலங்காரம் செய்யும் நேரத்தில் இப்போதும், ஒவ்வொரு இரவும் அம்மனுக்கு வலது புறத்தில் பரிசளிக்கப்பட்ட இந்த வாளைப் பொருத்துகிறார்கள்.

ஏறக்குறைய நானறிந்து என் அன்புத் தலைவர் பத்துப் பதினோரு முறை மூகாம்பிகை கோயிலுக்குச் சென்றிருக்கிறார். மூகாம்பிகை கோயிலுக்குச் செல்வதால் வயதில் மூத்த குருக்களான மூர்த்தி கணேஷ் பட்டருக்கு முன்கூட்டியே தகவல் தரப்படும். கோயிலில் பூஜை சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களையும் அவரே கவனித்து விடுவார்.

மூர்த்தி கணேஷ் பட்டரின் வீட்டிற்கும் நாங்கள் சென்று இருக்கிறோம். கொல்லூரில் மற்றபடி நாங்கள் வேறு எங்கும் சென்றது இல்லை. அதனால் அந்த ஊர் நிலவரத்தை விரிவாகச் சொல்லும்படி ஒன்றுமில்லை. அவர் முதல்வரான பிறகு ஆண்டு தோறும் மே அல்லது டிசம்பர் மாதத்தில் அந்தக் கோயிலுக்குச் சென்றதுண்டு.

அவரால் போக இயலாதபோது, அவர் சார்பில் நான் தவறாமல் சென்று வந்திருக்கிறேன். அப்படிச் செல்கிறபோது அங்குள்ளவர்களோடு நான் கன்னடத்தில் பேசி நம் அன்புத் தலைவருக்கு பல விஷயங்களை அங்கிருந்து விளக்கி இருக்கிறேன்.

இவர் கோயிலுக்கு வருகிறார் என்பதற்காக, அப்போது பக்தர்களின் வருகையைத் தடை செய்வதை ஒருபோதும் விரும்பியதில்லை.

நம் அன்புத் தலைவர் அங்கு வருகிறவர்களோடு மிக நெருக்கமாகவும், சகஜமாகவும் பழகுவார். கோயிலில் இரவு 'மங்கள ஆரத்தி' என்ற விசேஷப் பூஜை உண்டு. அதிலும், இவர் பக்தர்களோடு பக்தராகக் கலந்து கொள்வார்.

ஆதிசங்கரர் இந்தக் கோயிலுக்கு வந்து அமர்ந்து மூகாம்பிகையை வழிபட்ட இடம் 'சங்கர பீடம்' என்று அழைக்கப்படுகிறது. அந்த இடத்தில் அமர்ந்து நம் தலைவர் வெகுநேரம் தியானம் செய்வார். கடைசியாக நம் அன்புத் தலைவர் மூகாம்பிகை கோயிலுக்குச் சென்றது 1987இல் 'மகா சங்கராந்தி' அன்று தான்.

அன்றைய தினம் கோயிலில் பணி செய்கிற அநேகருக்கு, என்ன நினைத்தாரோ தெரியவில்லை. நிறையவே தானம் செய்தார்.


இந்த ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்காக தினமும் அன்னதானம் அளிக்கப்படுகிறது. அதற்கு நிதி உதவியாக நம் புரட்சித் தலைவர் ஒரு பெரிய தொகையை அளித்திருக்கிறார்.

அவர் நோயுற்றபோது, அவரது ரசிகர் ஒருவர் 7 கிலோ எடையுள்ள வெள்ளிக் குடை ஒன்றை மூகாம்பிகைக் கோயிலுக்கு காணிக்கையாகத் தந்திருப்பதை மூர்த்தி கணேஷ் பட்டர் காட்டினார்.

அதைப் பார்த்து நான் நெகிழ்ந்து போனேன்.

ஒருவருக்காக இன்னொருவர் இவ்வளவு பெரிய தொகையைக் காணிக்கை செலுத்துவது என்பது சாதாரணம் இல்லை என்பதை அறிந்தவள் நான்.





# மக்கள் திலகம் கதாநாயகனாக நடித்த முதல் படம் எது தெரியுமா?

- அத்தியாயம்: 14

நம் அன்புத் தலைவர் எப்போதுமே ரயிலில் தான் பயணம் மேற்கொள்வார். தாயாரின் வார்த்தைக்குக் கட்டுப்படுகிறவர் நமது தலைவர். “விமானத்தில் பயணம் செய்வதைக் கொஞ்சம் விட்டுடுப்பா” என்று அம்மா கேட்டுக் கொண்டதற்கு இணங்க இயன்ற வரை வெகு காலம் அவர் விமானப் பயணத்தைத் தவிர்த்து வந்தார் என்பது பலருக்கும் தெரிய வாய்ப்பில்லை.



இதனாலேயே, கொல்லூர் மூகாம்பிகை கோயிலுக்கும் மங்களூர் வரை விமான சர்வீஸ் இருந்தும் கடைசி வரை கோயிலுக்கு ரயில் மூலமே சென்று வந்தார்.

‘‘தாயைப் போல பிள்ளை’’ என்பார்கள். அந்த அன்னை வளர்த்த பிள்ளை கலைத் துறையில்



ஆரம்பக் காலம் தொட்டு நம்பிக்கையோடு கூடிய நல்லுழைப்பாளராக வளர்ந்து வந்திருக்கிறார்.

தம்மை நடிக்கத்தானே தயாரிப்பாளர் ஒப்பந்தம் செய்திருக்கிறார் என்று கருதாமல் அவர்களுக்கு ஏற்படுகின்ற இடையூறுகளிலும், இன்னல்களிலும் ஒத்துழைப்பு தந்து அவர்களை உயர்த்தியிருக்கிறார்.

தாம் உயர்கிறபோது தன்னை நம்பியவர்களும் உயர வேண்டும் என்கிற எண்ணம் உள்ளவர் என்பதற்கு அவர் என்னோடு கதாநாயகனாக இணைந்த முதல் படமே ஒரு உதாரணம். என் அன்பு நாயகர் முதன் முதலாக கதாநாயகனாக நடித்த படம் 'சாயா'. இந்தப் படம் கொஞ்ச காலம் வளர்ந்து பாதியிலேயே நின்று போனது.

அநேகமாக அவரை அறிந்தவர்கள் 'ராஜகுமாரி' என்ற படம் தான் அவர் கதாநாயகனாக நடித்த முதல் படம் என்று நினைப்பதற்கு அர்த்தம் உண்டு. ஏனென்றால், முதலில் வெளிவந்தது அது. ஆனால் 'மருத நாட்டு இளவரசி' படம் தான் முதன் முதலில் கதாநாயகனாக ஒப்பந்தமாகி நடித்த படம். இந்தப் படம் உருவாகி வெளிவருவதில் சற்று தாமதம் ஏற்பட்டது. அவ்வளவுதான்.

கதாநாயகியாக நான் நடித்து வெற்றிகரமாக அமைந்த முதல் படமும் இதுதான்.

கலைஞர் அவர்கள் கதை, வசனம் எழுதிய முதல் படமும் 'மருதநாட்டு இளவரசி' தான். இந்தப் படத்தை சமீபத்தில் வெளியிட்ட திரையரங்கு ஒன்றில் "மூன்று முதல்வர்களின் முதல் வெற்றிப் படத்தைக் காணத் தவறாதீர்கள்" என விளம்பரம் செய்து இருந்தார்கள் என்று பத்திரிகைகளில் படித்தேன்.

டி.வி.சாரி என்பவர் கதை, வசனம் எழுதுபவர். அவர்தான் இந்தப் படத்தை ஸ்ரீவில்லிபுத்தூர் ஜி.முத்துசாமி அவர்கள் மூலம் படமெடுக்கத் தூண்டியவர்.

மைசூர் பிரீமியர் ஸ்டூடியோவில் படப்பிடிப்பை நடத்தினார்கள். (அதற்கு இப்போது நவஜோதி ஸ்டூடியோ என்று பெயர் என்று நினைக்கிறேன்)

என்ன காரணத்தாலோ டி.வி.சாரி கதை, வசனம் எழுதுவதிலிருந்து நீக்கப்பட்டார். புதிதாக கதை, வசனம் எழுதத் தயாரிப்பாளர் ஆள் தேடிக் கொண்டிருந்த சூழ்நிலையில், இந்தத் தோட்டத்துத் தூயவர் தான், "எனக்குத் தெரிந்து திருவாரூரில் ஒருவர் இருக்கிறார். அவருக்கு கருணாநிதி என்று பெயர். நல்ல எழுத்து வளம் உள்ளவர். அவரை எழுதச் சொல்லலாமே?" என்று கேட்டுக் கொண்டார்.

அப்போது, இளம் வயதுடைய கலைஞரைப் பார்த்துவிட்டு தயாரிப்பாளர் தயங்கினார். ஆனால், எனது அன்பு நாயகர், 'இதய தெய்வம்' அவர்கள் எடுத்துச் சொன்னதை மறுக்க மனமின்றி ஒப்பந்தம் செய்தார்கள்.

ஒரே வாரத்தில் கலைஞர் அவர்கள் முழு படத்திற்கான வசனத்தையும் எழுதிக் கொடுத்துவிட்டார். தயாரிப்பாளருக்குத் தாங்க முடியாத சந்தோஷம்.

தயாரிப்பாளரின் மகிழ்ச்சியை அறிந்தும், தான் அறிமுகப்படுத்தியவரின் திறமையை அவர்கள் உணர்ந்துக் கொண்டது கண்டும், எல்லையில்லா மகிழ்வுக் கொண்டார் நம் இதய தெய்வம்.

என்னை இந்தப் படத்தில் நடிக்க சிபாரிசு செய்த வரும் அவர் தான். டைரக்டர் ஓ.காசிலிங்கம் மற்றும் ஸ்டண்ட் மாஸ்டர், டெக்னீஷியன்கள் பி.எஸ்.வீரப்பா, புளிமூட்டை ராமசாமி, கொட்டாப்புளி ஜெயராமன், திருப்பதிசாமி ஆகியோரை இந்தப் படத்தில் பணியாற்ற ஏற்பாடு செய்தவரே இவர் தான்.

'சாயா' படம் (முதன்முதலில் கதாநாயகனாக நடித்த படம்) பாதியில் நின்று போனதால், இந்தத் தோட்டத்துத் தூயவர் 'மருத நாட்டு இளவரசி' படத் தயாரிப்புப் பணிகளில் தானே ஈடுபட்டார். தயாரிப்பாளரும் அதற்கு ஒத்துழைத்தார்.

மைசூர் நூறடி சாலையில் ஒரு பங்களாவில் எனக்கு என் இதய தெய்வம் கத்திச் சண்டை போடக் கற்றுக் கொடுத்தார். உண்மையில் இதில் வேடிக்கை என்னவென்றால் படத்தில் அவருக்குக் காண்டீபன் என்று பெயர். எனக்கு இளவரசி கதாபாத்திரம். காண்டீபன் சாதாரண இளைஞன். அவருக்கு கத்திச் சண்டை கற்றுக் கொடுத்து, இளவரசியாகிய நான் அவரை வீரனாக்குவதாகக் கதை.

இப்போது நினைத்தாலும் இந்த வேடிக்கை எனக்குள் சிரிப்பை வரவைக்கும். தனக்கு எப்படிக் கற்றுத்தர வேண்டும் என்பதற்குத்தான் அவர் எனக்கு வாள் பயிற்சியே கொடுத்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.





# வறுமையில் இருந்தபோதே விசாலமான மனத்துடன் இருந்தவர்

- அத்தியாயம்: 15

1950ல் அன்புத் தலைவர் 'குமாரி' என்கிற படத்தில் நடித்துக் கொண்டிருந்தார். 'குமாரி' படத்தில் நடிக்கிற காலத்தில் பெரிய வசதி படைத்தவராக இல்லாமல் இருந்தாலும், மனதளவில் விசாலம் கொண்டவராகவே இருந்தார்.

எப்போதும், ஒரு நூறு ரூபாய் நோட்டை தன் முழு கைச் சட்டையில் சுருட்டி செருகி இருப்பார். இது எதற்காக தெரியுமா? சக தொழிலாளர்கள் யாராவது கேட்டுவிட்டால் அவர்களுக்குக் கொடுத்து உதவுவதற்குத் தான்.



'குமாரி'யில் குதிரைச் சவாரி செய்கிற காட்சிகள் நிறையவே உண்டு. பல்வேறு சூழ்நிலைகளில் தனது பராக்கிரமங்களைக் காட்டி, வீர தீர வித்தைகளைப் புரிந்து வேகமாக நடிக்கிறவர், இந்தப் படத்தில் பெரும்பாலும் குதிரையில் ஏறுவதைத் தவிர்த்துத் தான் நடித்தார். அதற்கு ஒரு காரணமும் இருந்தது.

தனக்கு ஏற்படுகிற பாதிப்புகளுக்காகப் பயப்படுகிறவர் அல்ல என் அன்பு நாயகர்.

“நான் இப்போது ஐந்து படங்களில் நடித்துக்கொண்டு இருக்கிறேன். நான் கீழே விழுந்து உடல் ஊனமுற்றால் அந்தத் தயாரிப்பாளர்களும் அல்லவா பாதிக்கப்படுவார்கள்” என்று சொல்லுவார். அதற்காக, அந்தப் படத்தில் அவர் ரிஸ்க் எடுத்துக் கொண்டு நடிக்கவே இல்லை என்று சொல்ல முடியாது.

குதிரை மீது அன்புத் தலைவர் கட்டி அழைத்துச் செல்லப்படுவது போன்ற காட்சி. அந்தக் காட்சியில் “நானே நடிக்கிறேன்” என்று மிகுந்த துணிச்சலோடு நடித்து முடித்துக் கொடுத்தவர் இவர்.

இந்த ராமாபுரம் தோட்டத்துக்கு எதிரே இருக்கிற ஓடையில் தான், அந்தப் படப்பிடிப்பு கூட நடந்தது. நினைத்துப் பார்த்தால் இது ஏதோ இப்போது நடந்தது போல அவ்வளவு பசுமையாக மனசுக்குத் தோன்றுகிறது.

‘மருதநாட்டு இளவரசி’ படம் தயாராகிக் கொண்டிருந்தபோது ‘ரத்னகுமார்’ படம் உருவாகிக் கொண்டிருந்தது. பி.யு.சின்னப்பா ஹீரோ. பெரியவர் கிருஷ்ணன் பஞ்சு அவர்கள் தான் அதன் டைரக்டர். அந்தப் படத்தில் என் அன்பு நாயகருக்கு ஒரு சிறிய வேடம் உண்டு.

மைசூரில் ‘மருத நாட்டு இளவரசி’ படம் தொடங்கிவிட்டதால் ‘ரத்னகுமார்’ படப்பிடிப்பில் கலந்து கொள்ள முடியாத சூழல். இரண்டு படத்திலும் நடித்தாக வேண்டும். எப்படி நடிப்பது? கடைசியில் பெரியவர் கிருஷ்ணன் பஞ்சு அவர்கள்



தான் உதவி, ஒரு வழியாக டெக்னிக்கலாக இவரை மட்டும் வைத்து ‘ஷாட்’ எடுத்து விட்டு உரிய முறையில் சேர்த்துக் கொண்டதாகச் சொல்வார் நம் தலைவர்.

அந்தக் காலத்தில் இது எப்படி சாத்தியமாயிற்று என்று இன்று வரை எனக்குப் புரியாத புதிராகத் தான் இருக்கிறது.



# ராணுவ வீரர்களைக் கௌரவித்த எம்.ஜி.ஆர்!

- அத்தியாயம்: 16

என் அன்பு நாயகருடன் வெளியூர் செல்கிறவர்களுக்கு எவ்விதக் குறைபாடும் இருக்காது. அவரோடு பயணம் செய்கிற மிக எளிய பணியாளர் முதல் வி.ஐ.பி.கள் வரை அவரோடு செல்வதை ஒரு பெரிய விருப்பமாகவே கருதுவார்கள்.

ஒருமுறை காஷ்மீர் படப்பிடிப்புக்குப் போனவர் ஒரு பெரிய ஓட்டலில் தங்கியிருந்தார். அவரோடு போன அவரது படப்பிடிப்புக் குழு உதவியாளர்களையும் அதே ஓட்டலில் தான் தங்க வைத்தார் தலைவர்.

உதவியாளர்களுக்கு அந்த புகழ்பெற்ற ஓட்டலின் ஐஸ்கிரீம் மீது ஆசை வந்துவிட்டது. அங்குள்ள பணியாளர்களிடம் ஐஸ்கிரீம் பற்றி கேட்டதும், அவர்கள் வைத்திருந்த அடுக்கடுக்கான விலையைக் கொண்ட ஐஸ்கிரீம் பட்டியல் வந்தது. கேட்டவர்களுக்கு ஐஸ்கிரீம் மீது இருந்த ஆசையே போய்விட்டது.



மறுநாள் இரவு படப்பிடிப்பு முடிந்து ஓட்டல் அறையில் உணவு உண்டு விட்டு படுத்திருந்தனர். திடீர் என்று அழைப்பு மணி. கதவைத் திறந்தால் விதவிதமான ஐஸ்கிரீம். ஓட்டல் பணியாளர் வாய் பேசாமல் வைத்து விட்டு வெளியே சென்றார்.



படம்: மருதநாட்டு இளவரசி



அறையில் இருந்தவர்களுக்கு ஆனந்தச் சிரிப்பு. யாருக்கோ தரவேண்டிய ஐஸ்கிரீமை மாற்றிக் கொடுத்து விட்டுப் போகிறான் என்று.

அறைக் கதவைத் தாழிட்டு விட்டு சிரித்து மகிழ்ந்தனர். திருப்பித் தரலாம் என்றால் அரைகுறை மொழியில் அதை எப்படி எடுத்துச் சொல்வது என்று புரியவில்லை.

ஐஸ்கிரீம் உருகிக் கொண்டிருந்தது.

'வந்தது வரட்டும்' என்று ஒருவழியாக ஐஸ்கிரீமைச் சுவைத்து மகிழ்ந்தனர்.

மறுநாள் படப்பிடிப்பு.

"என்ன நேற்று ஐஸ்கிரீம் எப்படி?" என்ற குரலைக் கேட்டதும் அந்த அன்பு உள்ளத்தை உணர்ந்து கொண்டார்கள் உதவியாளர்கள். ஓட்டல் பணியாளர்களிடம் எப்படியோ தட்டுத் தடுமாறி ஐஸ்கிரீம் கேட்டது இவருக்கு எப்படித் தெரிந்தது என்று பிரமித்துப் போனார்கள்.

இதேவேளையில் தான் ராணுவ வீரர்கள் என் அன்பு நாயகருக்கு வரவேற்பு கொடுக்க ஆசைப்பட்டனர். அவர்கள் அழைப்பை ஏற்றார் நம் தலைவர். அடுத்த நிமிடம் "இங்கே எனக்குப் பணம் தேவைப்படுகிறது. உடனே யாரிடமாவது வாங்க முடியுமா?" என்று கேட்டார் உடன் வந்திருந்த ஒரு பிரமுகரிடம்.

"உங்களுக்கு எவ்வளவு தேவைப்படும்? எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கும். அப்படி என்ன உங்களுக்கு வந்த இடத்தில் பெரிய தேவை?" கேட்டார் பிரமுகர்.

"இராணுவநலச் சங்கத்திற்கு இருபத்தைந்தாயிரம் தர விரும்புகிறேன். அவர்களின் தியாகத்திற்கு நான் தரும் இந்தத் தொகை மிகமிகக் குறைவு. தென்கோடியில் நாம் சுகமாக வாழ்வதற்கு இவர்களின் உழைப்பு ஒரு காரணம். அதற்கு முன் நான் தரும் தொகை ரொம்ப சாதாரணம். எனக்கு சமாதானம் சொல்லாமல் பணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்கள்" இப்படிச் சொன்னார் நம் இதயதெய்வம்.

சமாதானம் சொல்ல வந்த பிரமுகருக்குப் பேச முடியவில்லை. செயல்படப் போய் விட்டார். உரியவர்களுக்கு நிதி போய்ச் சேர்ந்தது. அந்த இராணுவ வீரர்களும் இதை எதிர்பார்க்கவில்லை.

"யாரும் இப்படி எங்களோடு அன்பாகப் பழகியதுமில்லை. அள்ளித் தந்ததுமில்லை" என்று சில இராணுவத்தினர் குழந்தையைப் போலச் சொல்லத் தொடங்கி விட்டார்கள்.

நம் அன்புத் தலைவர் அங்கிருந்து விடைபெற்றுத் திரும்பும்போது, ஓட்டலுக்குத் திரும்பியவர் அங்கே இருந்த தொழிலாளர்கள் அத்தனை பேரையும் அழைத்தார்.

ஒவ்வொருவருக்கும் இவ்வளவு என உறையில் போட்டு பணத்தைக் கொடுத்தார். இதற்கும் அந்தப் பிரமுகர்தான் பணம் ஏற்பாடு செய்தார்.

போகிற வருகிற இடத்திற்கெல்லாம் பணத்தை மடியில் கட்டிக் கொண்டு போவதில்லை. கையில் பணம் இல்லை என்றால் யாருக்கும் வாரி வழங்குவதில் கொஞ்சம் தயக்கம் இருக்கும். ஆனால் இவர் அப்படி இல்லை. கடன் வாங்கியாவது இப்படி வாரிக் கொடுக்கிற ஒருவர் எனக்குத் தெரிந்து இவர்தான். அடுத்தவர்



மகிழ்ச்சியில் ஆனந்தப்படுவதற்காக அவர் கடன் வாங்கவும் கவலைப்பட மாட்டார்.

உண்டு, உறங்குவது, உழைப்பது போல், தர்மம் செய்வதும் இவரது அன்றாடச் செயல்களில் ஒன்று!

(14.08.1988)






# படித்த பள்ளியும், பழைய நினைவும்!

- அத்தியாயம்: 17

ராமாபுரம் தோட்டத்தைப் பற்றிச் சொன்ன நான், என் அன்பு நாயகர் படித்த பள்ளிக்கூடத்தைப் பற்றியும் சொல்லியாக வேண்டும்.


இவருக்கும் கும்பகோணத்திற்கும் மிக நெருக்கமான தொடர்புண்டு. சகோதரர்கள் இருவருமே ஒன்று சேர்ந்து படித்தது குடந்தை யானையடி நகராட்சிப் பள்ளியில் தான்.

ஒரு காலத்தில் அது வெறும் கூரைக் கட்டடமாக இருந்தது. எதிரே ஒரு குளம் உண்டு. அதைக் 'காயங்குளம்' என்று அழைப்பார்கள். அந்த இடம் காந்தி பூங்காவாக மாறி அதைச் சுற்றிலும் கடைகள் கூட சூழ்ந்துவிட்டது.

பள்ளியிருந்த இடம் 'டவுன்ஹால்' என்கிற இடமாக மாறி விட்டிருக்கிறது. அதன் பக்கத்தில் எல்லாம் கடைகள் எழும்பி விட்டன. இப்போது அதே பள்ளி கொஞ்சம் இடம்பெயர்ந்து நாகேஷ்வரன் வடக்கு வீதி என்ற இடத்தில் இருக்கிறது.



புரட்சித் தலைவரை பள்ளியில் சேர்த்து குடும்பத்திற்கு உதவியாக இருந்தவர் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் பின்னணி பாடும் நாராயணன் நாயர்.



பள்ளியில் இவருடைய தோழர்களாக இருந்தவர்கள் தீனன், சுவாமிநாதன் முதலானோர்.

கும்பகோணத்தில் அசேன், உசேன் என்ற இரட்டையர்கள் குச்சிச் சண்டை, அடிதடி என எல்லாவகையான சண்டைகளும் போடுவார்கள். அவர்களில் ஒருவர் இங்குள்ள திரையரங்கு ஒன்றில் வேலை செய்து வருவதாக தேர்தல் பிரச்சாரத்தின்போது எனக்குச் சொல்லப்பட்டது.

பள்ளியில் நடந்த 'லவகுசா' நாடகம்தான் நாராயண நாயர் மூலமாக மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் என் அன்பு நாயகர் சேரக் காரணமாக இருந்தது என்பதை இவரே சொல்லி இருக்கிறார். பள்ளி வாழ்வை விட்டுவிட்டபோதும், வாழ்க்கையில் பல திருப்பங்கள் நிகழ்ந்தபோதும் சக நண்பர்களாக இருந்தவர்களை அவர் மறந்ததில்லை.

அவர்களுக்கு உதவும் பொருட்டு நாடகம் நடத்தி நிதி உதவிகள் கூட செய்தார்.

'அடிதடி மன்னர்கள்' அசேன் உசேனுக்குக் கூட இவர் உதவி செய்ததுண்டு. ஆனால் அந்தப் பொருளுதவிகளை அவர்கள் தக்க வைத்துக் கொள்ளவில்லை என்பதை அண்மையில் நான் அறிந்தேன்.

1977ம் ஆண்டு, அக்டோபர் இறுதியில் என்று நினைக்கிறேன். கும்பகோணத்திற்கு ஒரு விழாவிற்கு போனபோது தான் ஒரு முதல்வர் என்கிற தகுதிகளுக்கு அப்பாற்பட்டு, பள்ளியின் பழைய மாணவர் என்கிற முறையில், படித்த பள்ளியைப் பற்றி அங்கிருந்த பதிவேட்டில் தன் பெயர், சேர்க்கப்பட்ட மற்ற விவரங்கள் எல்லாவற்றையும் பார்க்க விரும்பினார்.

அப்போது அந்தப் பள்ளியில் தலைமையாசிரியராக இருந்த எஸ்.வெங்கட்ராமனுஜம் அவர்கள் கருத்தோடு இவரது விவரங்கள் அடங்கிய பதிவேட்டைத் தேடி எடுத்துத் தந்திருக்கிறார். அந்தத் தலைமையாசிரியர் கடந்த ஆண்டு தான் அந்தப் பள்ளியிலிருந்து ஓய்வு பெற்றார் என்று அண்மையில் அறிந்தேன்.

குடந்தை முன்னாள் எம்.எல்.ஏ. காசிராமன், குடந்தை நகராட்சிக்கு சேர்மனாகவும் இருந்தவர். அந்த முறையில் என் அன்பு நாயகரைச் சந்தித்து "இந்தப் பள்ளிக்கு உங்கள் பெயரை வைக்க விரும்புகிறோம்" என்றார். ஆனால், அன்பு நாயகரோ அப்போது மறுத்துவிட்டார்.

( 26.02.1989 )







# நெருக்கடியிலும் எங்களை சாந்தப்படுத்தியவர்!

- அத்தியாயம்: 18

எம்.கே.ராதா அண்ணன் மீது நம் அன்புத் தலைவர் பெருத்த மரியாதையும் அன்பும் வைத்திருந்தார்கள். எம்.கே.ராதா அண்ணன் அவர்களைப் பற்றி அவர் சொல்லிச் சொல்லி மகிழ்கிற போதெல்லாம் இதைக் காணலாம்.

'தக்ஷயக்ஞம்' என்ற படத்தில் எம்.கே.ராதா அண்ணன் அவர்கள் நடிக்க ஏற்பாடாகிக் கொண்டிருந்தது. அப்போது பிரபல இயக்குனராக விளங்கியவர் ராஜா சந்திரசேகர்.

அவரிடம் எம்.கே.ராதா அண்ணன் தன் நடிப்பைவிட நம் தலைவரின் நடிப்பை அதிகம் உயர்த்திச் சொல்லி சிபாரிசு செய்தார். ஒப்பந்தமும் ஆனது. முன்பணம் கொடுத்துவிட்டார்கள். திரும்பிவந்து எம்.கே.ராதா அண்ணனைச் சந்தித்தார் நம் தலைவர்.



"நீ நல்லா நடிச்சுட்டு வாப்பா. நான் இந்தப் படத்தில் நடிக்கப் போவதில்லை. இதை நான் முன்பே சொல்லியிருந்தால் என்னால் உங்களுக்கு வருகிற வாய்ப்பு நழுவிப் போய் இருக்கக்கூடும். அதனால்தான்

சொல்லவில்லை” என்று எம்.கே.ராதா அண்ணன் சொன்னதும், நம் அன்புக்குரிய தலைவர் நெகிழ்ந்து போனார்.

‘தக்ஷயக்ஞம்’ படத்தை பி.எல்.கேம்கா என்ற கல்கத்தா பட முதலாளி எடுத்தார். அவரே ‘மாயா மச்சேந்திரா’ என்ற படத்தையும் அடுத்து எடுத்தார். அந்தப் படத்தில் மச்சேந்திரா வேடத்தில் எம்.கே.ராதா அண்ணன் நடித்தார்.

தக்ஷயக்ஞத்தில் தக்ஷனாக நடித்த எம்.ஜி.நடராஜ பிள்ளை மாயா மச்சேந்திராவில் நடிப்பதாக இருந்தது. அவர் ஒரு தேசபக்தர். மன்னார்குடி நகரசபை உறுப்பினராக இருந்தவர். தம் ஊருக்குள் கள்ளுக்கடை, சாராயக்கடை இருக்கக் கூடாது என்று உத்தரவு போட்டவர். அப்படிப்பட்டவர் திடீரென்று இறந்து போனதால், அவரது மறைவுக்குப் பிறகு அந்தப் பெருமைக்குரியவர் நடிக்க இருந்த பாத்திரம் நம் அன்புத் தலைவருக்குத் தரப்பட்டது.

இந்தச் சந்திரனுக்கு அந்தப் படத்தில் சூரிய கேது என்ற வேடம். முதன்முதலாக என் அன்பு நாயகர் கத்திச்சண்டை செய்யக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது இந்த படத்தில்தான் என்று அவரே சொல்லக் கேட்டிருக்கிறேன்.

‘நாடோடி மன்னன்’ ரொம்பப் பிரமாதமாக ஓடிக் கொண்டிருந்த நேரம். சீர்காழியில் இரு நாடகத்தில் நடிக்க நம் அன்புத் தலைவரும் அவரது சகோதரரும் சென்றார்கள்.

ஊருக்குள் நுழைகிறபோது ஒரு இடத்தில் நிறைய கூட்டம். மக்கள் எதையோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். பக்கத்தில் இருந்த நாடகக் கொட்டகைக்குப் போனபின் ஒரு ஆளை அனுப்பிப் பார்த்தால் இந்தத் தோட்டத் தூயவருக்கு மேடையில் அணிவிப்பதற்காக மிகப்பெரிய மாலை ஒன்று கட்டி வைத்திருக்கிறார்கள். அதை வேடிக்கை பார்க்கத்தான் அத்தனை கூட்டம்.

நாடகம் ஆரம்பமானது. நாடகத்தின் பிற்பகுதியில் ஒரு சிறு சண்டைக் காட்சி. குண்டுமணியுடன் இவர் சண்டை போட்டு, அலேக்காக அவரை மேலே தூக்கி கீழே எறிய வேண்டும். அதன்படியே குண்டுமணியை இரண்டு கைகளாலும் தூக்கிப் போட்டார்.

ஆனால் கீழே விழ வேண்டிய குண்டுமணி தவறி, நம் தலைவரின் காலிலேயே விழுந்து விட்டார். ‘க்ளுக்’ என்று சத்தம் கேட்டது. நாடக படுதா விடப்பட்டது.

பார்த்துக்கொண்டிருந்த மக்களுக்கோ, மேடையில் இருந்த சக நடிகர்களுக்கோ ஒன்றும் புரியவில்லை. ஏன் திடீரென்று திரைச்சீலை விடப்பட்டது என்று புரியாமல் குழம்பி, “என்ன ஏன்?” என்று எல்லோரும் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். நிதானமாக “ஒன்றுமில்லை. என் கால் எலும்பு முறிந்துவிட்டது” என்று சொல்லி யிருக்கிறார் தலைவர்.

ஒரே பரபரப்பு. அங்கிருந்தவர்கள் “ஓ”வென்று கதறி அழ ஆரம்பித்து விட்டார்கள். ஊருக்குள் வரும் வழியில் மாலையைக் கட்டி வைத்திருந்தாரே அந்த அன்பர் கூட ஐந்தாறு பேரைக் கொண்டு அரங்கத்திற்குள் மாலையை எப்படியோ கொண்டுவந்து அணிவிக்கக் காத்திருந்தார். சேதி அறிந்து கல்லில் மோதிக் கொண்டு கதறி அழுகிறார்.

நாடகம் பார்க்க வந்திருந்தவர்களில் ஒரு டாக்டர் உடனே மேடைக்கு வந்து நம் தலைவருக்கு முதலுதவி செய்துவிட்டுப் போனார்.



மறுபடி படுதா உயர்த்தப்பட்டு இரண்டு தலையணைக்கு இடையே சாய்ந்துகொண்டு அரங்கத்தில் இருந்த பார்வையாளர்களோடு பேசி சமாதானம் செய்தார் தலைவர்.

அன்று இரவே புறப்பட்டு சென்னை வந்தார்கள். குடும்ப டாக்டர் வந்து பார்த்து, பின் எக்ஸ்ரே எடுத்தார். எலும்பு முறிவு நிபுணர் பி.நடராஜன் அவர்களுடன் கலந்து பேசி, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள ராமாராவ் நர்சிங் ஹோமில் அனுமதிப்பது என்று முடிவு செய்தார்கள்.

ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பியபிறகு 'பெரியவர்' அழுகிறார். நாங்கள் எல்லாம் குழந்தை மாதிரி கதறுகிறோம். இது எப்படியோ தோட்டத்துத் தூயவருக்குத் தெரிந்திருக்கிறது.

பெரியவர் கலங்கிய கண்களோடு, தன்னைத் திடப்படுத்திக் கொண்டு பார்க்கப் போனபோது "என்ன கோழை மாதிரி ஆயிட்டீங்க? அண்ணியாருக்கும் ஜானகிக்கும் நீங்கள் தைரியமாக இருந்து ஆறுதலும் சமாதானமும் சொல்லணும்" என்று அருகே அழைத்துக் கைகளைப் பற்றிக்கொண்டார் என் அன்பு நாயகர்.

கால் முறிவு எப்படிக் குணமாகும்? எப்போது குணமாகும்? இதில் தானே அவரது எதிர்காலமே இருக்கிறது என்று நாங்கள் எல்லோரும் தவித்துக் கொண்டிருக்கும்போது, சிரித்துக்கொண்டே இவர் தன் அண்ணனிடம் பேசியதைக் கண்ட எங்களுக்கு மகிழ்ச்சி, நம்பிக்கை, தைரியம், உறுதி என்று எல்லாமே ஒரு சேரக் கிடைத்த நிறைவு அந்தச் சூழ்நிலையில் ஏற்பட்டது.

( 21.08.1988 )





# எம்.ஜி.ஆர் ஒரு அஷ்டாவதானி!

- அத்தியாயம்: 19

1984ம் ஆண்டு எனது அன்பு நாயகர் உடல்நலங்குன்றி மருத்துவம் பார்ப்பதற்கு முன்பு நாகர்கோவிலில் நடைபெற்ற முப்பெரும் விழாவுக்குப் போனார்.

இலக்கிய நயம் வாய்ந்த விழா. பெரும்புலவர் 'அதன்கோட்டு ஆசான்' அவர்களுக்கு நினைவுச் சின்னமும், நமது காலத்தில் வாழ்ந்திட்ட சதாவதானி செய்குதம்பி பாவலர் அவர்களுக்கு நினைவகமும், பொதுவுடைமை மாமேதை ஜீவா அவர்களுக்கு சிலை திறப்புமான விழா.

கற்றறிந்த மேதையர்கள் மேடையிலும் கீழுமாக குழுமியிருந்தார்கள். தொல்காப்பிய அறிவை பெரும்புலவர்கள் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.



நமது இதய தெய்வம் இறுதியாகப் பேச எழுந்தார். லட்சக்கணக்கான மக்களின் ஆர்வ அலை மோதிக் கொண்டிருந்தது. ஆனால் பெரும் புலவர்களிடையே இருந்த எண்ணமோ வேறுபட்டதாகத்தான் இருந்திருக்க வேண்டும். 'இவர் என்ன அப்படிப் பேசிவிடப் போகிறார்' என்கிற மாதிரிதான் தங்கள் இருக்கைகளில் அமர்ந்திருந்தார்கள்.





இவர் பேச ஆரம்பித்தார். "நான் நாடகத் துறையிலிருந்து சினிமாவுக்கு வந்தவன். நாடகத்தில் 'நவரச நடிப்பு' என்பார்கள் ரவுத்திரம், ஹாஸ்யம், சோகம், காமம், மோகனம் என்று வரிசைப்படுத்திவிட்டு தமிழில் இதனை 'ஒன்பான் சுவை' என்பார்கள். ஆனால் தமிழர்களின் மூல இலக்கண, இலக்கிய நூலாகிய தொல்காப்பியத்தில் ஒன்பது சுவைகள் கூறப்படவில்லை என்று நிறுத்தினார்.

பெரும் புலவர்கள் அத்தனை பேரும் ஆய்வு செய்யாத ஒரு விஷயத்தை அன்று சொன்னார். அறிஞர்கள் அத்தனை பேரும் நாற்காலியின் விளிம்பிற்கே வந்துவிட்டார்கள்.

இதையெல்லாம் பொருட்படுத்தாமல் அவர் தொடர்ந்து பேசினார். "தொல்காப்பியத்தில் சினம், சிரிப்பு, வெகுளி, துன்பம் முதலான எட்டு சுவைகள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. ஒன்பதாவது சுவையான 'மோனம்' அதாவது 'தவம்' அதில் இல்லை. காரணம் 'தவம்' தமிழர்கள் நெறியல்ல. அது மாற்றார் நெறி!"

இப்படி தொடர்ந்து ஏறத்தாழ ஒரு மணி நேரம் ஒரு தொல்காப்பிய விரிவுரையே நிகழ்த்தினார்.

அவர் ஒரு நடிகர். அரசியலில் முதல்வர். இப்படி ஏதோ ஒன்றில்தான் சம்பந்தப்பட்டு இருப்பார் என்று பலரும் நினைத்துக் கொண்டிருப்பார்கள். தான் கற்றதை மட்டுமே துணையாகக் கொண்டு, அறிஞர்கள் அவையிலும் அவர்களை நிறைவு செய்ய முடியும் என்பதற்கு என் நெஞ்சில் நிற்கிற நிஜமான சான்று இவர்.

இளம் வயதில் தன் கையெழுத்திலும் தமிழின் உணர்வு தலை தூக்குவதற்கு ஒருவர் காரணமாக இருந்தார் என்று அவரே சொல்லக் கேட்டிருக்கிறேன்.

அநேகருக்குத் தெரியாத அந்த உண்மையை நான் இங்கே சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி அவர்களும் எனது அன்பு நாயகரும் சிறுவயதில் ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் ஒன்றாக நடித்து வந்தவர்கள்.

அந்தக் காலத்தில் இவர், தன் பெயரை 'எம்.ஜி.ராமச்சந்தர்' என்று தான் எழுதி வருவாராம். இதைக்கண்ட நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ஆர் அவர்கள் "வடநாட்டுக்காரர்களைப் போல பெயர் எழுதுவது நன்றாக இல்லை அழகான தமிழில் எழுதலாமே" என்றார்.

அதன்படியே பிறகு கடைசிவரை கையெழுத்திட்டு வந்தார். இதை தோட்டத்துத் தூயவரே சொல்ல கேட்டு இருக்கிறேன் நான்!

(28.08.1988)



# நம்பிக்கைக்குப் பாத்திரமான நாயகர்!

- அத்தியாயம்: 20

"பெருக்கெடுத்து வரும் சரித்திர வெள்ளத்தின் திசையை மாற்றி அமைக்கும் மாபெரும் சக்தி படைத்த சரித்திர நாயகர்கள் உலகில் எப்போதோ ஒருமுறைதான் தோன்றுகிறார்கள்" என்று லார்டு மெக்காலே எழுதிய பொன்மொழி ஒன்றை பழைய தாய் இதழ் ஒன்றில் படித்தேன்.



இதை எதற்கு சொல்கிறேன் என்பதைத் தொடர்ந்து படித்தால் தெரிந்து கொள்வீர்கள். அ.இ.அ.தி.மு.க. ஆரம்பிக்கப்பட்டு ஆறே மாதத்தில் திண்டுக்கல் இடைத்தேர்தலைச் சந்திக்க நேர்ந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்போது கழகத்தில் சல்லிக் காசு கிடையாது. உழைத்துச் சம்பாதித்ததை ஏழை எளியோர்களுக்கு வாரி இறைத்த வள்ளல் பணம் இல்லாமல் தேர்தலைச் சந்திக்க வேண்டிய சூழல்.



தேர்தல் நிதி திரட்ட தென்மாவட்டங்களில் கூட்டங்களில் கலந்துகொள்ள என் அன்பு நாயகர் புறப்பட்டார். மதுரை விமானதளத்தில் அவருக்குப் பாதுகாப்புக்காக வந்தவர்களின் வண்டி பழுதாகி நின்றுவிட்டது. மாற்று வண்டி உடனே அமைத்துக்கொள்ள அப்போது வசதி இல்லை. இருந்தும், அவர்களை உடன் அழைத்துச் செல்ல இவருக்கோ நேரம் இல்லை.

அடுத்தடுத்து அடுக்கடுக்கான கூட்டங்கள் பாதுகாப்பிற்கு ஒரே நபர். 'ஸ்டண்ட் பார்ட்டி' முத்து மட்டும்தான் விக்கிரமசிங்கபுரத்திலும் காயல்பட்டினத்திலும் உடன் இருந்தார். லட்சக்கணக்கில் திரண்ட கூட்டம். ஊருக்குள் நுழைய முடியாத அளவு கூட்டம். எங்கேயும் மருந்துக்குக்கூட ஒரு போலீஸ் கிடையாது.

தூத்துக்குடி கூட்டம் இரவு '1' மணிக்கு ஆரம்பித்தது. மூன்று லட்சம் மக்கள் இவரது பொன் முகம் காண அந்த நடு இரவுப் பொழுதிலும் கூடியிருந்தனர். அலைமோதும் அந்தக் கூட்டத்தில் இவருக்கு பாதுகாப்பாக இருந்த முத்துவால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

சினிமாவில் பல பேர்களை சாதாரணமாக சமாளித்த நம் தலைவர், உண்மையிலேயே நூற்றுக்கணக்கானவர்களை மிகச் சுலபமாகச் சமாளித்து மேடை ஏறி பேசவும் ஆரம்பித்தார்.

இதற்கிடையில் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதியாக இருந்த பட்டுராஜன் அவர்கள் அருகிலுள்ள காவல் நிலையம் சென்று பந்தோபஸ்துக்கு ஆள் கேட்கப் பறந்தார்.

காவலர்கள் நிறைய குவிக்கப்பட்டு இருந்தபோதும் அசம்பாவிதங்கள் நடந்தால் தான் காவல்துறை உதவி கிடைக்கும் என்ற பதிலைத்தான் அன்றைய காவல் துறையிடமிருந்து பெறமுடிந்தது.

பட்டுராஜன் அவர்கள் கூட்டத்திடலுக்குத் திரும்பியபோது கூட்டம் முடிந்துவிட்டது. எப்படி மேடையேறினாரோ அப்படியே திரும்பவும் வேனுக்கு வந்து சேர்ந்தார் என் அன்பு நாயகர்.

பாளையங்கோட்டை நோக்கி அடுத்த பயணம். தூத்துக்குடி விட்டு 3 மைல் கடந்தாகிவிட்டது. திடீரென்று 'ஸ்டண்ட் பார்ட்டி முத்து எங்கே' என்றார். வேன் உடனே நின்றது. வழக்கமாக டிரைவர் அருகில் அமர்ந்து வரும் முத்துவைக் காணவில்லை. வண்டியை விட்டுக் கீழே இறங்கிய இவர், "முத்து கூட்டத்தில் சிக்கி இருப்பான் போய் கூட்டி வாருங்கள். முத்துவுக்கு என்னவாயிற்றோ" என்ற கவலையோடு பின்னால் வந்த வண்டித் தோழர்களிடம் சொல்ல, கார்கள் அத்தனையும் தூத்துக்குடி பறந்தன. பட்டுராஜன் அவர்கள் காவல்துறையில் நடந்ததைச் சொன்னார்.

அவரை சாந்தப்படுத்தி, "மேலே ஆட்சியாளர்கள் போடுகிற உத்தரவுக்கு அவர்கள் என்ன செய்வார்கள். பாவம் அதிகாரிகள்" என்று சொன்னதோடு தன் பாதுகாப்புக்கு வந்த முத்து வந்து சேருகிறவரை அந்த வண்டியில் கூட ஏறி அமரவில்லை என்றால், அவரது உள்ளம் எப்படிச் சிறந்தது என்பது புரியும்.

அய்யா பெரியாரைப் போலவும், பேரறிஞர் அண்ணாவைப் போலவும் இந்தத் தோட்டத்து தூயவர் கழகத் தோழர்களிடமும், தன்னிடம் ஊழியம் பார்ப்பவர்களிடமும் குடும்பப் பாசத்தோடு இருந்தார் என்பதற்கு இதைவிட இன்னொரு எடுத்துக்காட்டும் உண்டு. அது இதுதான்.

அண்ணாநகர் இடைத்தேர்தல் நடக்கும் சமயம். அப்போது தொழிற்சங்கப் பேரவைச் செயலாளரோடு இணைந்து பணியாற்றிய ஒரு தோழரை காவல் அதிகாரிகள் மிரட்டுகிறார்கள்.

"நாங்கள் நினைத்தால் உன்னை தொலைத்து விடுவோம்" என்று சற்றுக் கடுமையாகவே சொல்கிறார்கள்.

அதற்கு அந்தத் தொண்டர் சொன்னது என்ன தெரியுமா? "அப்படியே செய், செத்தால் உன் குடும்பத்துக்கு 10 ஆயிரம் கிடைக்கும். ஆனால் நான் செத்ததாகக் கேள்விப்பட்டால், என் குடும்பத்திற்கு 20 ஆயிரம் கொடுப்பார்.. என் தலைவர்" என்று சொல்லி இருக்கிறார்.

எவ்வளவு நம்பிக்கை இருந்தால் இந்த வார்த்தைகள் வெளிவரும்? இந்தத் தோட்டத்து தூயவர் என் அன்பின் நாயகர், இந்த நம்பிக்கை ஏற்பட வாழ்க்கையில் எப்படி நடந்து கொண்டிருப்பார் என்று இப்போது நினைத்தாலும் எனக்குச் சிலிர்க்கும்.

( 04.09.1988 )





# மக்கள் திலகத்தின் எல்லையில்லாத அன்பு!

- அத்தியாயம்: 21

சட்டமன்றம் நடந்து கொண்டிருந்த நாட்களில் எல்லாம், என் அன்பு நாயகர் மாலை அல்லது இரவு தோட்டத்துக்கு வந்தவுடன், இளைப்பாறுகிற நேரத்தில் அன்று சட்டமன்றத்தில் நடந்த முக்கியமான நிகழ்ச்சிகளைச் சொல்வதுண்டு.

ஒரு சில நேரங்களில் தான் சந்தித்த தொண்டர்கள், தூய உள்ளம் கொண்டவர்கள், வித்தியாசமான விருந்தினர்கள், வேடிக்கை மனிதர்கள், விதவிதமான அனுபவங்கள் அவர் பேச்சில் வந்துவிழும்.

ஒருநாள், அவரது அமைச்சரவையில் இடம்பெற்ற அமைச்சரான திருமிகு வீராசாமி அவர்கள், சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு முதன்முறையாக அன்றுதான் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறார். 1977 ஆம் ஆண்டு தேர்தலில் கார் விபத்தின் காரணமாகக் கால் ஒடிந்து, கம்பூன்றி தனது தலைவரைக் காண சட்டமன்ற வசந்த மண்டபத்தின் அருகில் நின்றிருந்திருக்கிறார்.



இதைக் கண்ட இந்தத் தோட்டத்துத் தூயவர் அவரை, “இங்கே வா” என்று அன்போடு அழைத்திருக்கிறார். கொஞ்சம் பயம் கலந்த மரியாதையோடு கம்பூன்றியபடி கிட்டே வந்திருக்கிறார்.



அவ்வளவுதான். அவர் ஊன்றி நடப்பதற்கு வைத்திருந்த கம்புகளை இவர் பிடுங்கிக் கொண்டார். அதோடு விடவில்லை இவர், “விபத்து நடந்து எவ்வளவு காலமாகிறது?” என்று கேட்டிருக்கிறார். மூன்று ஆண்டுகள் என்று பதில் வந்திருக்கிறது.

“நீ ஒரு கோழை. மனோதிடம் இல்லாதவன். அந்தக் காலத்தில் என் கால் எலும்பு சுக்குநூறாக முறிந்த மூன்று மாதத்திற்கெல்லாம் நான் ஓடியாடி படங்களில் நடிக்க ஆரம்பித்து விட்டேன். உனக்குத் தன்னம்பிக்கை இல்லையே” என்று கூறி பிடுங்கிய கம்புகளைக் கொடுக்க மறுத்துவிட்டார். வேறு வழியில்லாமல் அவரும் விடைபெற்று சிரமப்பட்டு திரும்பியிருக்கிறார்.

பொன்னான இதயம் தாங்குமா? “வீராசாமி” என்று குரல் கொடுத்துவிட்டு அவரது கைத்தடிகளை தானே அருகில் வேகமாகச் சென்று கொடுத்து, “இது இல்லாமல் நடக்கப் பழகு” என்று மென்மையாகத் தட்டிக் கொடுத்து அவரை வழியனுப்பி வைத்திருக்கிறார். தனக்கு இருக்கும் மனோதிடம் மற்றவர்களுக்கும் வரவேண்டும் என்று இவர் விரும்பினார் என்பதற்காகவே இதைச் சொல்கிறேன்.

இந்தத் தோட்டத்துத் தூயவர் காலில் அடிபட்டு மருத்துவமனையில் இருந்த காலத்தில், செய்யப்பட்ட விமர்சனங்களை இப்போது நினைத்தாலும் வேதனையாகவும் வேடிக்கையாகவும் இருக்கும். இனி அவரால் நடிக்கவே முடியாது. மக்களின் செல்வாக்கு இனி இருக்காது. இத்தோடு இவர் ‘க்ளோஸ்’ என்றெல்லாம் என் காதில் விழும் அளவிற்குக்கூட பேசியவர்கள் இருக்கிறார்கள்.

மூன்றே வாரத்தில் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு வந்தார். பிறகு மருத்துவர்கள் வீட்டிலேயே வந்து கவனித்தனர். பிறகு மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மறு கட்டுப் போடப்பட்டது. 3 மாதங்களுக்குப் பிறகு அவர் படப்பிடிப்பில் கலந்து கொண்டார்.

அப்போது பட அதிபர் லேனா செட்டியாரை அலேக்காகத் தூக்கிக் கொண்டு நிற்க, அந்தக் கம்பீரமான படத்தை பத்திரிகைகள் வெளியிட்டன.



மாற்றானும் மருளும் வண்ணம் சண்டைக் காட்சிகளில் நடித்தார். இதற்கெல்லாம் அவரிடம் இருந்த ஒரே சக்தி, அவர் அன்னை ஊட்டிய 'துணிவு ஒன்றுதான் துணை' என்பதே.

அவருக்கு இருந்த துணிச்சல் எனக்கு இல்லைதான். ஆனால் அவர் இருந்து கொடுத்த தைரியம் எனக்கு உண்டு. முன்பு எனக்கு நடந்தால் மூச்சு வாங்கும். இது ஏன் என்று பரிசோதித்த மருத்துவர்கள் அறுவைச்சிகிச்சைக்கு சிபாரிசு செய்தார்கள்.

நான் கொஞ்சம் பயந்துபோய் காலம் கடத்திக் கொண்டிருந்தேன். சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நான் அவரோடு அமெரிக்காவுக்குச் சென்ற போதுதான் மருத்துவர்களும் இவரும் என்னை மிகவும் வற்புறுத்தி அறுவைச்சிகிச்சைக்கு சம்மதிக்க வைத்துவிட்டார்கள்.

எனக்கு ஆபரேஷன் என்றதும் எனது நகைகளை எல்லாம் கழற்றி என் அன்பு நாயகரிடம் கொடுத்தேன். வாங்குகிறபோதே அவருக்குக் கண்கள் கலங்கியது. நான் கொடுத்த நகைகளை தானே அணிந்து கொண்டு, "என் ஜானு ஆபரேஷனைத் தாங்குவாளா" என்று ஒரு சிறு குழந்தையைப் போல அரை மணி நேரம் அழுதார். ஆபரேஷன் அவசரம். அவ்வளவிற்கும் நடுவில் நான்தான் அவரைச் சமாதானப்படுத்த வேண்டியிருந்தது.

ஆபரேஷன் முடிந்து நான் தனியே வைக்கப்பட்டிருந்தேன். என்னைத் திரும்ப அவர் பார்க்கிற மூன்று நாட்கள் வரையில் கொஞ்சம்கூட சாப்பிடவில்லை. மருத்துவர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் மருந்து மாத்திரைகளைக் கூட சாப்பிட மறுத்துவிட்டார் என்று அறிந்தபின் என் மனசு சங்கடப்பட்டது.

தன்னம்பிக்கையும் துணிவும் இருந்த அவரிடம் என் மீது கொண்டிருந்த அன்புக்கு எல்லையே இல்லை என்பதை இப்போது நினைத்தாலும் நெஞ்சு நெகிழும்.

( 11.09.1988 )





# அன்புக்கு அர்த்தம் எம்.ஜி.ஆர்

- அத்தியாயம்: 22

ஏ.வி.எம்.சரவணன் அவர்களை எல்லோருக்கும் தெரியும். இவரை அநேக நேரங்களில் எனது அன்பு நாயகர் அழைக்கிற விதம் கொஞ்சம் வித்தியாசமாகவே இருக்கும். அவரை அவரது வீட்டில் உள்ள மூத்தவர்கள் “சரவணீ” என்று தான் கூப்பிடுவார்களாம்.

அது எப்படி இவருக்கு தெரிந்ததோ, என்றைக்குத் தெரிந்ததோ, தெரியவில்லை. ஒரு நாள் திடீரென்று அவரை “சரவணீ” என்று அழைத்தார். அவரும் ஆச்சரியப்பட்டார். கொஞ்சம் கூச்ச சுபாவம் உள்ள அவர் என்னவரிடம் நெருங்கி, “சும்மா நீங்க என்னை சரவணன்னே கூப்பிடுங்க சார்” என்று சொல்லியிருக்கிறார்.



“உங்கள் சகோதரர்கள் உங்களை எப்படிக் கூப்பிடுகிறார்கள்? அப்படித்தானே நான் உங்களை அழைக்க முடியும்” என்று இவர் சொல்லி முடித்த பிறகு, சரவணன் அவர்கள் எந்தப் பதிலும் சொல்ல முடியாமல் அந்த அன்பில் கட்டுண்டு போனார்.

'அன்பே வா' படப்பிடிப்பின்போது எல்லோரும் சிம்லாவுக்குச் சென்றிருந்தோம். சரவணன் அவர்களுக்கு நல்ல தொண்டைக்கட்டு. உமிழ்நீரை விழுங்குவதற்குக்கூட அவ்வளவு பாடுபட்டார். "தொண்டையிலும் காதிலும் வலி" என்றார்.

படப்பிடிப்பு முடிந்து திரும்பும்போது சோலன் என்ற இடத்தில் ஒரு உணவு விடுதி அருகே காரை நிறுத்திவிட்டு எல்லோரும் சாப்பிடப் போனார்கள் சரவணனைத் தவிர.

சரவணனோ வந்த காரிலேயே கதவின் கண்ணாடிகளை எல்லாம் ஏற்றிவிட்டு பின்சீட்டில் கால் நீட்டிப் படுத்து விட்டார். படுத்தவரை நித்திரை அன்னை கொஞ்சம் தொட்டுப் பார்த்தாள். அந்த நேரத்தில்தான் கண்ணாடிக் கதவை யாரோ தட்டுகிற சத்தம் கேட்டது. எதிரே பார்த்தால் இவர்தான். மப்ளர் சுற்றிய டம்ளரில் ஆவி பறக்கும் பாலை எடுத்துக்கொண்டு அங்கே நின்றிருந்தார்.



சும்மா நின்றிருந்தாலும் பரவாயில்லை. "நீங்கள் ஏன் சாப்பிட வரவில்லை என்று கேட்டேன். என்னுடன் சாப்பிட வந்தவர்களோ, உங்களுக்குத் தொண்டைப் புண் என்றும் ஜலதோஷம் என்றும் ஆளுக்கு ஆள் சொன்னார்கள். இந்தப் பாலைக் குடியுங்கள். இதமாக இருக்கும். ஒன்றும் சாப்பிடாமல் படுத்துக் கொள்ளக் கூடாது" என்று சொல்லியிருக்கிறார்.

'இந்தப் பாலை எடுத்துவர பல பேர் இருக்கும்போது நீங்கள் ஏன் எடுத்து வந்தீர்கள்' என்று சரவணன் பதறிப் போய் கேட்க, "மற்றவர்கள் கொடுத்தால் நீங்கள் குடிக்க மாட்டீர்கள் என்பதால்தான் நானே கொண்டு வந்தேன்" என்றார். இது இந்தத் தோட்டத்துத் தூயவரின் அன்புக்கு ஒரு மிகச்சிறிய உதாரணம்.

அந்த நல்லவரிடம் நன்றியும், அன்பும் என்றும் நிலைத்திருந்தது என்பதற்கு இன்னொரு உதாரணம் சொல்கிறேன்..

(18.09.1988)



# எம்.ஜி.ஆர். மன்னிப்பு கேட்டது ஏன்?

- அத்தியாயம்: 23

மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் சிறு பிராயத்தில் மக்கள்திலகம் சேர்ந்தபோது அவருக்குக் குருவாக இருந்து நடிப்பு, இசை, நடனம், சண்டைப் பயிற்சி என்று எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்தவர் காளி என்.ரத்தினம்.

அவரிடத்திலும், அவரது மனைவி சி.டி.ராஜகாந்தம் அம்மையார் இடத்திலும் மிகுந்த மதிப்பும் மரியாதையும் இவருக்கு எப்போதும் உண்டு.

சினிமா உலகில் வாழ்க்கை எவ்வளவு சிக்கலானது என்பது அநேகருக்குத் தெரியும். அப்படிப்பட்ட ஆரம்ப காலச் சூழ்நிலையில் இவர்கள் பெரிதும் இவருக்கு உதவி இருக்கிறார்கள்.



ராஜகாந்தம் அம்மையாரை எங்காவது பார்த்துவிட்டால் இவர் 'ஆண்டவனே' என்றுதான், அழைப்பார். அதேபோல அந்த அம்மையாரும் நம் தலைவரை 'ஆண்டவனே' என்று தான் அழைப்பார்.




ஏறக்குறைய இவருக்கும் அந்த அம்மையாருக்கும் ஒரே வயது தான். இருந்தும் இவரை அவரும், அவரை இவரும் ரொம்பவும் மதித்து நடந்தார்கள்.

இந்த அம்மையாரின் மருமகன் தான் திருச்சி லோகநாதன். இவர் முதலில் ஜுபிடர் தியேட்டரில் நடிகராகச் சேர்ந்து, பின் பாடகராக மாறியவர்.

மாடர்ன் தியேட்டர்ஸ் படங்களில் நம் தலைவர் நடித்தபோது அங்கிருந்த லோகநாதனுக்கும் இவருக்கும் அதிகப் பழக்கம். படப்பிடிப்பு இல்லாதபோது இருவரும் கேரம் விளையாடுவார்கள். அப்படி விளையாடும்போது கூட 'தப்பான ஆட்டம் கூடாது, கூடாது' என்பதுதான் நம் தலைவரின் உறுதியான கருத்தாக இருக்குமாம். 'காய்களை அடிப்பது என்ன பெரிய கம்ப சூத்திரம். ஒழுங்காக அடிப்பது தான் முக்கியம்' என்றெல்லாம் அப்போது சொல்வாராம்.

லோகநாதனிடம் அப்போது ஒரு குதிரை வண்டி இருந்தது. அதில் நம் அன்பு நாயகரை சேலத்தில் அவர் தங்கியிருந்த இருப்பிடத்தில் லோகநாதன் அவர்கள் கொண்டுவந்து விட்டுப் போவது வழக்கம்.

திருச்சி லோகநாதன் பாடல் ஒன்று 'நாடோடி மன்னன்' படத்தில் நமது தலைவரால் விரும்பிச் சேர்க்கப்பட்ட பாடல். அந்தப் பாடல் இப்போது எனக்கு நினைவில் இல்லை. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் தான் அந்தப் பாடலை எழுதியவர் என்பது மட்டும் எனக்குத் தெரியும்.

இந்தப் பாடலின் சில வரிகள் அன்றைய காங்கிரஸ் அரசை விமர்சிப்பதுபோல் இருப்பதாகக் கருதி வெட்டித் தள்ளிவிட்டார்கள். அதற்காகப் பின்னர் திருச்சி லோகநாதனிடம், தான் ஏதோ தவறு செய்துவிட்டதைப்போல், பாடல் இடம்பெற முடியாமைக்காக மன்னிப்புக் கேட்டார் இந்தத் தோட்டத்து தூயவர்.

உண்மையில் அவருக்கு இதில் எந்தத் தொடர்பும் இல்லை. இருந்தாலும் அவரது பெருந்தன்மை என்பது இதுதான். தான் நேரடியாகச் சம்பந்தப் படவில்லை என்றாலும், தான் ஒருவருக்குக் கொடுத்த வாய்ப்பு அவருக்கு முழுமையாக எட்டவில்லை என்கிறபோது ஏற்படுகிற மனநிலை அது.

தலைவர், திருச்சி லோகநாதன் அவர்களோடு கேரம் விளையாடியதை மட்டும் தான் முதலில் குறிப்பிட்டேன். அவர் விளையாடுகிற போது நடந்து கொள்கிற விசித்திரமான பழக்கங்கள் நிறைய உண்டு.

(02.10.1988)



# தலையணையைத் தலையில் சுமந்த தலைவர்!

- அத்தியாயம்: 24

மக்கள் திலகம் அவர்களுக்குச் சீட்டு விளையாடத் தெரியும் என்பது அநேகருக்கு ஆச்சரியத்தைத் தரலாம். இவரோடு சீட்டு விளையாட அமர்ந்தால் அவர்கள் யாராக இருந்தாலும் தோற்றுப் போய்விடுவார்கள்.

சீட்டாட்டத்தில் எதெல்லாம் அவருக்குத் தெரியும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவரோடு விளையாடுகிறவர்கள் தோற்றுப் போவார்கள் என்பது மட்டும் தெரியும். கேரம், செஸ் எல்லாவற்றிலும் இவர் தான் முன்னணி.



இந்தத் தோட்டத்தில் முதல் மாடியில் அவர் எப்போதாவது சீட்டாடுவது உண்டு. அநேக சூழ்நிலைகளில் நான் அறிந்தவரையில் காசு வைத்து விளையாடியதில்லை. இப்படி விளையாடுகிறபோது



பந்தயத்தில் தோற்றுப் போகிறவர்களுக்கு ஒரு தண்டனை உண்டு. தோற்றுப் போனவர் அடுத்த ஆட்டம் முடிகிற வரை ஆடாமல், அசையாமல் தலையணையை தலையில் சுமந்தபடி உட்கார்ந்து ஆட வேண்டும்.

பார்ப்பதற்கு ரொம்பக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். காசில்லாமல் ஆடுவதற்கு இந்தத் திட்டத்தை உருவாக்கியவரே இந்த தோட்டத் தூயவர் தான்.

எப்போதாவது ஒரு சில நேரங்களில் இவரும் கூட தன் தலையில் தலையணையைச் சுமந்திருக்கிறார்.

இப்போது கற்பனை செய்துபார்த்தால் உங்களுக்குக் கூட சிரிப்பு வரும். இப்படி விளையாடுகிறபோது நிறைய மோர் அருந்துவார். மற்றவர்களுக்கும் தரச் சொல்லுவார்.

( 09.10.1988 )



# மழைக்கோட்டு தந்த மகராசன்!

- அத்தியாயம்: 25

தலையணையை தலையில் சுமந்த இவருக்கு மிகச்சிறிய வயதிலிருந்தே விளையாட்டில் ஆர்வம் உண்டு.

"சடுகுடு விளையாட்டில் நான் தான் கில்லாடி. மூச்சுப் பிடித்து பாட்டுப் பாடி நடுக்கோட்டைத் தாண்டி எதிர்தரப்புக்குள் புகுந்து சூறாவளியாய்ச் சுற்றிச் சுழன்று, ஏக காலத்தில் எதிரிகள் அத்தனை பேரையும் இழுத்துக் கொண்டுவந்து நடுக்கோட்டை தொடும் வரை 'தம்' பிடித்து நிற்பேன். எதிர்தரப்பினர் அத்தனை பேரையும் 'அவுட்'டாகாமல் திரும்பியதே இல்லை" என்று குழந்தையைப் போல இந்தத் தோட்டத்து நாயகர் என்னிடம் சொன்னது உண்டு.

கிட்டிப்புள், குதிரைக் கல், குறிபார்த்து ஆடும் கோலி விளையாட்டு அத்தனையிலும் இவர் தான் ராஜா.



அந்தக் காலத்திலிருந்த அந்த ஆர்வமே எதிர்காலத்தில் எல்லாவற்றிலும் எதிரொலித்தது. எந்த ஒன்றிலும் தன்னைத் தகுதியுடையவராக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதில் குறியாக இருப்பார்.

குதிரைச் சவாரி பழகிக்கொள்ள வேண்டும் என்று முடிவு எடுத்துவிட்டால் ஸ்டுடியோவில் இருக்கிற குதிரைகளோடு தான் எப்போதும் இருப்பார். இரவும் பகலும் பயிற்சி பெற்று அதில் நிறைவு அடையாமல் அவர் திரும்ப மாட்டார். அது போலவே சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒருமுறை முடிவு செய்தார். அதைக் கற்றுக் கொள்ளாமல் திரும்பவே இல்லை. முதன்முதலில் அவருக்கு சைக்கிள் ஓட்ட கற்றுக் கொடுத்தது யார் என்று கேட்டால், உங்களுக்கு எல்லாம் ஆச்சரியமாக இருக்கும். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்கள்தான் இவருக்கு சைக்கிள் ஓட்ட கற்றுக் கொடுத்தார்.


அது போலவே தன் உடலை வலிமையோடும், கட்டுக்குலையாமலும் என்றும் இளமையாகத் தன்னை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை அவருக்கு எப்போதும் உண்டு. அது எப்படி ஆரம்பமானது என்பதை சிரித்துக்கொண்டே ஒருமுறை சொன்னார்.

“நந்தா ராம் பயில்வான் என்ற நடிகர் இருந்தார். அழுத்தம் திருத்தமாய் அழகாக இருப்பார். அவரைப் பார்த்துத் தான் அவரைப் போலவே நானும் இருக்கணும்னு விசேஷ தேகப்பயிற்சி செய்ய ஆரம்பித்தேன்” என்று சொன்னார்.

இப்படி எந்த துறையை எடுத்தாலும் அதில் ஒரு சிறந்த மனிதரைப் பார்த்துவிட்டால் தானும் அவரைப் போல் ஆக வேண்டுமென்ற உறுதி இவரிடத்தில் இயற்கையாகவே இருந்தது.

எந்த ஒரு நல்லவரைப் போலவும் இவர் ஆகிவிட முடியும். எந்த ஒரு சிறந்த மனிதரை விடவும் இவர் சீரோடு விளங்க முடியும் என்பதே நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் இவரைப் போல் இன்னொருவர் இந்த யுகத்தில் இருக்க இயலுமா? இவருக்கு இவர்தான் உதாரணம். இதை நான் உங்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.





அப்போது ரிக்ஷாக்காரர்கள் மீது ஏகக் கெடுபிடி நடந்து கொண்டிருக்கிறது. ரிக்ஷாகாரர்களுக்கு உரிமம் வழங்கப்படவில்லை என்று ஒருபக்கம் அவர்களின் இயக்கமே நின்று போனது. எது எப்படியோ 'ரிக்ஷாக்காரன்' படம் வெற்றி கண்ட பிறகு சென்னை நகர ரிக்ஷாக்காரர்களை ஒன்றிணைத்து ஏறக்குறைய 6 ஆயிரம் பேருக்கு இந்தத் தோட்டத்தில் இருந்து மழைக் கோட்டுகளை மனமுவந்து வழங்கினார்.

ரிக்ஷா தொழிலாளர்களுக்கு கூட்டுறவு முறையில் ரிக்ஷாக்களை வாங்கிக் கொடுத்து, எந்தத் தொழிலாளியும் எவரிடத்திலும் கைகட்டி நிற்கக் கூடாது என்ற நோக்கோடு, அந்த ரிக்ஷாகளுக்கு அவர்களையே சொந்தக்காரர்கள் ஆக்கினார்.


இன்றைக்கும் அந்தத் தொழிலாளர்களின் மனதில் இது நிச்சயமாக நிறைந்திருக்கும். 'மழைக் கோட்டு தந்த மகராசன்' என்று எனது இதயத்து மன்னரை இந்தத் தொழிலாளர்கள் அன்றுதொட்டு இன்றுவரை போற்றுவதை நான் அறிவேன்.

"இவர்களை முழுவதும் புரிந்து கொண்டவன் நான். இவர்களின் கால்களையும் கைகளையும் வணங்குகிறவன் நான்" என்று என் அன்பு நாயகர் சொன்னதுண்டு.

மக்களால் உயர்ந்தவர்கள் அனைவரும் அதை உரிய முறையில் உணர வேண்டும்.

(16.10.1984)





# விட்டுக் கொடுப்பதில் வெற்றி பெற்றது யார்?

- அத்தியாயம்: 26

இது அக்டோபர் மாதம். அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள் இந்த மாதத்தில் தான் வருகிறது. "காந்திஜி தான் இந்தியா; இந்தியாதான் காந்திஜி" என்பது இன்றையப் பிள்ளைகளுக்கு வேண்டுமானால் அவ்வளவாகப் பிடிபடாமல் போகலாம். அவரது செல்வாக்கு வீச்சுக்கு ஆட்படாத இளைஞர்களே அந்தக்காலத்தில் இல்லை என்று சொல்லலாம்.

நம்மையெல்லாம் என்றைக்கும் ஆளுகின்ற நமது தலைவரான இவரையும் அந்தக் காலத்தில் காந்தியடிகள் ஆட்கொண்டார்.



எப்படி?

மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் முதலாளி சச்சிதானந்தம் பிள்ளை மக்களின் மனப்பான்மைக்கு தக்கவாறு நாடகம் போட்டால் தான் கம்பெனி பிழைக்க முடியும் என்பதை அறிந்தவர். 'கதர் பக்தி' என்ற நாடகத்தை அதனாலேயே தயாரித்தவர். இந்த



நாடகத்தில் வரும் ‘தடியடி’க் காட்சி ஒன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வந்தது.

அதை அறிந்து அந்தக் காட்சி இடம் பெறக்கூடாது என்று ஆங்கிலேய போலீஸ் தடை விதித்தது.

அடுத்தநாள் நாடகக் காட்சி தடியடிக் காட்சிக்குப் பதில் அடுத்த காட்சி நடித்துக் காட்டப்பட்டது. மக்கள் ‘தடியடிக் காட்சியை‘ காட்டு என்றார்கள். தயாராக நின்ற போலீசாரோ “காட்டாதே” என்றார்கள். கடைசியில், தடியடி நடத்தி அன்றைய கூட்டத்தை போலீஸ் கலைத்தது. பொதுமக்களின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டு, அந்தக் குறிப்பிட்ட காட்சி இல்லாமல் தொடர்ந்து எப்படி நாடகத்தை நடத்த முடியும்?

அதே ‘கதர் பக்தி’ ‘மகாத்மா காந்தியின் உத்தரவுபடி தடியடிக் காட்சி இல்லாமல் நாடகம் நடக்கும்‘ என்று விளம்பரம் செய்யப்பட்டது. மக்கள் பேராதரவு மறுபடியும் கிடைத்தது. மகாத்மாவின் உத்தரவு என்றதும், மக்கள் கண்களை மூடிக்கொண்டு ஏற்றுக் கொண்டார்கள்.

இதைக் கண்டார் அந்த நாடகக் குழுவில் இருந்த என் அன்பு நாயகர்.

அன்று முதல் நமது இதய தெய்வத்தின் இதயத்தில் காந்தியடிகள் அழுத்தமாகப் பதிந்து போனார். மக்கள் எவ்வளவு ஆழமான பிடிப்பை அந்தத் தேசத் தந்தையின் மீது வைத்திருந்தால் அவரது வார்த்தைக்குக் கட்டுப்பட்டுக் கிடப்பார்கள்?

இதுதான் காந்தியின் மீதும், காந்தியத்தின் மீது ஏற்பட்ட ஆரம்பப் பிடிப்பு. அன்றைக்கு ஏறக்குறைய அவருக்கு வயது 13. இதெல்லாம் அவரே ஒரு முறை என்னிடம் சொன்னது தான். அதை இன்றைய தினம் நினைத்துப் பார்த்தேன். அவ்வளவே..

கவியரசர் கண்ணதாசனுக்கும் இவருக்கும் அநேக முரண்பாடுகள் இருந்தது உண்டு. ஆனால் அதையெல்லாம் மீறிய அன்பும், மனிதநேயமும் அரவணைத்துச் செல்லும் மாண்பும், ஒருவரை ஒருவர் மதிக்கும் மாண்பும் இரண்டு பேரிடத்திலுமே நிரம்ப இருந்தது.

இந்தத் தோட்டத்து நாயகரை கவியரசர் கண்ணதாசன் எவ்வளவு உயர்ந்த இடத்தில் வைத்திருந்தார் என்பதற்கு இவரைப் பற்றி கவியரசரே சொன்னது இது.

"மக்களைப் பற்றி அவர்களின் மனோபாவத்தைப் பற்றி மக்களிடையே மரியாதைக்குரிய பாத்திரம் எது என்பது பற்றி நன்கு அறிவார்.

சினிமா பாத்திரத்திற்கும் சாதாரண வாழ்க்கையில் நடக்கிற நிகழ்ச்சிகளுக்கும் தொடர்பு இருப்பதாகக் கருதிய ஒரே கலைஞர் அவர்தான். அந்த நம்பிக்கைக்கு ஏற்பத்தான் காட்சிகளையும் கதைகளையும் அமைப்பார்" என்று ஒருமுறை கவியரசர் கண்ணதாசன் அவர்கள் சொன்னது இப்போதும் என் நினைவில் உண்டு.

அதோடு இருவருமே பெருந்தன்மையில் போட்டி போட்டுக்கொண்டு உயர்ந்து நிற்பவர்கள் என்பதற்கு உதாரணம் கூட உண்டு.

'உரிமைக்குரல்' படம். அதில் ஒரு பாட்டு, "விழியே கதை எழுது".

இந்தப் பாடலை கவிஞர் வாலி அவர்கள் எழுதியதாகவே இசைத்தட்டில் பதிவாகியிருக்கும். ஆனால் இப்பாடலை எழுதியவர் கவியரசர் கண்ணதாசன். என் அன்பு நாயகருக்கும் கவியரசருக்கும் உறவு சரி இல்லாத ஒரு சூழலில், "இந்த நேரத்தில் கவிஞரிடம் பாடல் வாங்கி இருப்பது தெரிந்தால் தலைவர் நடிக்க முடியாது" என்று சொல்லி விடுவாரோ என்கிற அச்சத்தை இயக்குநர் ஸ்ரீதருக்கு யாரோ சிலர் ஏற்படுத்தி விட்டார்கள்.

ஸ்ரீதர் அவர்களும் கொஞ்சம் பயந்துபோய் கவிஞரிடமே விஷயத்தைச் சொல்லி இருக்கிறார். ஆனால், கவிஞரோ, "அதனால் என்ன? பாடலில் என் பெயரைப் போட வேண்டாம். வாலியின் பெயரையே போட்டுக் கொள்ளுங்கள். நான் வாலிக்கு போன் செய்து சொல்லிவிடுகிறேன்" என்று பெருந்தன்மையோடு சொல்லியிருக்கிறார்.

அப்புறம்?

ஆனால் நம் பொன்மனச் செம்மலுக்கா புரியாது? "இந்தப் பாடல் வரிகளைப் பார்த்தால் வாலியின் பாடல் மாதிரி இல்லையே, கண்ணதாசன் பாடல் மாதிரி அல்லவா இருக்கிறது" என்று கேட்டிருக்கிறார்.

இயக்குனர் ஸ்ரீதர் விஷயத்தைச் சொல்ல தலைவரோ, "ஒருவர் எழுதிய பாடலில் வேறு ஒருவர் பெயரைப் போடுவது பெரிய தவறல்லவா? கவியரசர் பெயரையே போடுங்கள்" என்று சொல்லிவிட்டார்.

அப்புறமென்ன?

மகிழ்ச்சியோடு திரைப்படப் பெயர் பட்டியலில் அவர் பெயரைச் சேர்த்தார்கள். இசைத்தட்டில் மட்டும் வாலியின் பெயரோடு அப்பாடல் வெளிவந்துவிட்டது.

கவியரசரும் சரி, நம் தலைவரும் சரி ஒருவர் விஷயத்தில் ஒருவர் ரொம்பவும் பெருந்தன்மையோடு விட்டுக்கொடுக்கும் உள்ளம் கொண்டவர்கள் என்பதற்கு இதைவிட வேறு உதாரணங்களா வேண்டும்?

(23.10.1988)





# புரட்சித் தலைவரோடு புதைந்து போன ரகசியம்!

- அத்தியாயம்: 27

அக்டோபரில் அவதரித்த அண்ணலின் மீதும், அதே மாதத்தில் மறைந்த கவியரசர் மீதும் என் அன்பு நாயகர் கொண்டிருந்த மரியாதையையும் அன்பையும் பற்றிச் சொன்னேன் அல்லவா?

இந்த அக்டோபர் மாதத்தில் தான் உலகின் பல புரட்சிகள் நடந்திருக்கின்றன.

1972 ஆம் ஆண்டு இதே மாதம் தி.மு.க.விலிருந்து இவர் விலக்கப்பட்டார். தெரிந்தோ, தெரியாமலோ தி.மு.கவில் அன்று நடந்த இந்த நிகழ்ச்சி சரித்திரத்தில் ஒரு பெரிய மாறுதலைத் தந்தது.

அ.இ.அ.தி.மு.க. ஆரம்பிக்கப்பட்ட குறுகிய காலத்திலேயே திண்டுக்கல் தேர்தல் வந்தது. வெற்றிக்கனி இவர் மடியில் விழாமல் இருக்குமா? திண்டுக்கல் தேர்தலில் இவருக்கே வெற்றி.



1977ல் கட்சி ஆரம்பித்த குறுகிய ஆண்டுகளுக்குள் ஆட்சியைப் பிடித்தார். இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்த கதைதான். நான் இதைச் சொல்ல வந்த காரணமே வேறு. அரசியலில் புரியாத புதிராக இருந்து வந்த புதிருக்கான விடையை இன்றுவரை யாரும்

கண்டுகொள்வதற்குள்ளாகவே கண்மூடிவிட்ட அவதார புருஷர் இவர் என்று தோன்றியதாலேயே இதைச் சொன்னேன்.

ஆரம்ப காலத்தில் காந்தியத்தின் மீது பற்று கொண்ட இவர், கதர் கட்டி வாழ்ந்தவர். காங்கிரஸ் இவரைக் காப்பாற்றி வைத்துக் கொள்ளவில்லை. 1952 வாக்கில் பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிமுகம் எனது நாயகருக்குக் கிடைத்தது.

அதைப் பேரறிஞர் அண்ணா அவர்களின் வார்த்தையில் சொல்வதானால் "இந்தக் கனி தங்கள் மடியில் விழாதா என்று பலரும் காத்திருக்க, அது என் மடியில் விழுந்தது. அதை நான் என் இதயத்தில் வைத்துக் கொண்டேன்" என்றார். அதுதானே உண்மையாயிற்று!

1958ல் 'நாடோடி மன்னன்' படத்தைத் தயாரித்து, படத்தின் தொடக்கக் காட்சியில் (எம்ஜிஆர் பிக்சர்ஸ் சின்னமாக) ஒரு ஆணும் பெண்ணும் தி.மு.க கொடியை ஏந்தி நிற்கும் வடிவத்தில் அறிமுகப்படுத்தி 'கழகம்' எல்லோர் கண்களிலும் படும்படி செய்து, அதை மக்கள் மனதில் நிலைக்க வைத்தார்.

அவர் என்ன செய்வார்? எப்படிச் செய்வார்? எதைச் செய்வார் என்று சரியான முடிவுக்கு ஒருவர் வருவதற்குள், எப்படியோ அதைச் சாதனையாக்கிக் காட்டியிருப்பார்.

இவர் ஒரு வேலையை எடுத்துச் செய்யும் பாணியே தனியானது. திமுகவிலிருந்து வர் வெளிவந்த பிறகு சில யோசனைகளை, இவருக்குப் பலபேர் சொன்னதுண்டு. அடுத்து என்ன செய்யப் போகிறார் என்று அநேகர் எதிர்பார்த்திருந்தார்கள். சட்ட நிபுணர்களை எல்லாம் சந்தித்துப் பேசி முடிவு கண்டிருந்த நேரம்.

ஒரு நாள் அவர் மேஜை மீது இருந்த தி.மு.க. கொடியையும் பேரறிஞர் அண்ணா படத்தையும் மாறி மாறிப் பார்த்தார். அடுத்த ஓரிரு நாட்களில் அ.தி.மு.க.வின் கொடி உருவானது. ஒரு தலைவரின் படத்தை கொடியில் போடலாமா? என்று கேட்டவர்கள் கூட உண்டு.

"என் அண்ணாவுக்கு கொடியில் இடமளித்து, அவரை உயர்ந்த இடத்தில் வைத்திருக்கிறேன்" என்று ஒரே வரியில் பதிலளித்து விட்டு, அந்த இடத்திலிருந்தே அவர் நகர்ந்ததை நான் அறிவேன்.

அவரது வேகத்துக்கு உதாரணமாக இதைச் சொன்னேன்.

முடிவை எடுப்பார் முடிப்பார்.

இது தான் இந்த ராமாபுரத்தாரின் ரகசியம்.

( 30.10.1988 )



# நம்பியவருக்கு நல்லது செய்யும் நட்சத்திரம்!

– அத்தியாயம்: 28

பேரறிஞர் அண்ணாவின் இதயத்தில் இடம்பெற்ற இதயக்கனி பற்றிச் சொன்னேன். இதயக்கனி என்றதும் 'இதயக்கனி' படத்தை இயக்கிய இயக்குநர் ஏ.ஜகன்நாதன் என் நினைவுக்கு வந்தார்.

இந்த ஜெகநாதன் ஒரு காலத்தில் உதவி இயக்குநராக இருந்தவர். அனேகமாக என் நினைவுக்குப் பட்ட வரையில் 'கொடுத்து வைத்தவள்' படம் என்று நினைக்கிறேன். அதன் இயக்குநர் ப.நீலகண்டன் அவர்கள். அப்போது அவருக்கு உதவி இயக்குநராக இருந்தவர் ஜகன்நாதன்.



எனது அன்பு நாயகருக்கு அந்தப் படத்தில் ஜோடியாக நடித்தவர் ஈ.வி.சரோஜா. நல்ல மன நிலையில் இருக்கிற கதாநாயகனுக்கு திடீரென்று சித்தம் தடுமாறுகிற மாதிரியான காட்சி.

அந்தக் காட்சியில் இந்தத் தோட்டத்துத் தூயவரை ஒரு குளோசப் காட்சியில் மட்டுமே காட்டுவார்கள். ஆனால் அவரது ஜோடியான ஈ.வி.சரோஜாவை

ஏறக்குறைய ஏழெட்டு ஷாட்டுகளுக்கு மேல் காட்டி அந்த அதிர்ச்சியான சூழ்நிலையை விளக்குவார்கள்.



இதைக்கண்ட எனது நாயகர், "கதாநாயகனுக்கு ஒரே ஒரு குளோசப் ஷாட். கதாநாயகிக்கு ஏழெட்டு ஷாட்களா? புரியலையே" என்று நீலகண்டன் சாரிடம் கேட்டார்.

"உங்களை மனநிலை பாதித்தவராகக் காட்டினால் ரசிகப் பெருமக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதற்குத்தான் கதாநாயகி அதிர்ச்சி அடைகிற மாதிரி காட்டி, அதிக குளோசப் ஷாட்டுகள் வைத்தோம்" என்று சொல்லியிருக்கிறார்.

அடுத்தது பாதிக்கப்பட்ட மனநிலை தெளிவு பெறுகிற மாதிரியான காட்சியில் எனது நாயகருக்கு அதிக குளோசப் ஷாட்டில் வைத்து அந்த வீட்டில் உள்ள எல்லோரையும் இனம்கண்டு கொள்கிற மாதிரி காட்சிகள் அமைத்தார்கள். இந்த இடத்தில் சகோதரி ஈ.வி.சரோஜாவுக்கு ஒரே ஒரு ஷாட் தான்.

அப்போதும் இவர், "கதாநாயகனுக்கு அதிக குளோசப் ஷாட்டுகளா?" என்று வேடிக்கையாகக் கேட்க, அங்கிருந்த உதவி இயக்குநர் ஜெகநாதன் "அண்ணனுக்கு முன்னே இருந்த குறை இப்ப தீர்ந்து போச்சு" என்று தனக்கே உரிய இளமைத் துருதுருப்பில் வாயை விட்டுவிட்டார்.

ஜகன்நாதனை இவர் எப்போதும் 'ஜெகு' என்றுதான் அழைப்பார். அந்த வகையில் எனது நாயகரோ கொஞ்சம் பொய்யான கோபத்தோடு, "ஜெகு உன் ஜாதகம் என் கையில்" என்று ஒரு பார்வை பார்த்தபடி சொல்லியிருக்கிறார்.

வேறொரு இயக்குநராக இருந்தால் அங்கேயே உதறல் எடுத்திருக்கும். ஜகன்நாதனோ இவரிடத்தில் அன்பும் உரிமையும் எடுத்துக் கொள்கிற இளைஞர். அதனாலோ என்னவோ உடனே, "மிகச்சிறந்த இடத்தில் என் ஜாதகம் இருக்கிறது. இனிமேல் எனக்கென்ன கவலை?" என்று பட்டென்று சொல்லிவிட்டார்.

இதயக்கனியின் இதயத்தில் லட்சோப லட்சம் இளைஞர்களுக்கு இடம் உண்டு. அதில் இந்த ஜெகுவும் ஒருவர்.

"எனக்கு மிகப்பெரிய பொறுப்பை அல்லவா நீ கொடுத்துவிட்டாய்" என்று அவரைப் பிடித்துத் தட்டிக் கொடுத்துவிட்டு தோட்டத்துக்கு அன்று வந்தவர், 'மணிப்பயல்' படத்தில் அவரை இயக்குநராக்கும் வாய்ப்புக்கு அஸ்திவாரம் போட்டார். அப்புறம் 'இதயக்கனி' படத்திலும் அவரை இயக்குநராக இருக்கச் செய்தார்.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் இவரை நம்பியவர்களின் ஜாதகங்கள் எப்போதுமே நல்ல ஜாதகங்களே. நம்பியவர்களுக்கு நல்லது செய்வதில்



அளவுகோலே இவரிடம் இருந்தது இல்லை.

காலமும் நேரமும் கனிந்து வருகிற வரையில் அடுத்தவர்களுக்காக இவர் காத்திருந்து அதைப் பெற்று அவர்களுக்குத் தருவதில்தான் இந்தத் தோட்டத்து நாயகருக்கு எப்போதும் மகிழ்ச்சி.


திறமையுள்ள எவரையும் இவர் ஒதுக்கியதும் இல்லை. ஒழித்ததும் இல்லை. இதுதான் உண்மை. அவர் இருக்கிற எல்லைக்குள் எவரும் துணிந்து சிகரெட் பிடித்து விட முடியாது. இவருக்கு மூக்கில் அப்படி வேர்க்கும். கோபம் கொப்பளிக்கும்.

அப்புறம்?

(06.11.1988)







# இயேசுவாக நடிக்க ஆசை

- அத்தியாயம்: 29

"ஏழைப் பங்காளரான இவருக்கு இயேசுபிரானாக நடிக்க வேண்டும் என்ற ஆசை நிறைந்திருந்தது உண்மை. அரசியலில் ஈடுபாடும் அதைத் தொடர்ந்து வந்த ஆட்சிப் பொறுப்பும், அந்த எண்ணத்துக்கு முற்றுப்புள்ளியாக முடிந்து போய்விட்டது.

அவர் முயற்சி செய்து முடியாதது என்று எதுவும் இல்லை. 1958 ஆம் ஆண்டு 'நாடோடி மன்னன்' படத்தைச் சொந்தமாகத் தயாரித்தார். இந்தப் படத்துக்கு இயக்குனர் இவரே. இதில் பாதிப் படம் கருப்பு வெள்ளைப் படமாகவும், மீதி வண்ணப் படமாகவும் வெளிவந்தது.

இந்தப் படத்துக்காகப் பல லட்சங்களை முதலீடு செய்தார். "இத்தோடு இவர் கவிழ்ந்தார்" என்று ஏளனம் செய்தவர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள்.



ஆனால் சென்னை நகரில் ஏதோ ஒரு மூலையில் இருக்கிற ஏதாவது ஒரு தியேட்டரில் இப்போது வெளி யிட்டாலும், எத்தனைக் காட்சிகள் வேண்டுமானாலும் 'ஹவுஸ்புல்' காட்சியாக வசூலில் வரலாறு படைக்கும் படம் இது. இந்தப் படம் தயாராகிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் எனது அன்பு நாயகரிடம் ஒருவர், "இந்த



நாடோடி மன்னன் வெற்றி பெறுவானா?” என்று கேட்டார்.

அப்படிக் கேட்பதற்கு அவருக்கு எப்படித் துணிச்சல் வந்தது தெரியவில்லை. அப்போதும், இவர் அதற்கு அமைதியாகப் புன்னகை மாறாமல் சொன்ன பதில் என்ன தெரியுமா? “இந்தப் படம் வெற்றி பெற்றால் மன்னனாகி விட்டுப் போகிறேன். வெற்றி பெறாவிட்டால் நாடோடியாகி விட்டுப்போகிறேன்” என்று சொன்னார். அவர் மாமன்னர் ஆனாரா அல்லது நாடோடியாக மாறினாரா என்று மக்கள் அறிவார்கள்.

இதை எதற்காகச் சொல்ல வந்தேன் என்றால் எடுத்ததைச் சாதிக்கிற இதயம் கொண்டவர் இவர். இருந்தும் இயேசுநாதராக நடிக்க விரும்பிய ஆசைக்கு இவர் விடை கொடுத்ததற்கு அவர் மட்டுமே காரணம் இல்லை.

அவர் ஏற்றுக்கொண்ட அதிகப்படியான அரசியல் பொறுப்புகளும் காரணமாகி விட்டது.

பஞ்சாபியர்கள் ஒருமுறை தமிழ்நாட்டிற்கு வந்து ‘பங்கரா டான்ஸ்’ கலை நிகழ்ச்சியை நம் சென்னை நகரில் நடத்தினார்கள். அந்த நடனக் குழுவைச் சேர்ந்தவர்கள், இந்தத் தோட்டத்து நாயகர் அவர்களின் நிகழ்ச்சியைக் கண்டுகளிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்.

அந்த ஆசை நியாயமானதும் கூட.

இவர் ஒரு மாநிலத்தின் முதல்வர் என்பதைவிட, ஒரு சிறந்த கலைஞர்; கலா ரசிகர் என்று அவர்கள் உணர்ந்ததே அதற்குக் காரணம்.

அந்த நிகழ்ச்சியைக் கண்டு களித்தது மட்டுமல்ல, அவர்களோடு சேர்ந்து ஆடி, அவர்களையே அசத்தியவர் இவர் என்பதில் தான் அன்றைய நிகழ்ச்சியைக் காண வந்தவர்களுக்கு அதிசயம் அதிர்ஷ்டம்.

‘குடியிருந்த கோயில்’ படத்தில் ‘ஆடலுடன் பாடலை கேட்டு’ என்ற பாட்டுக்கு இவர் ஆடிய காட்சி உங்கள் மனக் கண்முன் இந்நேரம் வந்திருக்குமே!

( 13.11.1984 )



# ஈரமுள்ள பூமியில் தான் பயிர் வளரும்

- அத்தியாயம்: 30

எனது அன்பு நாயகர் நிறைய நூல்களை வாங்கிப் பாதுகாக்கும் பண்புடையவர். அப்படி அவர் தொகுத்து வைத்திருக்கிற அரிய பொக்கிஷங்கள் இப்போதும் மெருகு குலையாமல் பாதுகாக்கப்படுகிறது.

நல்ல புத்தகம் என்று கேள்விப்பட்டுவிட்டால் போதும், அந்தப் புத்தகத்தையும் அந்தப் புத்தகத்தின் ஆசிரியரையும் தேடிக் கண்டுபிடித்து கௌரவிக்கத் தயங்க மாட்டார்.

அதைப் போலவே தமிழிலுள்ள அரிய சொற்களுக்கும் நிறையப் பொருள் காண வேண்டும் என்று ஆர்வம் காட்டுவார்.



திரு.பரந்தாமன் அவர்கள் கலைவாணர் மீது பக்தி கொண்ட எழுத்தாளர். பண்புள்ள பத்திரிகையாளர். கலைவாணரைத் தொடர்ந்து எனது அன்பு நாயகரிடத்தும் பேரன்பு காட்டுகிறவர். ஒரு சமயம் அவரிடத்தில் ஒரு சொல்லுக்கு பொருள் கேட்டார் என் அன்பு நாயகர்.



அந்தச் சொல் 'சம்சாரம்' என்பதாகும்.

அதற்கு பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே நடக்கும் பயணம் என்று கலைக் களஞ்சியத்திலிருந்து பொருள் கண்டு சொன்னார் பரந்தாமன் அவர்கள். உடனே அந்த கலைக்களஞ்சியத்தை வாங்கி வரச் செய்து தனது நூலகத்தில் சேர்த்து விட்டுத்தான் மறுவேலை பார்த்தார் என் அன்பு நாயகர்.

திரு.பரந்தாமன் அவர்கள் எனக்குத் தெரிந்து முப்பது ஆண்டுகளாக கலைவாணர் அவர்களைப் பாராட்டி விழா எடுத்தவர்.

அந்தப் பரந்தாமன் தான் இந்த தோட்டத்துத் தூயவரின் மீது கொண்ட தூய்மை மாறாத அன்பின் காரணமாக, நமது தலைவர் மறைவுக்குப் பிறகு மாதந்தோறும் ஒரு நினைவஞ்சலி நிகழ்ச்சியை நடத்தி வருகிறார் என்று அறிகிறேன். அது ஒவ்வொரு மாதமும் 26 ஆம் தேதி, மயிலை சீனிவாச சாஸ்திரி ஹாலில் மாலை வேளையில் அந்த விழா நடைபெற்று வருகிறது.

இதை நான் இங்கு சொல்வதற்குக் காரணம் இந்தத் தோட்டத்தின் பாதை மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிற இதயங்கள் இருக்கின்றன என்பதை தான் உணர்ந்ததாலேயே என்னவோ,

கடைசிவரை கலைவாணர் அவர்களின் குடும்பத்திற்கு எந்தவித இடையூறும் வந்துவிடக்கூடாது என்று, கண்ணை இமை காப்பது போல் அவர் குடும்பத்தைப் பார்த்து, தனது நன்றி மறவா தன்மையை காத்துக் கொண்டார் என் நாயகர்.

'மீனவ நண்பன்' படப்பிடிப்பு மங்களூர் கடலோரப் பகுதியில் நடைபெற்று வந்த நேரம். இவரும் படப்பிடிப்பு குழுவில் இருந்த சிலரும் மணிபாலில் ஒரு ஓட்டலில் தங்கியிருந்தனர்.

படத்தில் பங்கு கொள்கிற அத்தனைப் பணியாளர்களிடமும் இவர் அன்பாகவும்

ஆதரவாகவும் இருப்பார் என்பது இவரது படத்தில் பணிபுரிந்தவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும். அவர்கள் தங்கியிருக்கும் இடம், சாப்பாடு வசதி என்று எல்லாவற்றையும் விசாரித்து அறிவார்.

அதுபோலவே ‘மீனவ நண்பன்’ படத்தில் தாயாக நடித்த மரகதம்மாள் என்பவரிடம் விசாரித்திருக்கிறார்.

அவர் ஒருமுறை நம் நாயகரை “தம்பி” என அழைத்துள்ளார்!

மேலும் பேசத் தயக்கம் அந்த அம்மாவுக்கு.

“என்னம்மா ஏதாவது வசதிக் குறைவா உங்களுக்கு?” இவர் கேட்கிறார்.

“இல்லை தம்பி, வந்து.. நீங்க தங்கி இருக்கிற இடத்தில் மீன் எல்லாம் நல்லதா கிடைக்கிறதா” சொல்லமுடியாமல் நிறுத்தினார் அந்த அம்மா.

“என்னம்மா மீன் சாப்பிடணும் அவ்வளவுதானே?”

“நீங்க எத்தனை பேர் தங்கி இருக்கீங்க” என்றதும், அந்த அம்மா சுமாராக ஒரு கணக்கைச் சொல்ல, இரவு சாப்பாட்டு நேரம் எல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டு, அன்று இரவு அண்டா நிறைய மீன் குழம்பை அவர்கள் தங்கியிருந்த ஓட்டலுக்கு அனுப்பி வைத்தார் இவர்.

இது ஒரு மிகச் சாதாரண விஷயம்தான் என்றாலும் தன்னைச் சுற்றிப் பணிபுரிகிற பணியாளர்களைப் பராமரிக்கிற பண்பு எத்தனை பேருக்கு வரும்?

அது ஒரு தயாரிப்பாளரின் வேலை என்று ஒதுங்கிக் கொள்கிற கலைஞர்கள் கூட உண்டு. அதற்கு இவரிடமே விளக்கம் கேட்டு அறிந்திருக்கிறேன் நான்.

“ஈரமுள்ள பூமியில் தான் பயிர் வளரும்” என்பார் நம் நாயகர்.

ஈகை, இரக்கம் இருந்தால்தான் நாம் மனிதராக இருக்க முடியும் என்பதைச் சொல்லாமல் சொன்ன வார்த்தை என்பதை நான் அறிவேன்.

( 20.11.1988 )





# மதிப்பு, மரியாதையைக் கற்றுத் தந்த மக்கள் திலகம்!

- அத்தியாயம்: 31

ஸ்டுடியோக்களிலும் சரி, வெளிப்புறப் படப்பிடிப்பிலும் சரி இவருக்கு இருந்த பெரிய துணை புத்தகங்கள்தான். பெரும்பாலும் இவர் எடுத்துச்செல்வது தத்துவப் புத்தகங்களாக இருக்கும்.

“என்ன புத்தகம் படிக்கிறீங்க அண்ணே. நானும் படித்துவிட்டு தரலாமா?” என்று யாராவது இவரிடம் நெருங்கி கேட்டுவிட்டால் போதும். அதே போல் வேறு ஒரு புத்தகம் வாங்கி தன் கையெழுத்திட்டு அன்பளிப்பாகக் கொடுத்து விடுவார். தான் படிப்பதோடு மற்றவர்களும் அந்தக் கருத்தை அறிந்து கொண்டால் தப்பில்லை என்று தமாஷாக சொல்லவும் செய்வார்.

இவருக்கு அசைவ உணவு என்றால் ரொம்ப விருப்பம். அந்தக் காலத்திலிருந்தே இவரோடு நான்கு பேராவது கூட உட்கார்ந்து சாப்பிட வேண்டும். தனித்துச் சாப்பிடுவதை பெரும்பாலும் விரும்பமாட்டார்.



‘படகோட்டி’ படம். உச்சிவெயிலில் வெளிப்புறப் படப்பிடிப்பு. ஆலப்புழை என்ற இடத்துக்குப் பக்கம் ஒரு தீவு மாதிரியான இடம். எல்லா உதவி இயக்குனர்களும் வெயிலில் அவதிப்படுவதைக் கண்ட இவர், “தலைக்குத் தொப்பிப் போட்டுக் கொள்ளக் கூடாதாப்பா” என்று

கேட்கிறார்.

இந்தப் படத்தில் உதவி இயக்குனராக இருந்தவர் ஏ.ஜெகன்நாதன் என்று நினைக்கிறேன். அவர் முன்வந்து "இங்கே தொப்பி அவசரத்துக்குக் கிடைக்கலைண்ணே" என்று சொன்னதாக நினைவு. அந்தப் படத் தயாரிப்புப் பொறுப்பைக் கவனித்த நாச்சிமுத்து என்பவரைக் கூப்பிட்டு, "நாளைக்கு எல்லோருக்கும் தொப்பி வாங்கிக் கொடுக்கணும்" என்று சொன்னார். அவரும் தலையசைத்தார். என்ன காரணமோ மறுநாள் அவர் இருந்த பரபரப்பில் அதை மறந்தே போனார். இவர் விடவில்லை. மறுபடி வெயிலில் உதவி இயக்குனர்கள் நிற்கும்போது "ஜெகு தொப்பி என்னாச்சு. இன்னுமா கிடைக்கலை" என்றார்.

"இந்த ஊர்ல கிடைக்கலை போல இருக்குண்ணே. கொச்சி போய் நாளை வாங்கணும்ணு புரடக்ஷன்ல சொல்லிக்கிட்டு இருந்தாங்க" யாருக்கும் பாதிப்பு வராமல் எப்படியோ அன்றைக்குச் சொல்லி ஜெகநாதன் சமாளித்து விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். "ஓஹோ" என்று இவரும் தலையசைத்து அதைக் கேட்டுக் கொண்டு விட்டார்.

மறுநாள் படப்பிடிப்புக்கு வந்த உதவி இயக்குனர்கள், மற்ற தொழில்நுட்பக் கலைஞர்கள் அத்தனைபேர் தலையிலும் தொப்பி இருந்தது.

கொச்சியில் தங்கி அன்றாடம் ஆலப்புழா போய் வந்த இவர், முதல் நாள் மாலையே 'இத்தனை தொப்பி வேண்டும்' என்று தன் சொந்தச் செலவில் அதனைக் கடையில் வாங்கித் தயாராக வைத்திருந்தார்.

தயாரிப்பு நிர்வாகி செய்ய வேண்டிய பணியை, செலவைத் தானே செய்து தொழிலாளர்கள் அத்தனைபேரும் வெயிலில் சிரமப்படக் கூடாது என்று ஏற்பாடு செய்தார். அது போலவே தனது யூனிட் தண்ணீர் பையன் வரை பணம் பைசல் ஆகாமல் படத்தை ரிலீஸ் பண்ணக் கூடாது என்று கண்டிஷன் போட்டுவிடுவார்.


எம்.ஆர்.ராதா அண்ணன் அவர்கள் இவரோடு முரண்பட்டதும், அது தொடர்பால் ஏற்பட்ட கெட்ட கனவு மாதிரியான சம்பவங்களும் பலருக்கும் தெரியும்.

அவர் மீது இந்தத் தோட்டத்துத் தூயவர் எவ்வளவு மரியாதையும் அன்பும் கொண்டிருந்தார் தெரியுமா?

'நல்லவன் வாழ்வான்' படத்தில் இதே ஜெகு என்கிற ஜெகன்நாதன் தான் உதவி இயக்குனர் என்று நினைக்கிறேன். ஒரு காட்சியைப் பற்றி விளக்குகிற போது, "உங்களுக்கும் ராதா சாருக்கும் அடுத்த காட்சி" என்று விளக்குகிறார்.

"என்னது, என்னது ராதா சாரா. ராதா அண்ணன் என்று சொல்" என்று சொல்லி, அன்றிலிருந்து தன்னைவிட வயது குறைந்தவர்களுக்கு இந்த அறிவுரையை அடிக்கடி சொல்ல ஆரம்பித்தார் என்றே சொல்ல வேண்டும்.

மரியாதை, மதிப்பு என்பதற்கு இவரிடம் மாணவனாக இருந்து பாடம் படிக்கத் தோன்றும். அன்பாக, அமைதியாக, அத்தனை சொல்வார் அதுபற்றி..



# காஞ்சி முனிவரிடம் கண்டது என்ன?

- அத்தியாயம்: 32

**கா**ஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகளை இந்தத் தோட்டத்து நாயகர் முதன்முதலில் சந்தித்து விட்டு வந்தார்.

1976 மே மாதம் என்று நினைக்கிறேன். தேதி சரியாக நினைவில் இல்லை.

"காஞ்சிப் பெரியவரைக் கண்டதும் இவ்வளவு நாள் இவரைப் பார்க்காமல் இருந்து விட்ட ஏக்கம்தான் எழுந்தது.

எப்போதுமே ஒன்றை அருகில் சென்று பார்க்கிறபோது அல்லது கவனிக்கிறபோதுதான் அதன் அருமை பெருமைகள் நமக்குத் தெரிகிறது.



துறவி என்றால் எப்படி இருக்க வேண்டும் என்று என் மனதுக்குள் கற்பனை செய்து வைத்திருந்தேனோ, அப்படிப்பட்ட பெரியவரை காஞ்சியில் என் கண்ணெதிரே கண்டேன்" என்று இவர் தன் கைப்பட எழுதியக்

குறிப்பை நான் அறிவேன்.

“காஞ்சி மாமுனிவரின் எளிமையும், கருணை தவழும் முகமும், அந்தக் கண்களில் தெரிகிற ஒளியும்தான் என்னைக் காந்தம் போல் முதன்முதலில் ஈர்த்தது ஜானு” என்று முதன்முதலில் அங்கு போய் விட்டு வந்ததும் சொன்னார்.

“சுயநலம் உள்ள எந்த மனிதனும் அவரைச் சந்தித்தால் பொதுநல நோக்கமுள்ள பொறுப்புள்ளவனாக மாறி விடுவான்.



அவரது எளிமையைக் காணுகிறவர்கள் ஆடம்பர வாழ்க்கையை, தகாத செயல்களைக் குறைத்துக் கொள்வார்கள்.

அவரிடத்தில் பேசுவதோ அல்லது அதற்குப் பதிலை எதிர்பார்ப்பதோ தேவையே இல்லை. அதற்குப் பதிலாக அவரது பார்வை நம்மைப் புரிந்து கொள்கிறது.

அவரது முகபாவமும் கண்களும் நம்மைப் புரிந்து கொண்டு கனிவோடு பேசுகின்றன. அதிலேயே யாராக இருந்தாலும் தெளிவு வந்துவிடும்.

நான் அவரோடு இருந்தபோது எனது நினைவுகள், நேரம், காலம் வேறு எந்த ஒன்றைக் குறித்தும் எண்ணவில்லை. என்னுடன் வந்தவர்கள் புறப்படலாம் என்று கூறிய பின்புதான் அங்கிருந்து வர வேண்டும் என்ற எண்ணமே வந்தது.

அப்படி ஒரு ஈர்ப்பு சக்தி காஞ்சிப் பெரியவரிடத்திலே இருக்கிறது” என்று இந்தத் தோட்டத்து நாயகர் தன் வாய் மொழியாகச் சொன்னதை அப்படியே இங்கே சொல்லியிருக்கிறேன்.

காஞ்சிப் பெரியவரை மானசீகமாக இதில் தரிசிக்க முடிகிறது. காஞ்சி மாமுனிவரைப் பார்த்து இவர் அப்போது கேட்ட ஆசி என்ன தெரியுமா?

“நான் கடைசிவரை நல்லவனாகவே வாழ்ந்து மக்களுக்குத் தொண்டு புரிந்தபடியே சாக வேண்டும்” என்பதுதான்.

அதுதான் நம் கண்முன் நிகழ்ந்த நிதர்சனம் ஆகி விட்டதே!



# ஒலித்துக் கொண்டே இருக்கும் தலைவரின் குரல்!

- அத்தியாயம்: 33




"சாப்பிட்டீங்களா?" இந்த சங்கீதம்தான் இந்தத் தோட்டத்துக்கு யார் வந்தாலும் முதலில் எழும் அடிநாதம். என் அத்தானுக்கு நிறைய பேர் கூடிச் சாப்பிட வேண்டும் என்ற விருப்பம் அதிகமாக உண்டு.

இது அநேகருக்குத் தெரியும். அதற்காக இவரை ஒரு பெரிய சாப்பாட்டுப் பிரியராகச் சொல்லி விடவும் முடியாது. பிற்காலத்தில் காலை உணவையே முற்றிலும் அநேகமாகத் தவிர்த்து வந்தார் என்றுகூடச் சொன்னால் பொருந்தும்.

புதிதாக எடுத்த வெண்ணை, அதில் காய்ச்சிய நுரை அடங்காத முருங்கைக் கீரை இட்டுக் காய்ச்சிய மணக்கும் நெய், இவை இரண்டையுமே அம்மா எனக்கு ஊட்டி ஊட்டி வளர்த்தார்கள்" என அந்தக் கால நினைவுகளில் ஒன்றாக இதை அடிக்கடிச் சொல்வது அவர் வழக்கம்.

இந்தத் தோட்டத்து விருந்தில் வித்தியாசமோ, பாகுபாடோ என்றும் இருக்கக் கூடாது என்பதுதான் அவர் விருப்பம்.



இன்று வரையிலும் அதில் எந்த மாறுதலும் இல்லாமல் எந்தத் தரப்பினர் வந்தாலும் ஒரே வகையான உணவு ஒரே வகையான தின்பண்டங்கள், பானங்கள் தான். அன்றும் இன்றும் இது என் கண்காணிப்பில் மனமுவந்து நடந்து வருகிறது. அவர் இட்ட பணியில் எனக்கு இது ஒரு மணமுவந்த சேவை.

"சாப்பிட்டீங்களா?" என்ற அந்த சங்கீத அடிநாத ஸ்ருதி மட்டும் இப்போது எதிரொலிக்கவில்லையே என்கிற ஏக்கம் எனக்குள் எப்போதும் எழுந்து அடங்கும்.

அதை அடக்கிக் கொண்டு, இங்கு வருகிறவர்களை இப்போதும் அதே நாத மணி ஓசையோடு நான் வரவேற்கத் தவறுவதில்லை. இருந்தாலும் "சாப்பிட்டீங்களா?" என்று என் தலைவனின் குரல் கேட்ட இடத்தில் வந்தவர்களும் வரவேற்கிற நானும் இப்போது அந்தச் சின்ன நொடியில் அந்த சோக நினைவுகளில் கொஞ்சம் நொறுங்கித் தான் போகிறோம்.

கோடிக்கணக்கான தமிழகக் குழந்தைத் தளிர்களுக்கு தன் கரத்தால் சத்துணவு ஊட்டி பட்டி தொட்டிதோறும் பட்டினிப் பசியிலிருந்து அவர்களை மீட்ட "என்ன சாப்பிட்டீங்களா?" என்ற அதே கேள்வியோடு நிற்கிற அவரது நினைவு மண்டபங்களான சத்துணவுக் கூடம் என் அன்பு அத்தானுக்கு பெருமை சேர்க்கிறது.

அதுவே மனோதிடத்தோடு என்னை இட்டுச் செல்கிறது பட்டிதோறும் என் பயணம் இப்படித்தான் தொடர்கிறது.



# வியந்த வெளிநாட்டு நிருபர்!

- அத்தியாயம்: 34

இது ஜவஹர்லால் நேருவின் நூற்றாண்டு நடக்கிற நேரம். இந்தச் சூழலில் அவரோடு தொடர்பு உடைய ஒரு நிகழ்ச்சியைச் சொல்வது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.


1962.

அப்போதைய பாரதப் பிரதமர் மறைந்த ஜவஹர்லால் நேரு மக்களுக்கு ஒரு வேண்டுகோளை முன்வைத்தார். இந்திய சீனப் போர் நடக்கிற சூழல் அது. நமது ஜவான்களுக்கு உதவுகிற வகையில் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டு போர் நிதி திரட்டப்பட்டது. பாரதப் பிரதமர் என்கிற வகையில் நிதி வேண்டி நேரு பிரான் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்தத் தோட்டத்து நாயகரோ அறிவிப்பு வந்தவுடனேயே ஒரு லட்சம் ரூபாயை அளிக்க முன் வந்தார். அதற்கு முதல் தவணையாக அவர் அளித்த தொகைக்கான காசோலை ரூபாய் இருபத்தைந்தா யிரம்.



அதுவும் அப்போதைய தமிழ்நாட்டு முதல்வராக இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கரங்களிலே கொடுத்தார். அந்த நேரத்தில் அங்கே



இருந்த நிருபர் ஒருவர் இதனை எல்லாம் கவனித்தார்.

என்ன நினைத்தாரோ அவர், இந்தத் தோட்டத்து நாயகர் அந்தச் 'செக்'கைக் கொடுத்து விட்டு நகர்ந்த அடுத்த நொடியே "வெறும் விளம்பரத்துக்காகவே இந்தத் தொகையை இவர் கொடுத்து விட்டுப் போகிறார்" என்று பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் காதுபடவே தன் மனதில் பட்டதைச் சொல்லி விட்டார்.

உடனே பெருந்தலைவர் காமராஜரோ கொஞ்சமும் தாமதிக்காமல், "இந்த மாதிரி விளம்பரங்கள் இவருக்குத் தேவையே இல்லை. அவருக்கென்று சொந்தச் செல்வாக்கும் மதிப்பும் எப்போதும் உண்டு.

இதை ஒரு சாதாரண பணம் அல்லது தாள் என்று நினைத்து விடாதீர்கள்.

இதற்குப் பின்னால் உழைத்துச் சேர்த்த பணத்தை அள்ளித் தர வேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கம், பரந்த மனம், ஈகை, இரக்க குணம் எல்லாமே அடங்கிக் கிடப்பதை கொஞ்சம் யோசித்தால் புரியும்" என்று சட்டென்று பதில் சொல்லி விட்டார்.

பெருந்தலைவர் காமராஜரோ காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர். இந்தத் தோட்டத்து நாயகரோ அவருக்கு எதிர் அணியில் இருப்பவர். இருப்பினும் இவரது தூய்மை, நேர்மை, நாணயம், இரக்கம், ஈகை குணம் அறிந்து வைத்திருந்தார் பெருந்தலைவர் அவர்கள் என்பதற்காக இதனை இங்கே குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

இந்த இடத்தில் வெளிநாட்டில் இருந்து வந்த ஒரு நிருபரைப் பற்றிய நினைவு வருகிறது எனக்கு.

பிரான்சிலிருந்து ஒரு சமயம் பத்திரிகையாளர் ஒருவர் இவரைப் பார்க்க வந்திருந்தார்.

இந்தத் தோட்டத்து நாயகரோ, அன்றைய தினம் வெளிப்புறப் படப்பிடிப்பு ஒன்றிற்குச் சென்றுவிட்டார். வந்த பத்திரிகையாளருக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்யச் சொல்லி இருந்தார். அவரை மகாபலிபுரம் போன்ற இடங்களுக்கு தனது காரிலேயே அழைத்துச் சென்று காட்ட வேண்டுமென்று உத்தரவு. அவர் எங்கு போக விரும்பினாலும் அழைத்துப் போகவும் ஏற்பாடு. அதன்படி அவரை ஏற்றிக் கொண்டு கார் பறந்தது. போகிற இடமெல்லாம் அந்த நிருபருக்கு வியப்பு.



காரணம், அந்தக் கார் நின்ற இடமெல்லாம் ஏகக் கூட்டம். தங்கள் அன்புத் தலைவரின் கார் நம்பரை நினைவில் கொண்டு மக்கள் ஆங்காங்கே அவரைச் சூழ்ந்து கொண்டு, அவருக்குத் தேவையானதைச் செய்து கொடுத்தார்கள்.

மக்கள் அவரைத் திக்குமுக்காட வைத்தார்கள். அவர் இதுவரை பெற்றிராத ஒரு அன்பு உபசரிப்பை வாரி வழங்கினார்கள் ஊர்கள்தோறும்.

“உங்கள் கார் நம்பருக்கே இந்த நேரத்தில் இத்தனை செல்வாக்கு இருக்கிறதே..” என்று வியந்து, நாடு திரும்பும்போது நன்றி செலுத்திவிட்டுப் போனார் அந்த நிருபர்.

இது போலவே அது ஒரு பொதுத்தேர்தல் நேரம். பாண்டிச்சேரி பகுதியைச் சார்ந்த ஒரு கிராமப்புறம். வெயில் கொளுத்துகிற நண்பகல் நேரம். தன் தலைவரைக் காண கூடியிருக்கும் வழக்கமான எல்லையில்லாக் கூட்டம்.

தனது மக்களிடையே எல்லையில்லா ஆர்வத்தோடு அந்தக் கொளுத்தும் வெயிலில் எல்லா இடங்களைப் போல அங்கேயும் பேசி முடிக்கிறார்.

கொஞ்சம் வயதான அம்மையார் ஒருவர், “அய்யா ஏன் இந்த வெய்யிலில் கிடந்து இப்படிக் காய்கிறீர்கள்? வீட்டிற்குப் போய் ஓய்வு எடுங்க எங்க ஓட்டு உங்களுக்குத்தான், எந்தக் காரணத்தைக் கொண்டும் வேறு யாருக்கும் எங்க ஓட்டுப் போகாது. உங்களுக்குத்தான் எங்க ஓட்டு” என்றார்.

இதை என் அத்தானே என்னிடம் ஒருமுறை சொல்லி தன் மீது கொண்ட மக்களின் அன்புக்காகக் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டதுண்டு.

கணவனின் புகழில் ஒரு மனைவி பங்கு கொண்டு இப்படி நினைத்துப் பார்க்கிறது கூட பெருமைதான் என்று இந்த நாளில் இதயம் கசிகிற மனதோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(1.1.1989)





# நீ நடந்த இடம் புனிதமானது; நின்ற இடம் கோயிலானது!

- அத்தியாயம்: 35

இந்தத் தோட்டத்துத் தூயவர் மீது மக்கள் கொண்ட அன்பு, மக்கள் மீது இவர் வைத்திருந்த மதிப்பு இரண்டையுமே பாடமாகப் படித்தவள் நான்.

தமிழகம் முழுவதும் அவரோடு பயணம் செய்த பல்வேறு நாட்களையும், இன்று நான் மட்டுமே தன்னந்தனியே மக்களைச் சந்திக்கப் போய் வருகிற ஒவ்வொரு நொடியையும் எண்ணிப் பார்க்கிறேன்.



அவர் என்னோடு என் பக்கத்தில் என் அருகிலேயே இருப்பதாகவே கருதுகிறேன். இது என் மனம் திறந்த கருத்து.

அந்த அடிப்படையிலேயே இப்போதும் ஊர் ஊராக வருகிறேன். உங்களைச் சந்திக்கிறேன்.

இப்போது போலவே அப்போதும் தேர்தல் சூழல், பாண்டிச்சேரிக்குப் பக்கத்தில் வேறொரு கிராமம்.

வெயில் கொளுத்துகிற வேளை. பிரச்சாரத்துக்குப் போன என் தலைவரை தம் வறண்ட நிலப்பகுதியில் வெறுங்காலுடன் நடக்க வைக்க வேண்டுமென்று ஒரு மூதாட்டிக்கு ஆசை. என் இதயதெய்வத்தைச் சந்தித்து தனது விருப்பத்தையும் தெரிவித்தார்.

“அய்யா, தாங்கள் எங்கள் பூமியில் நடந்தால் அந்த வறண்ட பூமி தழைத்துப் பூத்துக் குலுங்கும்.” என்று கூறியிருக்கிறார்.

ஒரே ஒரு சின்னப் புன்னகையோடு. அந்த அன்பு வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து தான் சென்ற வாகனத்திலிருந்து இறங்கி, அவரது நிலத்தில் வெறுங்காலுடன் கொஞ்ச தூரம் நடந்து திரும்பி வந்தார்.

மாதங்கள் பல கடந்தன.

அந்த நிலம் நிறைய செழித்தோங்கி அறுவடைக் கண்டதாக பின்னர் அறிந்தோம்.

“நீ நடந்த இடம் புனிதமானது. நீ நின்ற இடம் கோயிலானது” என்று சகோதரி அன்னை அல்போன்சா பற்றி வலம்புரி ஜான் எழுதிய கேரள நிசப்தத்தில் அண்மையில் படித்தேன்.

அது மாதிரி அவர் போய் சந்தித்த அவரது அன்பு மக்களை நாள்தோறும் இன்று சந்திக்கிறோம் என்பதே எனக்கு நம்பிக்கை தருவதாக இருக்கிறது.

அவரை மதிக்கிற, அவர் மீது அன்பு செலுத்துகிற உங்கள் வாக்கு அவரது துணை நிழலான நான் காட்டுகிற இரட்டைப் புறாவுக்குத்தான் என்பதை நான் அறிவேன்.

ஒரு தாயாக உங்கள் வீட்டுச் சகோதரியாக மட்டுமே என் அன்பு அத்தானின் நிழலில் நின்றபடி இந்த வேண்டுகோள், நம்மைக் கவிழ்க்க முயன்றவர்கள் அதற்குத்துணை போனவர்களை எல்லாம் மறந்து ஒதுக்கி வைத்துவிட்டு அவர் இல்லாத சூழல் அவர் துணைவியான எனது மிகப் பணிவான வேண்டுகோள் இதனை வாக்குச் சாவடிக்குப் போகுமுன் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்.

உங்கள் மனசுக்குள் இரட்டை இலை இருந்த இடத்தில் ‘இரட்டைப் புறா’ பறந்து வந்து இடம்பிடித்துக் கொள்ளும்.

உங்களுக்கு, உங்கள் குடும்பத்தார் எல்லோருக்கும் என் புத்தாண்டு, பொங்கல் நல்வாழ்த்துகள்!

( 15.01.1989 )



# கக்கனின் மனைவி தோட்டத்திற்கு வந்த காரணம்

- அத்தியாயம்: 36

பொருளாதாரம் மற்றும் அதிகார வரம்பில் அகில இந்திய அளவில் செல்வாக்கு செலுத்த முடிகிற கட்சிகளில் ஒன்றாகக் காங்கிரசைச் சொல்லலாம். இருந்தும் அவர்கள் கட்சிக்காரர்களுக்கே நியாயமான உதவிகளைக்கூட செய்யத் தவறியவர்கள் என்பதற்கு ஒரு சின்ன உதாரணம் முன்னாள் அமைச்சர் கக்கனின் வாழ்க்கை.

அவர்கள் தவறிவிட்ட சூழ்நிலையிலும், இந்தத் தோட்டத்திற்குத் தகவல் தெரிந்ததும் முன்னாள் அமைச்சர் கக்கனின் குடும்பத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய உடனே நடவடிக்கை எடுக்கப்பட்டது.



1979 ஒரு காலை நேரம். இவர் முதல்வராக இருந்த சமயம். மறைந்த கக்கன் அவர்களின் மனைவியார் தனது விதவைக் கோலத்தோடு இந்தத் தோட்டத்தைத் தேடி வந்துவிட்டார்.

காந்திய நெறி தவறாத முன்னாள் அமைச்சர் கக்கன் அவர்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின்

கீழ் உள்ள பழுதுபட்ட பழைய வீட்டில் மாதம் ரூபாய் 150 வாடகை கொடுத்துக் கொண்டு தன் வாழ்நாளை முடித்தவர்.

அவரது மறைவுக்குப் பிறகு அவரின் குடும்பம் மிகவும் வறுமையில் இருந்தது. அவரின் மனைவியால் வீட்டு வாடகையைத் தர இயலவில்லை. வீட்டுவசதி வாரியமோ அரசாங்க நடைமுறை சட்ட திட்டங்களைச் சொல்லி வீட்டைக் காலி செய்யும்படி சொல்லி வந்தது. அப்போதுதான் இவரைக் காண அவரது மனைவி ராமாபுரம் தோட்டத்துக்கு வந்தார்.

உண்மையில் யாருக்குமே அவரை அடையாளம் தெரியவில்லை. தன்னை வெளியே அனுப்பி விடுவார்களோ காவலர்கள் என்கிற பயம் கலந்த கலக்கத்தோடு கூட்டத்தில் ஒருவராய் காத்துக் கொண்டிருந்தார் அம்மையார்.

என் அத்தான் தோட்டத்திலிருந்து காரில் புறப்பட்டுச் செல்லும் போதுகூட தனக்கு அறிந்த முகம், தெரிந்த முகம் கண்ணில் படுகிறதா? அவர்களைக் காணத் தவறிவிட்டோமா? அதனால் அவர்களது பணி தடைப்பட்டு விடக்கூடாதே என்பதால் பார்வையை ஒரு சுற்று விடுவார். இது அந்தக் காலம் தொட்டே வழக்கம். அதற்குப் பிறகுதான் கார் வேகம் எடுக்கும்.

அப்படித்தான் அன்றைய தினம் பார்த்தபோது இந்த அம்மையாரின் பயந்த, சோகமான முகத்தைப் பார்த்துவிட்டார். பதறிப் போனார். புறப்பட்ட காரை நிறுத்தச் சொன்னார். வண்டியை விட்டு கீழே இறங்கி அந்த அம்மையாரை அன்போடு அணுகி விசாரித்தார்.

தனது பணியாளர்கள் தாம் புறப்படும்முன் பார்வையாளர்கள் பெயரில் அவரது பெயரைக் குறிப்பிடாமல் விடுபட்டு விட்டதற்காகத் தனிப்பட்ட முறையில் முதலில் மன்னிப்பைக் கேட்டுக் கொண்டார்.

இந்தத் தோட்டத்தின் இல்லத்திற்குள் அம்மையாரை அழைத்து வந்து அன்பொழுக உபசரித்தார். அவரின் குடும்பம் அதே வீட்டில் வாடகை செலுத்தாமல்






குடியிருக்கவும் மாதம் 500 ரூபாய் நன்கொடையாகக் கிடைக்கவும் ஏற்பாடு செய்தார். மாதா மாதம் அந்தப் பணம் அம்மையாருக்குத் தொடர்ந்து கிடைக்கிறதா என்பதையும் பார்வையிட உதவியாளர்களுக்கு உத்தரவிட்டார்.

வேறு எந்த ஆட்சி வந்தாலும் இந்த உதவி அவர்களுக்குத் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்று அரசாங்க ஆணை ஒன்றையும் பிறப்பித்தார்.

மறைந்த அமைச்சர் கக்கனின் மனைவிக்கு மரியாதை செலுத்தும்படியான ஒரு விழாவில், அந்த அரசாங்க உத்தரவின் நகலை வெள்ளிப் பேழையில் வைத்து வழங்கினார் இவர்.


பணம், பகட்டு, பந்தா, படாடோபம் இதெல்லாம் இல்லாமல் ஏழைகளுக்கு இரக்கம் காட்டி, தன் உழைப்பின் வழி வந்ததை ஊருக்குத் தர வேண்டும் என்கிற உத்தமரின் துணைவி என்கிற அரிய பெருமையோடு உங்களோடு பேசுகிறேன்.

நாற்பதாண்டு காலம் அவரிடத்தில் பயின்றவள் என்கிற வகையில் அவர் வழி நடந்து உங்களிடம் ஊர் ஊராக வருகிறேன்.

தேர்தல் நெருங்குகிறது. ‘இரட்டைப் புறா சின்னம் உங்கள் வீட்டுப்பிள்ளையின் சின்னம். இந்தத் தோட்டத்தின் சின்னம். ராமாபுரம் தோட்டத்தின் மீது நம்பிக்கையுள்ள நீங்கள் வாக்களிக்கப்போவது இந்த அ.இ.அ.தி.மு.க. ஜானகி எம்.ஜி.ஆர். அணிக்குத்தான். இரட்டைப் புறாவுக்குத்தான் என்று உறுதியாக, உங்கள் மீதுள்ள அன்பால் நம்புகிறேன்.

(22.1.1989)





# ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள்

- அத்தியாயம்: 37



அன்புச் சகோதரர் நடிகர்திலகம் அவர்கள் தன் தாயின் சிலையைத் தன் வீட்டில் நிறுவி இருக்கிறார். அவர் வீடு எப்போதும் பார்க்க எளிமையாகவும் அதேநேரத்தில் அழகாகவும் வைக்கப்பட்டிருக்கும். விசாலமான வீடு. அந்த வீட்டில் நிறுவப்பட்ட சிலையைத் திறக்காமல் துணி மூடி வைத்திருந்தார்.

“ஏன் இந்தச் சிலையை இன்னும் திறக்காமல் வைத்திருக்கிறீர்கள்?” என்று அவரோடு நெருக்கமாக உள்ள சில பேர் கேட்டதுகூட உண்டு.

“சிலையைத் திறக்க வேண்டியவர் வெளிநாடு போயிருக்கிறார்ப்பா. அவர் வருகைக்காகக் காத்திருக்கேம்பா” என்று அவருக்கே உரிய பாணியில் அவர் விளக்கம் தந்தது உண்டு.

சில நாட்களுக்கெல்லாம், மிகமிக வேண்டிய சிலருக்கு மட்டும் தொலைபேசியில் அழைப்பு விடுத்தார் சிவாஜி. அப்படி அவர் வீட்டிற்கு வந்தவர்களில் வி.கே.ஆர்., மேஜர் போன்றவர்களைச் சொல்லலாம். அடுத்த சில நிமிடங்களுக்கெல்லாம் இந்தத் தோட்டத்து நாயகரின் கார் போக் ரோட்டில் சிவாஜி அவர்களின் வீட்டுக்குள் நிற்கிறது.

எனது நாயகர் வண்டியிலிருந்து இறங்க, நடிகர் திலகம் அவரை வரவேற்று அழைத்துச் சென்று தன் தாயின் சிலையை திறக்கச் சொல்கிறார். இவரும் திறந்து வைக்கிறார். இருவர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் பெருக, கட்டித் தழுவிக் கொண்டார்கள். பத்தே நிமிடங்களில் நடந்து முடிந்த இந்த நிகழ்ச்சிக்கு முக்கியமான சிலரைத் தவிர பத்திரிகையாளர்களோ மற்றவர்களோ அழைக்கப்படவில்லை. அதை முழுக்க முழுக்க ஒரு ஒரு குடும்ப நிகழ்ச்சியாகவே கருதினார் நடிகர் திலகம்.

ஏன் இந்தச் சிலையைத் திறப்பதற்கு என் கணவரைத் தேர்ந்தெடுத்தார் நடிகர் திலகம்? சிலை திறப்பு நிகழ்ச்சி நிறைவுற்றபின் மிக நெருக்கமானவர்களிடம் அவரே சொன்னது இது.

“இந்தச் சிலையை மக்கள் திலகம் திறந்து வைப்பதுதான் மிகவும் பொருத்தம். தாய் என்ற சொல்லுக்கு அர்த்தம் தெரிந்தவர் அவர்தான். அம்மாவின் அருமை பெருமையை உணர்ந்தவர் அவர். தாயை இழந்து நாங்கள் கஷ்டப்பட்டபோதெல்லாம் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்த நட்புணர்ச்சி எங்கள் இருவருக்கு மட்டுமே தெரியும்.

அப்போது அரசியலால் நாங்கள் வேறுபட்டிருந்தாலும் எங்களிடம் உள்ள பாச நெருக்கம் குடும்பத்தினர் மட்டுமே அறிந்தது. நாங்கள் சந்தித்தால் அதிகம் பேசிக்கொள்ள மாட்டோம். எங்கள் இருவரின் உள்ளமோ சிறிய வயதில் நடந்ததையெல்லாம் நினைத்துப் பார்த்துக் கண்கள் வழியே கண்ணீராகப் பேசும்“ என்று நடிகர்திலகம் சொன்னார். அவர் சொன்னது அத்தனையும் வார்த்தைக்கு வார்த்தை உண்மை.

இந்தத் தோட்டத்து நாயகரும் சரி, நடிகர் திலகமும் சரி, ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளைப் போல வாழ்ந்தவர்கள் என்பதை மட்டும் இந்தச் சூழ்நிலையில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

(29.01. 1989)



# துப்பாக்கிச் சத்தத்தில்...

- அத்தியாயம்: 38

எனது அன்பு நாயகர் ஒரு சாதனை புருஷர் என்றாலும், அவரும் கண்ணீர் உகுத்த காலங்கள், சூழ்நிலைகள் ஒன்றிரண்டு உண்டு. ஆபத்து, அதிர்ச்சி, சோகம் இவற்றை அவரும் சந்தித்தது உண்டு.

எனக்குத் தெரிந்து அவரது அண்ணன் மறைந்தபோது வாய் விட்டு அழுதார். அது போலவே எனது ‘பைபாஸ்’ சர்ஜரியை’ அமெரிக்காவில் நடத்தியபோது எவ்வளவோ சமாதானம் செய்தும் அழுது கொண்டிருந்தார்.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலான எங்கள் குடும்ப வாழ்க்கையில் புயல், மழை, பூகம்பம் என்றெல்லாம் எதுவும் இருந்ததில்லை. பொன்னி நதியின் நீர்ப்போக்கு மாதிரி எங்கள் வாழ்க்கை மிகவும் சீராகவே இருந்திருக்கிறது.



“இத்தனை இருந்தும் எங்களுக்கொரு குழந்தை இல்லை என்று எப்போதாவது சங்கடப்பட்டது உண்டா?” என்றுதான் பார்க்கிற சுற்றம், சூழல், நட்பு எல்லோரும் மெல்லக் கேட்பதுண்டு. எங்களுக்குக் குழந்தை இல்லை என்று ஒரு நொடிகூட நாங்கள் நினைத்தது இல்லை.



வீட்டிலேயும் சரி, வெளியிலேயும் சரி குழந்தைகளைக் கண்டால் வாரி எடுத்துக் கொள்வார் என் அன்பு நாயகர்.

குழந்தைகள் தொடர்பான சம்பவங்கள் எத்தனையோ இந்தத் தோட்டத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நிகழ்ந்ததுண்டு. எல்லாவற்றிலும் சிகரம் வைத்தாற்போல் என் நெஞ்சில் நிழலாடுகிற ஒரே ஒரு நிகழ்ச்சி இந்தத் தோட்டத்தில் நடந்தது.

ஆண்டு 1985... டிசம்பர் மாதம்... முக்கியமான நிகழ்ச்சி ஒன்றிற்காக தூய வெள்ளை உடையில் இவர் வெளியே கிளம்பி கார் ஏறுகிற நேரம். ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த தாய் தந்தையர் தன் ஒன்றரை வயது குழந்தையோடு தலைவரைப் பார்க்க வந்திருந்தார்கள்.

குழந்தை திடீரென்று 'வீல்வீல்' என்று கத்த ஆரம்பித்தது. திரும்பிப் பார்த்தார். அழுகிற குழந்தையைக் கைகளில் வாங்கி ஏந்திக் கொண்டார். வீட்டுக்குள் எடுத்து வந்தார். மடியில் படுக்க வைத்து பிஸ்கெட் பால் எல்லாம் கொடுத்து கொஞ்சி மகிழ்ந்தார். குழந்தை சிரிப்பதைப் பார்த்த பிறகே மீண்டும் தன் பணியைத் தொடரக் கிளம்பினார்.

அப்போதுதான் அது நிகழ்ந்தது. குழந்தையை மடியில் வைத்து சமாதானம் செய்து கொண்டிருந்தபோது அவரது வெள்ளை வேஷ்டியில் குழந்தை கொஞ்சம் 'சந்தனம்' தெளித்துவிட்டது. அதைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் துணி கொண்டு வரச்செய்து துடைத்து எடுத்து சுத்தம் செய்தார்.

"இந்தக் குழந்தை மாதிரி ஏராளமான குழந்தைகள் நாடு முழுவதும் எனக்கு உண்டு என்ற நினைப்புதான் என்னை மகிழ்ச்சியோடு வாழ வைக்கிறது" என்று அப்போது சொன்னார் தாயை மதித்த என் தலைவர்.

அதனால்தானோ என்னவோ 'ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோர் எனக்கேட்ட தாய்'

என்ற குறளை இந்தத் தோட்டத்தின் பூஜை அறையில் உள்ள தனது அன்னையார் படத்தின் கீழே எழுதி வைத்து அதை எப்போதும் வணங்கி வந்தார் என் கணவர்.

எல்லோருடைய குழந்தையையும் தன் குழந்தையாக நினைக்கிற இவருக்கு வெவ்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு ஆபத்துக்கள் வந்ததுண்டு... ஆனால் பகலவனைக் கண்ட பனியாக அவை விலகிப் போனதும் விசித்திரமே...

வேட்டைக்குச் செல்கிற வழக்கம் இவருக்கு உண்டு. ஒருமுறை தனது கார் டிரைவர் கார் ஓட்ட, ஒரு காட்டுப் பாதையில் வழியெல்லாம் தனது துப்பாக்கியால் கொக்கு சுட்டுக் கொண்டே வந்தார்.

நீண்ட நேரப் பயணக் களைப்பில் இருந்த அவர் தன் கால்களுக்கு இடையில் துப்பாக்கியை நிறுத்தியபடி அப்படியே தூங்கி விட்டார்.

மதுராந்தகம் பக்கத்தில் இருக்கிற அச்சரப்பாக்கம் அருகில் கால் அருகில் இருந்த துப்பாக்கியைத் தூக்கக் கலக்கத்தில் மிதித்து விட்டதாலோ என்னவோ எதேச்சையாய் துப்பாக்கி வெடித்து அவரது தலையணையைத் துளைத்து கார் கதவில் பாய்ந்து சென்று வெளியேறியது.

கொஞ்சம் திசை மாறி இருந்தால் குண்டு அவர்மீதே பாய்ந்திருக்கும். ராதா அண்ணன் இந்தத் தோட்டத்தில் சுட்டதுதான் பலருக்குத் தெரியும். ஆனால் வேட்டையாடப் போனபோது ஏற்பட்ட இந்தச் சம்பவம் அநேகருக்குத் தெரிய வாய்ப்பில்லை என்றே கருதுகிறேன்.

இப்படி அவரும் சரி, அவரைச் சார்ந்த நானும் சரி, ஆபத்துகளையும், அதிர்ச்சிகளையும் கடந்து வந்தவர்கள் என்பதை மட்டும் இப்போதைக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

(05.02.1989)





# அலை கடலுக்கு அப்பால்...

- அத்தியாயம்: 39

இயக்குனர் கே.சுப்பிரமணியம் அவர்கள் இந்தத் தோட்டத்துக் குடும்பத்தில் மிக நெருக்கமான பிடிப்பு உள்ளவர். எங்களுக்கெல்லாம் தந்தையாகவும் வழிகாட்டியாகவும் விளங்கியவர் பழம்பெரும் இயக்குநர் கே.சுப்பிரமணியம்.

அவர்கள் குடும்பமும் இங்கே எங்கள் குடும்பமும் தனித்தனியே பிரிந்து வாழ்ந்திருந்தாலும் எங்கள் குடும்பங்களுக்குள் ஒரு சகோதர, சகோதரி பாசம் இன்றளவும் இழையோடுகிறது.



இந்தத் தோட்டத்து நாயகருக்கு உடல்நலம் குறைவான பிறகு ஒருநாள் பழம்பெரும் நடிகையும் இயக்குநர் கே.சுப்பிரமணியம் அவர்களின் துணைவியரில் ஒருவருமான எஸ்.டி.சுப்புலட்சுமி மரணமடைந்தார். அந்த இடத்திற்கு உடனே விரைந்து செல்ல வேண்டுமென்று அவர் துடித்த துடிப்பு எனக்குத்தான் தெரியும்.

அவரது மறைவுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு சற்றுத் திரும்பியபோது பக்கத்தில் நின்றிருந்த அவரது மகன் அபஸ்வரம் ராம்ஜிக்கு ஆறுதல் சொன்னாலும்



அவரையும் மீறிய துக்கத்தை வெளிக்காட்டாமல் அடக்கிக் கொண்டு அங்கிருந்து திரும்பினார்.

ஆனால்... அடுத்த நாளே இன்னொரு இடி. இயக்குநர் கே.சுப்பிரமணியத்தின் மனைவி மீனாட்சி அவர்கள் இறந்து விட்டார்கள் என்பதுதான் அது.

அவரது வீட்டிலிருந்து இவரது உடல்தலம் கருதி, "தாங்கள் வர வேண்டாம்"

என்று சொல்லி தகவலைத் தெரிவித்தபோதும் செய்தி கிடைத்த அடுத்த நொடி தன் உடல்நலனையும் பொருட்படுத்தாமல் அங்கே விரைந்தார் எனது அன்பு நாயகர்.

அங்கு துயரம் நிறைந்த அந்த வீட்டில் இவர் சொன்னது இதுதான். “உங்களுக்கு எப்படி தாயோ அதுபோலத்தான் எனக்கும்! தாய் இறந்த செய்தி கேட்டு எந்தப்பிள்ளை தன் உடல்நலம் கருதி ஓய்வு எடுப்பான்? இனி அவர்களை எப்போது பார்க்கப் போகிறோம்? அதனால்தான் உங்கள் வார்த்தைகளை மீறி இங்கே ஓடோடி வந்தேன்” என்றார்.

இது அவர்கள் குடும்பத்திற்கு பெரிய ஆறுதலான விஷயமாக அப்போது தோன்றினாலும், எங்களது சொந்தத் துயரமாகவே அவரும் நானும் அதைக் கருதினோம்.

அந்தக் குடும்பத்தில் அதுவும், இயக்குநர் கே.சுப்பிரமணியம் அவர்களின் செல்ல மகள்தான், இன்று பார் புகழும் பத்மா சுப்பிரமணியம் என்பது உங்களில் அநேகருக்குத் தெரியும்.

இவருக்குத்தான் அனைத்திந்திய காவல்துறை விழாவில் வெளி மாநிலத்திலிருந்து வந்த ஒருவர் தந்த குல்லாவை தலையில் வைத்து ஒரு அழுத்து அழுத்தி, “என் சகோதரி என்பதற்கு அடையாளமாக இதோ உனக்கும் குல்லாவை அணிவித்து விட்டேன்” என்று கூறி வாய் விட்டுச் சிரித்தார் என் அன்பு நாயகர் என்பதை முன்பே ஒருமுறை நான் குறிப்பிட்டு இருந்ததும் உங்களுக்கு நினைவில் இருக்கலாம்.

என் அன்பு நாயகரோடு அமெரிக்கா சென்றிருந்தபோது எனது சகோதரர் மகள் ஜானகி வீட்டில் நானும் அவரும் கொஞ்சநாள் இருந்தோம்.

ஜானகியின் குழந்தைக்குப் பெயர் சூட்டி, தன் கையால் பால் உணவும் ஊட்டி பாசமழை பொழிந்து, அங்கிருந்து இந்தியா புறப்பட்டார். அப்போது அவருக்குப் பேச முடியாத மகிழ்ச்சி. குழந்தையைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி சொல்கிறார். அதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. “எத்தனை முறைதான் அவர் விளக்குவார்?”

“சேச்சா, முக பாவத்தினால் கொஞ்சம் சொல்லுங்களேன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?” என்று கேட்டாள் எனது சகோதரரின் மகள் ஜானகி.

“முக பாவத்தினால் பேச நான் என்ன பத்மா சுப்பிரமணியமா? நடிகர் திலகமா?” என்று சொன்னார் என் அன்பு நாயகர். இது மட்டும் எல்லோருக்கும் தெளிவாக புரிந்தது. அந்த அமெரிக்க மண்ணில் பல்லாயிரம் மையில்களுக்கு அப்பால் தனது சகோதரர் நடிகர் திலகத்தைப் பற்றியும், சகோதரி பத்மா சுப்பிரமணியத்தைப் பற்றியும் முக பாவம் என்றதும் நினைக்கத் தோன்றியது என்றால் கலையை இவர் தன் கண்களாய் கவனித்தார் என்பதற்கு இதைவிட வேறு ஒரு சான்று சொல்ல முடியுமா?

(12.02..1989)





# தோட்டம் என்றாலே ராமாபுரம்தான்...

- அத்தியாயம்: 40

இந்த இராமாபுரம் சுற்று வட்டாரத்தில் 'தோட்டத்துப் பக்கம் போனேன் தோட்டத்தில் இருந்து வர்றேன்' என்ற சொல்லைப் பயன்படுத்தினாலே அது இந்தத் தோட்டத்தைக் குறிப்பதாகத்தான் இருக்கும். அந்த அளவிற்கு என் அன்பு நாயகரால் இது பெருமை பெற்றது என்பது நான் சொல்லாமலே உங்களுக்குத் தெரியும்.

அவர் வாழ்ந்த இந்தத்தோட்டம் முதலில் பசுமை நிறைந்த பண்ணையாகப் பராமரிக்கவே உருவாக்கப்பட்டது. இப்போது இருக்கிற இந்த வீடு அந்தக் காலத்தில் கிடையாது. அவ்வப்போது ஏற்பட்ட தேவைக்குத் தக்கபடி உருவானதுதான் இந்த வீடு. ஏறக்குறைய முப்பத்தைந்து ஆயிரம் ரூபாய்க்கு இந்த இடத்தை ஒருகாலத்தில் வாங்கியதாக நினைவு...



இந்த வீடு கட்டத் தொடங்கிய காலத்தில் அவர் நடிப்புலகில் சக்கரவர்த்தி. நானோ இந்த வீட்டுச் சமையலையும், வருகிற விருந்தினரையும் கவனித்துக் கொண்டிருப்பேன்.

இந்த வீட்டைத் திட்டமிட்டுக் கட்டுகிற முயற்சியும் இல்லை. அதற்கு நேரமும் அப்போது இல்லை.

இந்த வீட்டில் பெரிய டாம்பீகம், கவர்ச்சி, ஆடம்பரம் இதெல்லாம் இருக்காது. தேவைகளுக்கேற்ப சில வசதிகள் அவ்வப்போது ஏற்படுத்தப்பட்டது உண்டு. அவ்வளவே.

பழமையான பொருட்கள் எதையும் அவர் அழிக்கவோ, இழக்கவோ அப்புறப்படுத்தவோ விரும்ப மாட்டார். அப்படி இந்த வீட்டில் மிகப் பழமையான ரேடியோ, கார் போன்றவைகள் இப்போதும் இருக்கின்றன. இந்தத் தோட்டத்தில் ஏறக்குறைய 150 இலைகளுக்கான சாப்பாடு எனது அன்பு நாயகர் இருந்த காலத்தில் நாள்தோறும் எப்போதும் தயாராக இருக்கும். இன்றைக்கும் அந்த நிலையில் மாற்றமில்லை.

படங்களில் நடித்துக் கொண்டிருந்த காலத்தில் இந்த வீட்டு தோட்டத்தில் இருக்கிற நீச்சல் குளத்தில் விடியற்காலையில் எழுந்து நீந்திக் கொண்டிருப்பார். மூகாம்பிகை படமும் முருகன் படமும் கொண்ட இவரது இரண்டாவது மாடி படுக்கை அறையில் காலையில் எழுந்ததும் குளித்துவிட்டு ஏறக்குறைய பத்து நிமிடங்களுக்குக் குறையாமல் இடுப்பில் ஈரத்துண்டோடு கண்களை மூடி இவர் தியானம் செய்வதை நீங்கள் நினைத்துப் பார்த்தீர்களானால் கண்களும் மனமும் கனக்கும்.

இதே அறையில்தான் பெரும்பாலும் எங்கள் இருவருக்கும் இரவு சாப்பாடு. அதிலும் ஒரே தட்டுதான்.

இவ்வளவு பெரிய தோட்டத்தில் நான் அவரைப் பிரிந்து எப்படி இருக்க முடிகிறது? நான் தனிமைப்படுத்தப் பட்டிருப்பதாக என் மனதில் தோன்றுகிற பொழுதெல்லாம் அவரை நினைத்துப் பிரார்த்திக்கிறேன்.





அவரது நினைவுதான் என் நெஞ்சில் இருக்கிற நித்திய பலம். அவரது கடைசி சில ஆண்டுகள் நாங்கள் மிகவும் நெருக்கமாக இருந்த ஆண்டுகள். ஒவ்வொரு நொடியும் அவரோடேயே இருந்தேன். அந்த நெருக்கம் இப்போதும் இருப்பதாக ஒரு பிரமை. அதுவே எனது பலம்.

ஜுன் 14 எங்களது திருமண நாள். அதை ஒவ்வொரு ஆண்டும் நினைவு வைத்துக் கொண்டிருந்து கடைசி வரை கொண்டாடத் தவறியதில்லை.

கோபம் இருக்கிற இடத்தில் குணம் இருக்கும் என்பார்களே அது மாதிரி அவர் நடந்து கொள்கிறவர்தான். அது ஒரு கலைஞனுக்கு இருக்க வேண்டிய பிறவிக் குணம்.

குழந்தை உள்ளம் கொண்ட இந்த நல்ல மனிதர் என்னிடம் கோபம் கொண்டதுண்டு. அடுத்த நொடியே அது போன இடம் தெரியாமல் மறைந்து போனதும் உண்டு.

எனக்கு வயது இப்போது அறுபத்தி நாலு... என் வாழ்க்கையில் இனி என்ன இருக்கிறது? நான் பிரார்த்திக்கிறேன். எனது அன்பு நாயகரோடு வாழ்ந்த காலங்களை திரும்பிப் பார்க்கிறேன்... சில நேரங்களில் குழந்தைகளோடு குதூகலிக்கிறேன்...

எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் உச்சரிக்கிற அந்த மூன்றெழுத்து நாமாவளி என் மனசுக்குள்ளும் நுழைந்து எனது மூச்சில் இழையோடிக் கொண்டிருக்கிறது. இப்போதும் இவரை நினைக்கிறேன். இதற்கு நேரம், காலம், மணி இதெல்லாம் எதுவும் கிடையாது

(19.02.1989)









# நாடக மன்றம் காட்டிய நாட்டுநடப்பு

- அத்தியாயம்: 41

என் அன்பு நாயகர் பெயரில் நாடகக் குழு ஒன்று இருந்தது. ஏறக்குறைய பத்துப் பெண்கள் இதில் பணிபுரிந்தார்கள். சி.டி.. ராஜகாந்தம் அம்மாள் அவர்கள் இந்த நாடகப் பெண்கள் குழுவிற்குத் தலைவி போல் திகழ்ந்தவர்.

இதில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்கள் (செந்தாமரையின் மனைவி) கௌசல்யா, புஷ்பலதா. ஜி.சகுந்தலா போன்றவர்களைச் சொல்லலாம். இவர்கள் வெளியூர் செல்வதெல்லாம் தனி வேனில்தான்.



இவர்கள் நாடக மன்றத்தில் ஒரு கட்டுக்கோப்பு இருக்கும். பெண்கள் இருக்கும் இடத்திற்கு ஆண்கள் போகக் கூடாது. ஆண்கள் இருக்கும் பகுதிக்கு பெண்கள் திரும்பவே கூடாது. ஒரு பெண்ணும் ஆணும் நாடகத்தில் நடிக்கும்போது வசனம் பேசுவதோடு சரி.

லாயிட்ஸ் சாலையில் நாடக ஒத்திகை நடக்கும். சில வேளைகளில் இந்தத் தோட்டத்திலுள்ள தியேட்டர் ஹாலிலும் நடைபெறும். பொங்கல் நாள் வந்தால் நாடக மன்றத்தைச் சேர்ந்தவர்களுக்கு எல்லோருக்கும் ஒரே மாதிரி வேட்டி, சட்டையும் பெண்களுக்கு ஒரே மாதிரியான சேலை, ரவிக்கைத் துணியும் வழங்குவார்.

அதே உடைகள்தான் எங்களுக்கும். இங்கு வேலை செய்கிற டிரைவர்கள், வேலைக்காரர்கள், தோட்ட வேலை செய்வோர் என்று அனைவருக்கும் இது பொருந்தும். தவிர, அன்றைக்கு எல்லோருக்கும் பணம் கொடுப்பார். இவரது நாடகக் குழுவில் நடிகர் புத்தூர் நடராஜன் இருந்தார். இவரோடு பெரும்பாலான படங்களில் சண்டைக் காட்சிகளில் புத்தூர் நடராஜன் நடித்திருப்பதைப் பார்த்திருப்பீர்கள்.

இவருக்கும் என் அன்பு நாயகரிடம் உதவியாளராக இருந்த காலஞ்சென்ற திருப்பதிசாமிக்கும் வலிய அழைத்துப் பணம் கொடுத்து, “யார் புகாரியில் அதிகம் சாப்பிடுகிறீர்களோ அவருக்கு நூறு ரூபாய் பரிசு” என்று சொல்லி அனுப்புவார் என் நாயகர்.

அநேகமாகப் பல தடவைகள் புத்தூர் நடராஜன்தான் இந்தப் போட்டியில் ஜெயிப்பார். இந்த புத்தூர் நடராஜன், நாடக மன்றத்தினருக்கு பொங்கல் நாளில் கொடுத்த புத்தாடைகளை அணியாமல் பழைய உடைகளோடு வந்தார்.

இதை யாராவது பார்த்தால் “மற்றவர்களுக்கு எல்லாம் புதுத்துணி வாங்கிக் கொடுத்தவர் இவருக்கு மட்டும் ஓரவஞ்சனை செய்து விட்டாரே...” என்று நினைப்பார்களே” என என் அன்பு நாயகர் வருந்தினார். அதை நடராஜனை அழைத்தும் கேட்டுவிட்டார்.

புத்தூர் நடராஜன் தேம்பித் தேம்பி அழுதுகொண்டே. “உங்களை அவமதிக்கணும்னு எந்த ஜென்மத்திலேயும் நினைக்க மாட்டேன். நீங்க கொடுத்த புதுத்துணியை இங்கே எல்லோரும் கட்டிக்கிட்டு வாரோம். ஆனால் எங்க வீட்டிலே இருக்கிற மத்தவங்களுக்கு புதுத்துணி குழந்தைகள் கேட்கிற கேள்விகளுக்கு





என்ன பதில் சொல்வது? கம்பெனி சம்பளத்தில் எப்படியோ கௌரவமாக வாழறோம். இதுக்கு மேலே கம்பெனியில் பணம் கேட்க முடியுமா? அப்படி கம்பெனி கொடுத்தாலும் நாங்க எப்படி திருப்பிக் கொடுக்க முடியும்?” இந்த நிகழ்ச்சி என் அன்பு நாயகன் இதயத்தில் ஆழமாகத் தைத்தது.

“பெருவாரியான மக்கள் சமுதாயத்தின் வாழ்க்கை நிலையை எனக்குக் காட்டி விட்டார் நடராஜன்” என்று தனது நாடக மன்றத்தில் பணியாற்றிய தனது நண்பரின் கருத்தை நெஞ்சினில் நீண்ட காலம் நிலை நிறுத்தியவர் எனது அன்பு நாயகர்.

இப்படி யாரும் இனி இருக்க முடியாது. அவர்போல் இனி யாரும் வாழ்ந்து காட்ட முடியாது. சரித்திரம்கூட அவரிடத்தில் கொஞ்சம் நின்றுதான் தொடர்ந்து செல்லும். இது வெறும் வார்த்தைகள் இல்லை. உலகம் உணரப் போகும் உண்மை!

(05.03.1989)





# எம்.ஜி.ஆர் ''ஆயிரத்தில் ஒருவர்''

- பின்னிணைப்பு

1996ல் வெளிவந்த இந்தியா டுடே பெண்கள் மலரில் ராதா வெங்கடேசன் எடுத்த பேட்டி.

நான் நடிகையாக கொடி கட்டிப் பறந்த காலம் அது. அப்போது எம்.ஜி.ஆர் பிரபலமான ஹீரோ இல்லை. இருவரும் மருத நாட்டு இளவரசி படத்தில் இணைந்து நடித்தார்கள்.

ஏற்கனவே, மணமாகி இருந்த இருவரின் மனமும் இணைந்தன. இருவரும் புதிய வாழ்க்கையைத் தொடங்கினார்கள்.

எம்.ஜி.ஆர் பிரபலத்தின் உச்சியைத் தொட நடிப்புத் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்ட ஜானகி, கணவரின் நிழலாக இருப்பதில் மகிழ்ச்சி அடைந்தார்.



பிறகு, எம்.ஜி.ஆர் மறைந்தபின் அரசியல் பிரவேசம் செய்தார். கணவன், குடும்பம், வீடு என்ற குறுகிய வட்டத்துக்குள் இன்பம் கண்ட ஜானகிக்கு அரசியல் ஒத்துப் போகவில்லை என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

முன்னாள் முதல்வரின் மனைவியாக இருந்தாலும், தானே ஒரு மாதம் முதல்வர் அரியணையில் அமர்ந்து இருந்தாலும், ஜானகி இன்னும் தன் துணிகளைத்

தானேத் துவைத்துக் கொள்கிறார். தானே சமையல் செய்கிறார்.

எம்.ஜி.ஆர் என்ற சரித்திர நாயகனின் மனைவியாக, தமிழகத்தை நிரந்தரமாக தன் பிடியில் வைத்திருக்கும் மாயையின் நிழலாக இருந்த ஜானகி ராமச்சந்திரனுக்கு இன்று உடல்நலம் சரியில்லை.

எதைப் பற்றியும் பேச ஆர்வம் இல்லாதவருக்கு எம்.ஜி.ஆர் என்கிற மந்திரச் சொல்லால் முகத்தில் புன்னகை மலர்கிறது.

ராமாபுரத்தில் உள்ள தன் வீட்டுக்கும், மருத்துவமனைக்கும் (டயாலிசிஸ் செய்து கொள்வதற்காக) அல்லாடிக் கொண்டிருக்கும் இவர், 'எம்.ஜி.ஆர்' என்ற வார்த்தையைக் கேட்டவுடன் பூரித்துப் போகிறார். அவர் எப்படிப்பட்ட மனிதர் என்று கேட்டால், 'ஆயிரத்தில் ஒருவர்' என்று பளிச்சென்று பதில் சொல்கிறார்.

அவரைப் பற்றி நினைவு கூறுவதே அவருக்கு சுகானுபவம்.

"அவரை நான் திருமணம் செய்துக் கொண்டபோது, அவர் பெரிய நடிகராக வருவார் என்று தான் நான் நினைத்தேன். அவர் பெரிய அரசியல்வாதி ஆவார் என்றோ, முதலமைச்சராக வருவார் என்றோ, நான் கொஞ்சம் கூட நினைக்கவில்லை.

ஆனால், அவரை நான் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தேன். அவர் எந்தக் காரியத்தைச் செய்தாலும், சரியாகச் செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக இருந்தது.

அதனால், அவர் என்ன செய்தாலும் எனக்கு சம்மதம் தான். நடிப்பு தொழி லிலோ, அரசியலிலோ அவருக்கும், எனக்கும் எந்தக் கருத்து வேறுபாடும் ஏற்பட்டதே இல்லை.

அவருக்குப் பணிவிடை செய்து மகிழ்ச்சி அடையும் மனைவியாகத்தான் நான் இருந்தேன். அப்படித் தான் இருக்க விரும்பினேன்.

காலை 5 மணிக்கு முன் எழுந்துவிடுவார். நான் அவர் எழுந்து கொள்வதற்கு முன்னால் எழுந்து, குளித்துவிட்டு சமையல் வேலையை மேற்பார்வை செய்வேன்.

அவர் அன்றைக்கு உடுத்த வேண்டிய உடைகளை 'அயர்ன்' செய்து வைப்பேன். அவருக்கு எல்லாமே சுத்தமாக இருக்க வேண்டும். அவர் எழுந்து குளித்த பிறகு, தன் 'பூஜை' அறைக்குச் சென்று விடுவார்.

அந்த அறையில், நடுவில் ஒரு கண்ணாடி வைக்கப்பட்டிருக்கும்.

மேலே அவருடைய அம்மாவின் படம், மகாத்மா காந்தியின் படம், என்னுடைய அம்மா, அப்பாவின் படங்கள் தான் இருக்கும்.

தினசரி பூஜை அங்கு தான். நான் அவரோடு 40 வருடங்கள் வாழ்ந்ததே எனக்கு மறக்க முடியாத அனுபவம். அவருடைய எல்லாக் குணங்களுமே என்னைக் கவர்ந்தவை.

முக்கியமாக, இளமையில் அவர் வறுமையில் வாடியதால், அவர் யாரும் பசியோடு இருப்பதை விரும்ப மாட்டார். வீட்டுக்கு வருபவர்கள் என்ன அவசரத்தில் இருந்தாலும், அவர்கள் சாப்பிட்டால் தான் அவர்களைப் போக விடுவார்.

இவரும் வெளியில் அவசரமாகப் போக வேண்டி இருந்தாலும், 'சாப்பிட்டு வாங்க அப்புறம் நான் கிளம்புறேன்' என்று சொல்வார்.

நானும், 'நான் இன்னும் சாப்பிடலை' என்று யாரும் அவரிடம் சொல்லும்படி வைக்க மாட்டேன்.

அவரிடம் எனக்கு மிகவும் பிடித்த அம்சம் இன்னொன்று இருக்கிறது. அது தான் அவர் அனைவருக்கும் கொடுக்கும் மரியாதை.

யாராக இருந்தாலும், குழந்தையாக இருந்தாலும் கூட அவர் மதிப்போடு தான் நடத்துவார். அவருடைய பரந்த குணத்துக்கு ஒரு உதாரணம், ராமாவரத்தில் நடக்கும் பொங்கல் விழா.

அன்று எம்.ஜி.ஆர். முதல் தோட்டத்தில் வேலை செய்பவர்கள் வரை எல்லோரும் ஒரே மாதிரியான உடைகளை அணிவார்கள்.

அதே போல் பெண்களுக்கும் நான் அணியும் சேலையைப் போலவே சேலை தரப்படும். அவருக்கு கிராமப்புறக் கலைகள் என்றால் ரொம்ப இஷ்டம். அதனால் கரகாட்ட, ஒயிலாட்டக் கலைஞர்கள் பொங்கல் திருநாளன்று தோட்டத்திற்கு வரவழைக்கப்படுவார்கள்.

ராமாபுரமே கோலாகலமாக இருக்கும். அன்றைக்கு அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து சாப்பிடுவோம்.

தனக்குக் குழந்தை இல்லையே என்ற மனக்குறை அவருக்கு இல்லவே இல்லை. வீட்டிலிருந்த மற்ற குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடி மகிழ்வார். இந்த மகிழ்ச்சி தான் அவரது மனக்குறையைப் போக்கி இருக்க வேண்டும்.

அவருக்கு பிறந்தநாள் விழா கொண்டாடுவதில் நாட்டம் இருந்ததில்லை. குழந்தைகள் 'கேக் வெட்டி பிறந்தநாள் விழா' கொண்டாடுவதை அவர் விரும்பவே மாட்டார்.

பொதுவாக தமிழ் கலாச்சாரத்துக்கு விரோதமான எந்த அம்சமும் அவருக்குப் பிடிக்காது. ஒரு முறை நான் தற்செயலாக நெற்றியில் சந்தனம் இட்டுக் கொண்டேன்.

அதைப் பார்த்து அவருக்குக் கோபம் வந்து விட்டது. சந்தனத்திற்கு பதிலாக உடனே குங்குமம் இட்டுக் கொள்ளும்படி சத்தம் போட்டார்.

அவர் எவ்வளவு பிஸியாக இருந்தாலும், வீட்டிலுள்ள (என் தம்பி நாராயணனின்) குழந்தைகள் ஒழுக்கத்தோடு நடந்துக் கொள்கிறார்களா என்பதைக் கவனித்துக் கொண்டிருப்பார்.

குழந்தைகள் பெரியவர்களிடம் மரியாதையாகப் பழகுகிறார்களா என்பதை உன்னிப்பாகக் கவனிப்பார். குறிப்பாக வேலைக்காரர்களிடம் குழந்தைகள் அவமரியாதையாக நடந்து கொள்வதை அவர் பொறுத்துக் கொள்ளவே மாட்டார்.

கார் டிரைவர், தோட்டக்காரர் ஆகியவர்களை மாமா அல்லது அண்ணா என்று தான் அழைக்க வேண்டும் என்று குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்துப் பழக்கப்படுத்தி இருந்தார்.

குழந்தைகளைப் பகட்டாக வளர்க்கக் கூடாது என்பார். வீட்டில் அனைவரும் தரையில் பாயை விரித்துதான் படுத்துக்கொள்ள வேண்டும்.

அவரும் அப்படித்தான். அவர் உடல் நிலை மோசமானபோதுதான், அதுவும் டாக்டர்கள் வற்புறுத்தியதால் தான், அவர் கட்டிலில் படுக்கத் தொடங்கினார்.








அவரை மட்டுமல்ல, அவருடைய படங்களும் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவருடைய எல்லா படங்களும் நல்ல கருத்துக்கள் சொல்வதாக அமையும்.

அரசியலில் அவருக்கு எந்த டென்ஷன் ஏற்பட்டாலும், வீட்டில் அதைக்காட்டிக் கொள்ளவே மாட்டார். அவர் ‘எதையும் தாங்கும் இதயம் கொண்டவர்’ என்று தான் சொல்ல வேண்டும்.

அவர் ஆட்சி 1980ல் கலைக்கப்பட்டபோது கூட அவர் வீட்டில் எல்லோரிடமும் சந்தோஷமாகத்தான் பேசிக் கொண்டிருந்தார். குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தார்.

ஆட்சி பீடத்தில் இருந்தபோதும் சரி, ஆட்சி கலைக்கப்பட்ட பிறகும் சரி, அவர் ஒரே மாதிரி தான் இருந்தார்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் அவர் ஆயிரத்தில் ஒருவர்''.





இந்நூலின் பதிப்பாசிரியர் திரு.குமார் ராஜேந்திரன், அன்னை ஜானகி அம்மாவின் சொந்த சகோதரர் திரு.மணி என்கிற நாராயணன் - திருமதி.சாந்தி என்கிற சீதாதேவி தம்பதியின் பேரன். எம்.ஜி.ஆர். தன் உயிலை நிறைவேற்ற நியமித்த அவரது மருமகன் திரு.ராஜேந்திரன் லதா தம்பதியின் மகன்.

சட்டம், நூலகவியல், உளவியல், பொது நிர்வாகவியல் மற்றும் தொழில் நிர்வாகவியல் உள்ளிட்ட 7 துறைகளில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ள இவர், தமிழ்நாடு டாக்டர். அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்.

எம்.ஜி.ஆர் அவர்களைப்பற்றி திருமதி.ஜானகி அம்மையார் அவர்கள் எழுதியுள்ள இந்த நூலை, எம்.ஜி.ஆர்ஜானகி அவர்களின் பேரனான திரு.குமார் ராஜேந்திரன் பதிப்பாசிரியராக செம்மைப்படுத்தி பதிப்பித்துத் தந்திருக்கிறார்.

தாய்